வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1993 கார்த்திகை திங்கள் 17-ம் நாள் (2—12—1962) ஞாயிற்றுக்கிழமை றஜப் 4 | இதழ் 27

மில்க்வைற் நீலசோப்




பிரகாசமாய் சலவை செய்கிறது

மில்க்வைற் சோப் தொழிற்சாலை யாழ்ப்பாணம்

# பிரதமர்-சீனப் பிரதிநிதி நடுநிசி சந்திப்பு



பாரதப் பிரதமர் நேருஜிக்கு குழந்தைகள் என்ருல் உயிர். குழந்தைகளும் நேருஜியைச் சாச்சாஜி (மாமா) என்று அழைத்துஇன்புறுவது வழக்கம். தேசியப் பாதுகாப்பு நிதிக்கு உதவ வேண்டுமென்ற வேண்டுகோளை நேருஜி விடுத்ததும், அதற்கு நாட்டின் குழந்தைகளே முதல் காணிக்கை கொடுக்க முன்வந்தார்கள். தங்கள் சிறிய சேமிப்புகளைத் தங்கள் சாச்சாஜியிடம் கொடுத்து மகிழும் குழந்தைகளையும், மலர்ந்த முகத்துடன் பொருளைப் பெறும் சாச்சாஜியையும் படத்தில் காணலாம்.

## திடுக்கிடும் செய்தி

அஸ்ஸாம் மாகாணத்திற்குள் கொம்யூனிஸ்ட் சீனப் படைகள் புகுந்துவிடப் போகின்றன என்ற பீதி ஏற்பட்டவுடன் இந்தியக் கொம்யூனிஸ்டுகள் அஸ்ஸாம் பகுதியிலுள்ள தங்கள் கட்சி உறுப்பினர்களுக்கும், அனுதாபிகளுக்கும் அடையாளச் சீட்டுகள் வழங்கினராம். சீனத் துருப்புகள் அந்த அடையாளச்சீட்டு வைத்திருப்போரை துன்புறுத்த மாட்டார்களாம். இதே போன்று ஏனைய எல்லைப்புற பிரதேசத்திலுள்ள கொம்யூனிஸ்ட் அனுதாபிகளுக்கும் அடையாளச் சீட்டுகள் வழங்கப்பட்டனவாம்.

இந்தத் திடுக்கிடும் செய்தியை ஜெனரல் காரியப்பா வெளியிட்டுள்ளார்.

## ஆசிய-ஆபிரிக்க மகாநாடு சீனுவின் தூண்டுதலா?

அடுத்தவாரம் கொழும்பில் கூடவிருக்கும் ஆசிய ஆபிரிக்க மகாநாடு சீனுவின் தூண்டுதல் பேரிலேயே கூட்டப்படுவதாக அரசியல் வட்டாரங்களில் பேச்சு அடிபடுகிறது.

சீனப் பிரதிநிதி நடு நிசியில் ''டெம்பிள் ட்ரீஸ்'' மாளிகைக்குச் சென்று பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடன் அதிகாலைவரை பேச்சு வார்த்தை நடத்தினராம். இதற்குப் பின் இரண்டொரு தினங்களில் ஆசிய ஆபிரிக்க மகாநாடொன்றைக் கொழும்பில் நடத்த பிரதமர் ஆறு ஆசிய ஆபிரிக்க நாடுகளுக்கு அழைப்பு அனுப்பினுர். அழைப்பு அனுப்பி சில மணி நேரத்துள் போர் நிறுத்தத்தை சீன அரசாங்கம் அறிவித்தது.

திடீரென நள்ளிரவு 12 மணிக்கு சீனப் பிரதிநிதி பிரதம மந்திரியைச் சந்தித்துப் பேச விரும்புவதாக 'டெலிபோனில்' 'டெம்பிள் ட்ரீஸு'க்கு அறிவிக்கப்பட்டதென்றும், பின்னர் நடுநிசி 12-45 முதல் காலை 4-30 மணிவரை சீனப் பிரதிநிதியும் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் பேச்சு வார்த்தைகள் நடத்தினுர்களென்றும் அரசியல் வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது. இந்த மகா நாட்டுக்கு வேலையற்ற திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும் அழைக்கப்பட்டாராம்.

போர் நிறுத்தத்திற்குப் பின்னர் சீனர்களின் நிபந்தனையை ஏற்றுக்கொள்ளுமாறு நேருஜியைநிர்ப்பந்திப்பதற்காக நடுநிலைமை நாடுகளைக்கொண்ட ஓர் ஆசிய ஆபிரிக்க மகா நாட்டைக் கூட்டவேண்டுமென்று சீனு திட்டமிட்டது. அதன் விளைவுதான் கொழும்பில் அடுத்தவாரம் நடைபெறவிருக்கும் மகா நாடு என்று கூறப்படுகிறது.

### இலங்கை கருவியா?

இலங்கை கேந்திர ஸ்தானத்தில் அமைந்திருப்பதாலும், இலங்கை அரசாங்கத்

( 9-ம் பக்கம் பார்க்க)

யாழ். மாநகர சபை

## வேலை நிறுத்தம் நின்றது

### நகரபிதாவின் முயற்சி முற்றிலும் வெற்றி

யாழ்ப்பாணம் மாநகர சபையில் கடந்த சில தினங்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த ஒரு பகுதி நகர சுத்தித் தொழிலாளர் வேலைக்குத் திரும்பியுள்ளனர்.

மாநகர சபையின் சீர்திருத்தத்திலும், முன்னேற்றத்திலும் அக்கறை கொண்ட நகர பிதா டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் அவர்கள் தொழிலாளர் மீது பழிவாங்கும்சந்தர்ப்பம் இருந்தபோதும், நகரின் நன்மைகருதி வேலை நிறுத்தத்தைச் சமரசமாகத் தீர்த்துவைத்துள்ளார்.

கங்காணி திரு. தம்பிராசா வைக்குரு நகர் வீட்டுத் திட்டத்துக்கு இடமாற்றம் செய்வதென்றும், வேலை நிறுத்தக்காரர் மீது எவ்வித பழிவாங்கும் நடவடிக்கையும் எடுப்பதில்லையென்றும் நகரின் முன்னேற்றத்தை முன்னிட்டு நகர பிதா முடிவு செய்துள்ளார்.

சில விஷமிகளின் தூண்டுதலின் பேரிலேயே இவ்வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. முடிவில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு ஆபத்து ஏற்படக் கூடிய நிலைமையை உருவாக்கி விட்டது, விஷமிகளின் வீண் முயற்சி.



டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம்

நகரசபையைக் கலைப்பதில் தீவிரமாக ஈடுபட்டவர்களுக்கும், நகர சபையைக் கலைப்பதற்கு அறிக்கை தயாரிக்க அதிகாரி ஒருவரை அனுப்பியதில் முழு மூச்சாக உழைத்தவர்களுக்கும் இது ஒரு நல்ல பாடமாக அமைந்துள்ளது.

நகரின் நிர்வாகம் சீர்கெட்டுவிட்டது என்பதற்கு இவ்வேலை நிறுத்தத்தையே முக்கிய காரணமாகக் காட்டியிருந்தனர், இவ் விஷமிகள் கூட்டம்.

நகரபிதாவுக்கு உறுதுணையாக நின்ற உறுப்பினர்களுக்கு, குறிப்பாக திரு. சோ இராசரத்தினம் அவர்களுக்கு நகர மக்கள் மிகுந்த கடமைப் பாடுடையவர்களாவர்.

இந்திய பாதுகாப்பு

## நிதி அளித்தமைக்கு தூதுவரின் நன்றி

இந்திய தேசிய பாதுகாப்பு நிதிக்காக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டத்தில் சேகரிக்கப்பட்ட பணத்தை நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். தாங்களும் பணம் அனுப்பி வைத்த ஏனையவர்களும் இந்தியாவின்பால் எடுத்துக் கொண்ட நன்மதிப்பையிட்டு பெரிதும் மகிழ்ச்சியடைகிறேம்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சீன ஆக்கிரமிப்பு எதிர்ப்புக் கூட்டத்தின் போது சேகரிக்கப்பட்டு, இந்திய தூதுவருக்கு அனுப்பி வைக்கப்பட்ட பாதுகாப்பு நிதியைப் பெற்றுக் கொண்ட இந்திய தூதுவர், மேற்கண்ட கடிதத்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திற்கு அனுப்பிவைத்துள்ளார்.

"எங்களுக்கு அறிமுகம் இல்லாதவர்கள் பலர் இத்தொகையை உருவாக்கியுள்ளனர். அவர்களுக்கு நாங்கள் நன்றிக் கடன் பட்டுள்ளோம். எங்கள் நன்றி சகலருக்கும் உரித்தாகட்டும்"

(9-ம் பக்கம் பார்க்க)

**பேர்ஸ் டயறிகள் [PURSE DIARIES] 1963**

| | |
|---|---|
| இங்கிலிஷ் பேர்ஸ் டயறி (No. 5) (இரண்டு பக்கத்திற்கு ஒரு கிழமை) | 2-10 |
| இங்கிலிஷ் பேர்ஸ் டயறி (No. 4) (ஒரு பக்கத்திற்கு இரண்டு நாள்) | 2-60 |
| தமிழ் ஆங்கில பேர்ஸ் டயறி (No. 2) (ஒரு பக்கத்திற்கு இரண்டு நாள்) | 2-60 |
| தமிழ் ஆங்கில பேர்ஸ் டயறி (No. 1) (ஒரு பக்கத்திற்கு ஒரு நாள்) | 3-10 |
| பின்னல் பேர்ஸ் டயறி (Business) (ஒரு பக்கத்திற்கு ஒரு நாள்) | 3-85 |
| டெஸ்க் பிளாஸ்டிக் டயறி (பெரியது) (மூன்று பக்கத்திற்கு ஒரு கிழமை) | 2-95 |
| டேபிள் பிளாஸ்டிக் டயறி (பெரியது) (ஒரு பக்கத்திற்கு ஒரு நாள்) | 4-35 |
| புள்ஸ்காப் டயறி (கலிகோ பைண்ட்) (ஒரு பக்கத்திற்கு ஒரு நாள். வர்த்தகர்கள் கணக்குப் புத்தகமாகப் பாவிக்கக் கூடியது) | 13-50 |
| வலற் (Wallet) டயறி (2-50 பெறுமதியான வலற் பேர்ஸ் கொண்டது) | 4-85 |
| டேபிள் கலண்டர் (Table Calender) (பிளாஸ்டிக் ஸ்டான்டுடைய மேசைக் கலண்டர்) | 4-75 |

குறிப்பு : விரும்பும் டயறியின் விலையையும், டயறி ஒன்றுக்கு 35சதம் தபாற் செலவும் அனுப்பினுல் பார்சலில் அனுப்பப்படும்.

**மெய்கண்டான் அச்சியந்திரசாலை,**
161, செட்டியார் தெரு, கொழும்பு.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா மீது சீனம் படையெடுப்பதற்கு உண்மையான காரணம் என்ன?

## இது வெறும் எல்லைத் தகராரு அல்லது ஆசிய ஆக்கிரமிப்புக்கு முதற் படியா?

சீனம் அயல் நாடுகளாளாகிய பர்மா, நேபாளம் ஆகியவற்றுடன் இருந்த எல்லைப் பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலம் சிநேகப்பூர்வமான வழியில் தீர்த்துவைத்து விட்டு இந்தியாவுடன் இருக்கும் எல்லைத் தகராற்றை தீர்ப்பதற்கு படையெடுத்து பலாத்கார முறையைப் பின்பற்றியிருப்பது விளங்காத புதிராகவே இருக்கின்றது. விசித்திரமான நடவடிக்கையாகவும் இருக்கின்றது.

15-8-47ல் இந்தியா சுதந்திரம் பெற்ற நாள் முதல் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே தான் எல்லைத் தகராறுகள் இருந்து வந்தனவேயன்றி இந்தியாவுக்கும் ஏனைய அயல் நாடுகளுக்குமிடையே இத்தகைய பிரச்சினைகள் இருக்கவில்லை. கிழக்குப் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இருந்த எல்லைப் பிரச்சினைகள் பல சமரச வழியில் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

### திபேத் மீது படையெடுப்பு

1949ல் சீனவில் கொம்யூனிஸ்ட் அரசாங்கம் நிறுவப்பட்டு 'மக்கள் சீனம்' ஆகியது. 1950ல் செஞ்சீனப் படைகள் திபேத்தின் மீது படையெடுத்ததன் விளைவாக 23-5-51ல்சீன—திபேத் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்தியா, பிரிட்டன் உட்பட பல நாடுகள் திபேத்—சீனத்தின் ஆதிபத்தியத்துக்குட்பட்ட நாடு என்பதை அங்கீகரித்தன. 1959 மார்ச்- ஏப்ரலில் திபேத்தில் எழுந்த கலவரங்களை (தேசியக் கிளர்ச்சியை) அடக்குவதற்கு சீன படைகளை அனுப்பி நாட்டைத்தம் வசப்படுத்தியது. திபேத்தை ஆட்சி புரிந்த தலாய்லாமாவும் அவருடைய ஆதரவாளர்களும் இந்தியாவில் தஞ்சம் புகுந்தனர்.

திபேத் சீனத்தின் பகுதியானதன் விளைவாக இந்தியாவுக்கும் சீனத்திற்கும் இடையே எல்லைப் பிரச்சினை உருவாகி கடந்த மாதம் இந்திய — சீன எல்லைப் போராக மாறியிருக்கிறது.

### மக்மோஹன் கோடு

சீனத்திற்கும் திபேத்திற்கும் இடையே உள்ள எல்லை தான் மக்மோஹன் கோடு என்று அழைக்கப்படுகிறது.

இந்தப் பாரம்பரிய எல்லை தக்ளா, ஸங்லுங் மலைத் தொடர்கள் வழியே பும்லா வரை செல்கின்றது. இங்குள்ள உயர்ந்த மலைத் தொடர்களின் நீர்ப்பிரிவு மேடுகள் வழியாக இந்த எல்லை அமைந்திருக்கிறது. 1914ம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட மக்மோஹன் கோடு உடன்படிக்கை இந்தப் பாரம்பரிய எல்லையை ஒழுங்குமுறையாக்கி உறுதிப்படுத்தியது. இந்த எல்லை எட்டு மைல்களுக்கு ஒரு அங்குலம் என்ற அளவு திட்டப்படி வரையப்பட்ட தேசப் படங்களிலும் தெளிவாகக் காட்டப்பட்டது.

பர்மாவுக்கும் சீனத்திற்குமிடையே உள்ள எல்லைப் பிரச்சினை தீர்க்கப்பட்ட பொழுது மக்மோஹன் கோட்டு எல்லையை சீன அரசாங்கம் அங்கிகரித்திருக்கிறது. ஆனால் மிகப் பழைய எல்லையாகவும், கடந்த சுமார் 50 ஆண்டுகளாக சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட எல்லையாகவும், இருக்கும் மக்மோஹன் கோட்டை திபேத்தின் எல்லையாக சீனம் ஏற்க மறுப்பதேன்? இந்திய அரசாங்கத்தின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று கடந்த செப்டெம்பர் 8ல் இருந்த நிலைக்கு சீனப் படைகளை வாபஸ் செய்து சமரச பேச்சு வார்த்தை மூலம் சீனம் ஏன் இந்தப் பிரச்சினையைத்தீர்க்கத் தயங்குகின்றது?

இதனல், இந்தப் படையெடுப்பின் நோக்கம் எல்லைத் தகராறைத் தீர்த்து வைப்பதற்கு அன்று; சட்டப்படி இந்தியாவுக்கு உரிய சில பகுதிகளைச்சீனகைப்பற்றப் பார்க்கின்றது என்று நாம் கருத வேண்டியிருக்கிறது, அல்லது இந்தியாவையும் விழுங்கி, இலங்கை, பாகிஸ்தான், பர்மா, தாய்லந்து போன்ற அயல் நாடுகளையும்........?

### இவைதான் காரணம்

சீனப் படையெடுப்பின் நோக்கம் என்ன என்பது சரியாகத் தெரியாவிட்டாலும் அதற்குச் சில காரணங்களை நாம் யூகிக்க முடிகின்றது:—

**வ. மகாதேவன் பி. ஏ.**

(1) சீனவின்சனத்தொகை 72 கோடியாகியுள்ளது. ஆண்டு தோறும் ஒன்றரை அல்லது இரண்டு கோடி வீதம் இந்தச் சனத்தொகை ஏறிக்கொண்டு போகின்றது. சனத்தொகை அதிகரிப்பினல் ஏற்படும் இட நெருக்கடியைத் தீர்ப்பதற்கும், தேவையான உணவுப் பொருட்களை விளைவிப்பதற்கும்,ஏற்ற நிலங்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கு சீன அயல் பிரதேசங்களைக் கைப்பற்ற முயற்சிக்கின்றது. மேற்கு நோக்கி ருஷ்யாமீது படையெடுக்க வழியில்லாமல் (பலமில்லாமல்) இருப்பதால் தெற்கு நோக்கி சீன படை யெடுத்திருக்கின்றது.

(2) சீனத்தில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. உற்பத்திப்பெருக்கத் திட்டங்கள் எதிர்பார்த்த பலனைக் கொடுக்காததையிட்டு நாட்டிலேற்பட்டுள்ள அதிருப்தியை சீர் செய்வதற்காகவும்,நாட்டில் மீண்டும் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கும் சீனம் போர் தொடுக்க வேண்டி ஏற்பட்டிருக்கிறது. தென் கொறியா மீதோ அல்லது போர்மோஸா (தய்வான்) மீதோ படையெடுத்தால் ஐக்கிய அமெரிக்காவின் குறுக்கீட்டால் திடீரென உலக யுத்தமாக மூண்டு விடும் என்று அஞ்சி, நடுநிலைமைக் கொள்கையும், அஹிம்சையும் கடைப்பிடித்து வந்த, நேச உறவு பூண்டு ஒழுகிவந்த இந்தியாமீது எல்லைத் தகராற்றை ஒரு போலி நியாயமாகக் காட்டி சீனம் தாக்க முற்பட்டிருக்கிறது.

(3) தலாய் லாமா இந்தியாவில் சீன ஆட்சிக்கு எதிராகப் பிரசாரம் செய்வது அல்லது அறிக்கைகளைவெளியிடுவது சீன அரசாங்கத்தைப் புண் படுத்தியிருக்கலாம். கேரளத்தில் அமைக்கப்பட்ட கொம்யூனிஸ்ட் அரசாங்கத்தைக்கலைப்பதற்கு இந்திய மத்திய அரசாங்கம் எடுத்து வந்த நடவடிக்கைகளை சீன அரசாங்கம் வரவேற்றிருக்க மாட்டாது.

(4) இந்தியாவின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கு ருஷ்ய உதவி தாராளமாகக் கிடைக்கின்றது. அத்துடன் மேற்கு வல்லரசு நாடுகளின் உதவியுடன் இந்தியா பொருளாதாரத் துறையில் விரைவாக முன்னேற்றம் அடைந்து வருவதை சீனம் பார்த்துச் சகித்துக் கொள்ள முடியாமல் இந்தியாவின் பொருளாதாரத்தை சீர் குலைப்பதற்காகப் படை யெடுத்திருக்கிறது.

முன்பு திபேத்தின் ஆதிபத்தியத்திற் குட்பட்டிருந்த பூற்ரூன், சிக்கிம் ஆகிய நாடுகளையும் சீனம் தனது உடைமையாக்கப் பார்க்கிறது.

### ஆபத்தான சூழ்நிலை

இந்தியாவிலும் பார்க்கக் கூடுதலான இராணுவபலம் உள்ள சீன இந்தியாவை அடிபணிய வைத்து சில பகுதிகளை, அதுவும் உயர்ந்த மலைகளடங்கிய பயனற்ற பகுதிகளை, சீனம் கைப்பற்றுவது சாத்தியமாகலாம்.

இந்தப் படையெடுப்பினல் இந்திய அரசாங்கத்

(13-ம் பக்கம் பார்க்க)

### இந்தியாவும் — சீனவும்

| | | | |
|---|---|---|---|
| இந்தியா : | விஸ்தீரணம் | 12,61,305 | சதுரமைல் |
| | சனத்தொகை | 44,80,00,000 | (1962 மத்தியில்) |
| | ஜனதிபதி | | டாக்டர் எஸ். இராதாக் கிருஷ்ணன் |
| | பிரதம மந்திரி | | ஸ்ரீ ஜவஹர்லால் நேரு |
| சீனம் : | விஸ்தீரணம் | 37,50,000 | சதுரமைல் |
| | சனத்தொகை | 71,70,00,000 | (1962 மத்தியில்) |
| | ஜனதிபதி | | லியு-சயோ-ஷி |
| | பிரதம மந்திரி | | சூ-என்-லாய் |

# அரசாங்கம் தமிழ் மொழிக்கு சட்ட உரிமை வழங்க வேண்டும்

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தீர்மானம்

தமிழ் மொழிச் சட்டத்தின் படி தமிழ் மொழிக்கு இந்த நாட்டில் ஒரு நிலையான சட்டத்தை ஏற்படுத்தி மொழிக்குரிய உரிமையை வழங்குவதன் மூலம் மொழிப் பிரச்சினைக்கு அரசு முடிவு காண வேண்டும். இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் ஆதிவரலாற்றை முறையாக ஆராய தமிழ்ச்சங்கம் முயற்சி எடுக்கும். இவ்வாறு இரு தீர்மானங்கள் அண்மையில் கூடிய கொழும்புத் தமிழ்ச் சங்கச் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

தமிழ் பேசும் மக்கள் யாவரும் தமது வரலாற்றை நன்ருக அறிந்திருக்க வேண்டியது அவசியமாகிறது. இதற்கு உறுதுணையாக இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் வரலாற்றை முறையாக ஆராய்ந்தறிதல் அத்தியாவசியம். வரலாற்றினை முறையாக ஆராய்ந்து, முடிவுகளை ஓர் வெளியீடாகப் பிரசுரிக்க கொழும்புத் தமிழ்ச் சங்கம் தீவிர முயற்சி எடுக்கும்.

வரலாறு சம்பந்தமான நூல்களையும், கல்வெட்டுகளையும், பிரசாசனங்களையும் திரட்டும் முயற்சியில் தற்போது ஈடுபட்டிருக்கும் கொழும்புத் தமிழ்ச் சங்கம், வரலாற்று ஆசிரியர்களினதும், இத்துறையிலீடுபாடுடைய அறிஞர்களினதும் உதவியையும் ஆதரவையும் வேண்டி நிற்கிறது.


அத்தீர்மானம் மேலும் கூறுவதாவது:-

"தமிழ் மொழிச் சட்டத்தின்படி பிரமாணங்களை ஆக்கித் தமிழ் மொழிக்கு இந்த நாட்டில் சட்டமுறையான உரிமையை அளித்தற்கு இன்னும் அரசாங்கம் முயலாதிருப்பது வருந்தத்தக்கது. சென்ற ஆண்டிலே தமிழ் பேசும் மக்கள் நடத்திய சத்தியாக்கிரகத்தின் போது தாம் லண்டன் சென்று திரும்பியவுடன் தமிழ் மொழிப் பிரச்சினைக்குச் சுமுகமானதொரு தீர்வு காண்பதாகக்கூறிய பிரதம அமைச்சர் தமது கூற்றை நிறைவேற்ருமல் இருக்கிருர். தமிழ் மொழிப் பிரச்னைக்குத் தீர்வு காணுவதற்கு அறிக்கை சமர்ப்பிக்கப் பிரதமர் நியமித்த குழுக்கள் இரண்டும் தங்கள் அறிக்கைகளைச் சமர்ப்பித்துப் பல மாதங்களாகியும் அவற்றை வெளியிடாமலும் அவற்றை ஆய்ந்து எவ்வித நடவடிக்கையும் எடுக்காமலுமிருப்பது தமிழ் பேசும் மக்களுக்குப் பெரும் தீங்கு பயக்கிறது.

அரசாங்கம் தமிழ் பேசும் மக்களுக்கு அளித்த வாக்குறுதியைப் பொருட்படுத்தாமல், தமிழுக்கும் தமிழ் பேசும் மக்கள் தம் மொழி உரிமைக்கும் பாதகம் விளைவிக்கும்முறையிலே சிங்களம் மட்டுஞ் சட்டத்தைத் தீவிரமாக நடை முறைப்படுத்துவதும், தமிழ் பேசும் மக்களுக்குத் தாங்கொணுத்துன்பத்தையும் ஏமாற்றத்தையும் கொடுப்பதால் இன்னும் காலந் தாழ்த்தாமல் இந்நாட்டின் தேசிய மொழிகளிரண்டில் ஒன்ருன தமிழ் மொழிக்குச் சட்டமுறையான உரிமையினை நல்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடனே எடுக்குமாறு கொழும்புத் தமிழ்ச் சங்கம் பிரதம மந்திரியையும் அமைச்சரவையையும் கேட்டுக்கொள்ளுகிறது".

### சாம்பல் தீவில் முஸ்லிம்கட்கு வசதி

சாம்பல்தீவில் தேநீர்க் கடை ஒன்று நடாத்தி வரும் முஸ்லிம் வர்த்தகருக்கு முஸ்லிம் சமய ஆசாரப்படி வாழ வகை செய்யக் கூடிய முறையில் உதவிகளைச் செய்வதெனவும்,இவருக்கும்இனி மேல் வந்து குடியேறும் முஸ்லிம்கட்கும் சமய ஆசாரப்படி பிரேத அடக்கம் செய்ய ஓர் மயானத்தை ஒதுக்குவதெனவும், காணி கிடையாவிட்டால் இந்துக்களின் ஒரு ஏக்கர் மயானத்தில் ஒரு சிறு பகுதியை ஒதுக்குவதெனவும் சாம்பல் தீவு கிராமச் சங்கத்தின் மாதாந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருச்சேவின் குரலே வேதவாக்கு!

## கொம்யூனிஸ்டுகளின் கொள்கைபற்றி திரு. இராஜவரோதயம்

இலங்கையிலுள்ள கொம்யூனிஸ்டுக் கட்சியினர் தங்களுக்கு என்ற ஒரு கொள்கையில்லாமல், குருசேவ் என்ன சொல்லுவார் என்று எதிர் பார்த்து, அதற்கேற்றாற் போல் தாளம் போடுவார்கள். பல மைல்களுக்கு அப்பாலிருக்கும் கியூபாவை அமெரிக்கா தாக்குகிறது என்று ஒப்பாரி வைக்கும் பிற்போக்குவாதிகளான கொம்யூனிஸ்டு, சமசமாஜத் தோழர்களுக்கு அயல் நாடான இந்தியாவைச் சீனு தாக்குவது தெரியாமல் இருப்பது விந்தையாக இருக்கிறது.

இவ்வாறு திருமலைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ந. இ. இராஜவரோதயம் அவர்கள் திருமலை இந்திய நல்லெண்ண இயக்கத்தினர் சார்பில் நடைபெற்ற சீன ஆக்கிரமிப்புக் கண்டனக் கூட்டத்தில் தலைமை தாங்கிப் பேசுகையில் கூறினார்.



அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:- "கொம்யூனிஸ்டுக் கட்சியினர், ஐக்கிய தேசியக் கட்சியினரையும், தமிழரசுக் கட்சியினரையும் நாட்டின் பிற்போக்குச் சக்திகள் என்றும் கத்தோலிக்கருக்கு பந்தம்பிடிப்பவர்கள் என்றும் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் இந்தப் படுபிற்போக்குவாதிகளின் கொள்கையுடையவர்களான கொம்யூனிஸ்டுச் சீனு, பஞ்சசீலம் பேசிக் கொண்டு பாரதத்தை ஆக்கிரமிக்கிறது. இதைப் பார்த்

(13-ம் பக்கம் பார்க்க)

# அவளுக்காக...!

—அற்புதராசா—

வானமும் பார்த்தேன் வானில்
வலம்வந்த நிலவும் பார்த்தேன்
சேனைதான் பார்த்தேன் எந்தன்
சிந்தையில் நிகழும் போரை
மானென மருளும் கண்ணும்
மலர்முகம் ஒன்றும் வந்து
காணுமா? கண்டால் மண்ணில்
கனமழை பொழியும் அன்றோ?

அருகிலே சாய்ந்து நின்றும்
அன்பிலே சாய்ந்து நின்றும்
உருகியே இணைந்து நின்றும்
உணர்வினை மறந்து நின்றும்
இருளிலே மறைந்து நின்றும்
இனிமையில் புலம்பி நின்றும்
பரவிய அன்பு வெள்ளம்
பாயுமா......? வற்றிப் போமா?

கூடியே பிரிந்தோ மன்று
குறையொன்றும் இருக்க வில்லை
பாடியே விடை கொடுத்தாள்
பனிமலர்க் கை கொடுத்தாள்
தேடியே வருவேன் திங்கள்
தினமென்று சொல்லி வந்தேன்
ஆடிய மயிலை எந்தன்
ஆவியைக் கண்டேனில்லை.

அன்னையாள் கண்டித்தாளா?
அடித்தாளா? பட்டகாயம்
பொன்னனைய உறவினிற்கு
புதை குழி யாகிப் போச்சா?
சொன்னவாய் உறுதியெல்லாம்
சும்மாவா? விளையாட்டுக்கா?
என்னதான் நடந்திருக்கும்
எங்கவள் தொலைந்து போனாள்?

மாலையில் மலரும் வெள்ளை
மல்லிகை மலரே உன்னை
காலையில் பறித் தெடுத்து(க்)
கரத்திலே கொடுக்கும் போது
சேலையில் பிடித்திழுத்து
செய்திட்ட சேட்டையெல்லாம்
ஓலையில் எழுத மாட்டேன்
ஓடுநீ தூது சொல்லு

மறந்தவள் விட்டாள் என்றால்
மனமதைத் தாங்கிக் கொள்ளும்
பிறந்ததும் அவளுக்காக
பிழைத்ததும் அவளுக்காக
துறந்தனள் என்னை என்ற
துயர்தரும் சுவையில் வாழ்வேன்
இறந்திட மட்டும் நெஞ்சம்
இரங்கிடும் அவளுக்காக!




மு. பெ. ஏழுமலை, பெந்தோட்ட.

கே: இந்தியாவுக்கும், சீனவுக்கும் போர் நடக்கின்றதே, அதில் இந்தியா தோல்வியுற்றால் நமக்கு என்ன நடக்கும்?

ப: நாம் மீண்டும் ஓர் ஏகாதிபத்தியத்துக்கு அடிமையாகிவிடுவோம்.

வே. சண்முகராசா, உப்புவெளி.

கே: சீனர்-இந்தியருக்கிடை நடந்து வரும் போராட்டத்தில் சீனர் இந்தியரைத் தோற்கடித்து இந்தியாவைக் கைப்பற்றினால் இலங்கைக்குப் பேராபத்து ஏற்படக் கூடுமோ? இலங்கை மக்களின் நிலைமை என்ன?

ப: நிச்சயமாக ஏற்படும். இந்தியாவை ஆக்கிரமித்தால் அந்த ஆக்கிரமிப்பை நிலை நிறுத்த இலங்கையும் சீனர்கள் கையிலிருக்கவேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யத் தான் இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சி இருக்கிறதே!

ஜெகநிஸ்வரி, தலாத்தோய.

கே: ஓர் பெண் ஒரு ஆணையும், ஒரு ஆண் ஒரு பெண்ணையும் காதலிப்பது ஏன்?

ப: ஆணை ஆணும், பெண்ணைப் பெண்ணும் காதலிக்க முடியாததால்.

மு. காலித்தம்பி, பருத்தித்துறை.

கே: விழியோடு விழி பேசும் போது மொழிக்கு என்ன வேலை?

ப: விழி பேசி முடிந்த பின் மொழி தன் வேலையைத் தொடங்கும்.

கே: விரோதியை நேசிப்பதும், நண்பனை வெறுப்பதும் சிரமமா?

ப: நண்பனை வெறுப்பது சுலபம்-விரோதியை நேசிப்பது கடினம்.

கே: அழகிய பெண்களும் அழகற்றுத் தோன்றுவது எப்போது?

ப: அழகி என்ற அகந்தை ஏற்படும் போது.

கே: தவறுக்கும் பாவத்திற்கும் சம்பந்தம் உண்டா?

ப: தவறுக்கும் மனோ பாவத்திற்கும் சம்பந்தமுண்டு.

செல்வி ஜெயராணி, வேலாயுத பிள்ளை, பொறலஸ்லை.

கே: தங்கள் தாய்மொழியைக் கூற வெட்கமாக இருக்கின்றதா? இல்லாவிட்டால் ஏன் "மௌனம்?"

ப: மௌனம் உலகிலுள்ள சிறந்த மொழிகளிலொன்று "மௌனம் கலக நாஸ்தி—மௌனம் சர்வார்த்த சாதனம்".

சோ. ஸ்ரீதரன், திருநெல்வேலி.

கே: யுத்த காலத்திலும் சமாதானத்தைக் கைக்கொள்ளும் நேருவை யுத்த மந்திரிப் பதவியிலிருந்து விலக்கிவிட்டு அந்த இடத்தில் ராஜாஜியை வைத்தால் என்ன?

ப: ராஜாஜி இந்தியாவின் நடு நிலைமைக்கு முற்றுப் புள்ளி வைத்து விடுவாரே.

கே: பெண்கள் ஆண்களைப் பற்றியும், ஆண்கள் பெண்களைப் பற்றியும் கேள்விகள் கேட்கும் நோக்கம் என்ன?

ப: பால் உணர்ச்சிதான் காரணம்.

மு. [illegible], பருத்தித்துறை.

கே: வருங்காலம் பொதுவுடமைவாதிகளுக்கே என்று நான் நம்புகிறேன். உங்கள் அபிப்பிராயம் என்னமோ?

ப: உங்கள் ஆருடத்தை நீங்கள் நம்பினால் போதுமா? பிறரும் நம்ப வேண்டாமா?

க. சுப்பிரமணியம், காரைநகர்.

கே: 'எங்கள் உறவு இமயத்தைச் செறிவுடையது' என நேரு வந்த போது கூறிய சிறிமா இன்று நேருவுக்கு ஆபத்து நேர்ந்தவிடத்து, நெஞ்சம் கலங்காததேன்? இந்தப் பெண்மணியின் பேச்செல்லாம் இப்படித்தானா?

ப: ஆண்கள் மட்டும் என்னவாம்! குருஷேவ் ஒருநாள் நேருவைக் கட்டித் தழுவினவர் தானே!

பி. ஏ. இராசதுரை, மதுகம.

கே: கடந்த வாரம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற சம்பவம் உமக்கு என்னத்தை நினைவூட்டுகின்றது?

ப: யாழ்ப்பாணம் மா நகர சபையை நினைவூட்டுகிறது.

> திருவாளர்
> **குயுக்தியார்**
> மே/பா சுதந்திரன்
> தபால் பெட்டி இல. 1183
> கொழும்பு-12.

என். பி. சிவலிங்கம், தெம்மோதர.

கே: இந்தியாவில் நடக்கும் யுத்தத்திற்கு இந்தியாவில் சனத்தொகை குறைவாமே! இலங்கையில் இருக்கும் தமிழர்களை அங்கு யுத்தத்திற்கு எடுத்தாலென்ன?

ப: இந்தியாவின் சனத்தொகை 40 கோடி என்பதை மறந்துவிட்டீரா? அத்துடன், சனத் தொகை வருடம் சுமார் ஒன்றரை கோடி அதிகரிக்கிறது. ஆள் பலத்தில் குறைவில்லாத நாடு இந்தியா.

மணி, மாதகல்.

கே: பெண்கள் தங்கள் நெஞ்சகம் தெரியத் தக்கதாக ஏன் சட்டை அணிகிறார்கள்?

ப: இறக்குமதி கட்டுப்பாட்டால் ஏற்பட்ட துணிப் பஞ்சம் காரணமாயிருக்கலாம்.

"கிளிநொச்சிச் சிங்கம்", கிளிநொச்சி.

கே: சிங்கத்தை விடப் பயங்கரமான மிருகம் எது?

ப: கட்டித் தழுவி கழுத்தை அறுப்பவன்.

ஆனந்தராசா, மாதகல்.

சீனப் படைகளை விரட்ட பெண்கள் படை திரட்டினால் என்ன?

ப: செய்யலாம்-அஸாமிலே வீராங்கனைகள் மென் கரத்திலே துப்பாக்கி ஏந்திப் போர் முனையிலே நிற்கிறார்களே!

அ. குணபாலசிங்கம், மயிலிட்டி.

கே: சீன இந்தியப் பிரச்சினையில் இந்தியாவுக்கு இலங்கைத் தமிழ் மக்கள் என்ன ஆதரவு அளித்திருக்கின்றார்கள்?

ப: நிதி வாரி வழங்குகிறார்கள். சீனருடன் நேரடியாக யுத்தம் செய்ய நூற்றுக் கணக்கான தமிழ் வாலிபர்கள் முன் வந்திருக்கிறார்களே!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோடரிக்காம்பு

கொம்யூனிஸ்ட் சீனவின் கொள்கைகளை தமிழ் பேசும் மக்களுக்கு விளக்குவதற்காக இலங்கையைச் சேர்ந்த ஒரு தமிழர் திரு. கந்தசாமி நியமனம் பெற்றது தமிழ் கூறும் நல்லுலகத்துக்கே ஒரு பெரிய இழுக்கைத் தேடித் தருவதாகும். தமிழ் ஒலிபரப்பாளரை இந்தியாவிலிருந்து பொறுக்கி எடுக்காது இலங்கையிலிருந்து தேர்ந்தெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் என்னவென்பதையிட்டு பல தரப்பட்ட வதந்திகள் உலவுகின்றன.

இரண்டு வருடங்களுக்கு முன்னரே பீகிங் வானொலிக்கு தமிழ் ஒலிபரப்பாளர் ஒருவரை நியமிக்க முடிவெடுக்கப்பட்டதாம். இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராகச் சேர்ந்து தீவிரப் பணி புரியும் ஒருவருக்கே அப்பதவி கொடுபட வேண்டுமென்ற ஒரு நியதியும் இருந்ததென அம்மானுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இரண்டு வருடங்களுக்கு முன்னரே இப்பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டது எனினும், இப்போதுதான் நியமனம் கிடைத்திருக்கிறது. பீகிங் வானொலியிலிருந்து இந்தியாவுக்கு எதிராகத் தமிழில் ஒலிபரப்பை நிகழ்த்தவே தற்போது திடீர் நியமனம் திரு. கந்தசாமிக்குக் கிடைத்துள்ளது.

இலங்கையில் தற்போது நிலவும் பல கட்டுப்பாடுகளும், விதிகளும் திரு. கந்தசாமி இரண்டு வருட ஒப்பந்தத்தில் பீகிங் செல்லுவதற்காகத் தளர்த்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கையும் மாற்றப்பட்டுள்ளது போலும்.

# சந்தித்து வந்தவை

## காலைகண்டன்

இந்தியாவிலிருந்து ஒரு தமிழரை ஒலிபரப்பாளராக நியமிக்கும் பட்சத்தில், நிச்சயமாகத் தன் தாய் நாட்டை அவர் தூசிக்க மாட்டார்—தாயகத்தைப் பற்றி அவதூறு கூறவும் மாட்டார். ஆகவேதான் இலங்கைத் தமிழர் ஒருவரை நியமிக்க சீன அரசாங்கம் முடிவெடுத்திருக்கிறது. இரண்டு வருடங்களுக்கு முன்னரே சீனருக்கு இந்தியாவுடன் மூண்ட வேண்டுமென்ற ஆசையும் ஏற்பட்டிருக்க வேண்டும் எனவும் நம்புவதற்கு இடமிருக்கிறது.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் இந்திய நாட்டை தெய்வத்துக்குச் சமமாக மதிப்பவர்கள். இந்தியத் தலைவர்களைத் தம் தலைவர்களென மதிப்பவர்கள். இந்தியர்களுடன் பகைத்துக்கொள்ளக் கனவிலும் நினையாதவர்கள். இத்தகைய இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இதுவரை வாழ்ந்த திரு. கந்தசாமியும், கோடரிக்காம்பாக மாறிவிட்ட செயல் தமிழ் பேசும் இனத்துக்கே ஒரு தலைகுனிவாகும்

## வேலி மேயும் பயிர்!

சில மாதங்களாக அரசாங்கப் பாடசாலை ஒன்றில் பயிலும் மாணவர்கள் வேலை நிறுத்த ஆர்ப்பாட்டம் செய்து வந்தனர். இந்த ஆர்ப்பாட்டங்களுக்குரிய காரணம் வெளியில் வேறு விதமாகக் கொடுக்கப்பட்ட போதும், அந்தரங்கக் காரணம் வேறு இருப்பதாக அம்மானுக்குச் செய்தி கிடைத்துள்ளது. மந்திரி ஒருவர் இப்பாடசாலையை தன்னுடைய ஆளுகைக்குள் இதுவரை வைத்திருந்தார். அவர் இப் பாடசாலையை கல்வி இலாகாவுடன் இணைத்து விடாமலிருந்ததற்கான காரணங்கள் பல இருக்கின்றனவாம். அவற்றை இங்கு அலசுவது முறையாகாது.

மாணவர்கள் தங்கள் சங்கத் தீர்மானங்களையும், கோரிக்கைகளையும் வெளியிட்டபோது மந்திரியாரின் உள்ளாந்தரங்கத்தை வெளியிடாமலிருந்து விட்டது பெருந்தன்மைதான், என்ற போதும் 'வேலியே பயிரை மேயும்' செயல் வெறுக்கத் தக்கதே! பாடசாலையைத் தற்போது கல்வி இலாகா பொறுப்பேற்றமையினுல் தொடர்ந்து மாணவர்கள் பள்ளிக்கூடம் செல்கின்றனர்.

## வாலும் தலையும்

கொழும்பில் நடைபெறவுள்ள மாநாகர சபைத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் சில ஒரு தேர்தல் ஒப்பந்தம் செய்துள்ளன. இந்த ஒப்பந்தத்தையும் மீறி கொம்யூனிஸ்ட்கட்சி ஒரு புதுவகைத் தந்திரத்தைக் கையாளுகிறது என்று தெரிகிறது.

கொம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பல உறுப்பினர்கள் தங்கள் சுய உருவத்தை அனேகமாக வெளிக்காட்டுவதில்லை. கட்சி உறுப்பினர்கள் சிலர் இம்முறைத் தேர்தலில் சுயேச்சை வேடமிட்டுப் போட்டியிடுகின்றனராம். பாம்புக்கு வாலும் மீனுக்குத் தலையும் காட்டும் வகையில் அவர்கள் சந்தர்ப்பங்களுக்கும், சூழல் சுற்றுடல்களுக்கும் ஏற்றவகையில் தேர்தல் பிரசாரத்தில் இறங்கியிருக்கின்றனர் என்றும் அம்மானுக்குச் செய்தி கிடைத்துள்ளது.

தேர்தல் ஒப்பந்தத்தை வெளிப்படையாக மீறுவதாக வெளிக்காட்டாதிருக்க தங்கள் கட்சி அபேட்சகர்களைத் தேர்தலில் போட்டியிட வைத்துள்ளது கொம யூனிஸ்ட் கட்சி.

இந்திய சீன எல்லைப் பிரச்சினையினுல், சீனவுக்கு வால் பிடித்து அதனுல் 'பிறபோக்கு வாதிகள்' என்ற பட்டத்தைப் பெற்றுக் கொண்ட செங்கொடி தாசர்களுக்கு இம்முறை மாநகர சபைத் தேர்தல் நல்ல பாடம் புகட்டும் என்று பேசப்படுகிறது.

## சுதந்திரனுக்கு இடமில்லை

கல்முனைப் பட்டின சபையினரால் நடத்தப்படும் வாசிகசாலையில் 'சுதந்திரன்' இடம் பெறுவதில்லையாம். 'சுதந்திரன்' பத்திரிகையும் வாசிகசாலையில் இடம் பெற வேண்டுமென்று பலர் விண்ணப்பித்திருந்தனர். ஆனுல் பட்டினசபைக் காரியதரிசி இந்த விண்ணப்பங்களைக் குப்பைக் கூடைகளுக்குள் எறிந்து விடுகிருராம். போதுமான நிதி வசதி இல்லையென்றும் கூறப்படுகிறதாம். ஆனுல் அதே நேரத்தில், வேண்டாத, மக்களே தீண்டாத பல பத்திரிகைகளுக்கு ஏராளமான பொருள் விரயமாக்கப்படுகிறதாம்.

## புது மொழி மோகமோ?

மட்டக்களப்பு தபாற் கந்தோரில் டெலிபோன் 'எக்சேஞ்ஸ்' பகுதியில் வேலை பார்க்கும் ஓரிரு பெண்களின் செயலால், பொது மக்கள் திக்கு முக்காட வேண்டிய நிலை சமீபத்தில் உருவாகியுள்ளது.

டெலிபோன் மூலம் நாம் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் சிங்களத்திலேயே பதில் தரப்படுகிறது. தமிழில் பேசினுல், புரியாத சிங்களத்தில் பதில் வருகிறதே என்ருல், ஆங்கிலத்தில் பேசினுலும் அதே சிங்கள மூலம்தான் பதில் கிடைக்கி

(9-ம் பக்கம் பார்க்க)


பண்டிகைகளை இனிது கொண்டாட வேண்டியவை!!

மௌலானு

அச்சடி சீத்தைகளே!!



மனங்கவர் மங்காத பல நிறங்கள்!

மகிழ்விக்கும் மனேரம்மிய நவீன டிசைன்கள்!

நீடித்த சேவை அத்தனையும் கொண்ட மௌலானு அச்சடி சீத்தைகளை அணிந்து உயர்ச்சி மிகு கவாச்சி பெறுங்கள்!!

மௌலானு (சிலோன்) லிமிட்.,

கொழும்பு, மருதானை, கண்டி

—MYLADS/MOL


## வானெலியில் பேச அண்ணுவுக்கு அழைப்பு



அகில இந்தியா ரேடியோவுக்கு ஆகாசவாணி என்ற பெயர் சூட்டப்பட்டதை ஆட்சேபிக்கும் முகமாக தி. மு. க. தலைவர்கள் எவரும் வானெலி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதில்லை என முடிவு செய்திருந்தனர்.

ஆனுல் இன்று நாட்டில் சீனப்படையெடுப்பினுல்ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலையை உத்தேசித்து, வானெலியில் பேசுவதற்கு ஆட்சியினர் விடுத்த அழைப்பை அறிஞர் அண்ணு ஏற்றுக் கொண்டுள்ளார்.

'சீனப் படையெடுப்பினுல் ஏற்பட்டிருக்தும் நெருக்கடி நிலையில் நாட்டின் சக்திகளை ஒன்று திரட்ட தலைவர்களும் பிரமுகர்களும் பேசவேண்டுமென்று திட்டமிருக்கிறது.

நீங்கள் 19-12-62 இரவு 9-15க்கு ஆங்கிலத்தில் பேசவேண்டும். இந்த அழைப்பை அன்புடன் ஏற்றுக் கொண்டால் நன்றியுடையவனுக விருப்பேன்.'

இவ்வாறு வானெலி அதிகாரி அண்ணுவுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# கவிதைப் பூங்கா

## நீதி வெல்லும்

—''ஆரையூர் அமரன்''—

நீதிவெல்லும் நம்பு நீ
நிதியை உதவ முந்து நீ

காந்தி பிறந்த நாட்டினைக்
காக்கும் வடக்கு எல்லையைக்
கடந்த சீனப் படையினர்
கலங்கி ஓடிச் சென்றிட (நீதி வெல்லும்)

புத்தர் பிறந்த பூமியில்
போர் தொடுத்த சீனர்தாம்
புறங் கொடுத்து ஓடிடப்
பொருள் வழங்கக் கூடிடு (நீதி வெல்லும்)

அசோகன் என்ற மன்னனின்
ஆட்சி கண்ட மண்ணிலே
ஆசை கொண்ட சீனரை
அடித்து ஓட்ட உதவிடு (நீதி வெல்லும்)

அக்பர் என்ற வேந்தனின்
அறம் சிறந்த செயலினுல்
அமைதி கண்ட நிலத்தினை
ஆணும் பெண்ணும் காத்திட (நீதி வெல்லும்)

கீதை தந்த தரையதின்
கிழக்கில் சீனர் வந்தனர்
கிழவர் பாலர் யாவரும்
கிடைத்த நிதியை உதவுவீர் (நீதி வெல்லும்)

குறளில் நீதி காட்டிய
குடும்பம் வாழும் நாட்டிலே
கொள்ளைக் கூட்டம் போலவே
கொடிய சீனர் புகுந்தனர் (நீதி வெல்லும்)

கவிதை வேந்தன் பாரதி
காதல் கொண்ட பூமியை
கபட வேடச் சீனர்தான்
கவர எண்ணி வந்தனர் (நீதி வெல்லும்)

உலக நாடு பலவுமே
உதவ ஓடி வந்தன
உனது பங்கைத் தந்துமே
உதவி செய்ய வந்திடு (நீதி வெல்லும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைநாட்டு மறத்தமிழ்ப் பெருங்குடி மக்கள்

## மானத்துடன் வாழ ஒரே வழி

## 'வாழு, வாழவிடு' என முழங்கும் சமஷ்டிக் கட்சியின் தலைமையே

மலையகம் புகுந்துள்ள "தமிழரசைப்" பற்றி மலையக பிற்போக்கு இளைஞர்களில் சிலரும், முற்போக்கு எழுத்தாளர்களில் குறிப்பிட்ட ஒரு சிலரும் அவநம்பிக்கையும், இன வேறுபாட்டினையும் சுட்டிக்காட்டி இன்று உலவி வரும் சில "விபீஷண கும்பல்களை" தங்களது எண்ண வலிவுக்கு மேற்கோள் காட்டி வெளிப்படையாக அல்லாமல் மறைமுகமாகச் சொல்லியும், எழுதியும் வருகிறார்கள் என்பதை நாம் அறிவோம்.

நம்பிக்கையற்ற நிலையை விளக்கி, கடந்த கால நிகழ்ச்சிகளையும், குறைவு மனப்போக்கையும் புகுத்தியோ புகுத்தாமலோ எடுத்தியம்பி தங்கள் கருத்தை நிலைநாட்ட முற்படுவது தமிழினத்திற்கு செய்யப்படும், "அநீதிகளின் ஆரம்ப நுழை வாயில்", என்றே நாம் கருதுகிறோம்.

மாற்றுக் கருத்துக் கொண்ட எமதருமை நண்பர்களுக்கும், ஆதரவை நல்கும் தோட்டத்து தொழிலாளர் வர்க்கத்தினருக்கும் நாம் சொல்ல விழைவது, தமிழரசுக்கட்சி சொல்ல விரும்புவது, தமிழ் பேசும் இனம் அரசியல், பொருளாதாரம், சமுதாயம் இம்மூன்றையும்



ஏ. வி. முருகேசன்

செப்பனிட்டு தன்மான உணர்வுடன் தமிழினம் வீற்றிருக்க "சமஷ்டி" அரசியல் ஒன்று நிறுவப்படல் வேண்டும் என்பதே. சமஷ்டி என்பதற்கு பல்வேறு கருத்துக்களை கற்பனை மிக கொண்டு கருத்தை விடாது, "வாழு; வாழவிடு!" என்ற தத்துவ அடிப்

**ஏ. வி. முருகேசன்**

படையில் ஜனநாயக முறைப்படி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உன்னத கோட்பாட்டினை உன்னிப்பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

நிறையப்பெற்றுள்ள தமிழ்த் தலைவர்களைக் கொண்ட ஒரே ஒரு ஸ்தாபனம், தமிழரசு ஒன்றுதான் என்ற முடிவிற்கு வந்துவிட்டனர்.

மலையகத்தில் "தமிழரசுக் கட்சி" மலைநாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைகளைப்பெற்றுத் தந்து, பொருளாதார நிலையில் தங்களை நல்வழி நடாத்திச் செல்லத்தலைமையிழந்து இருக்கும் அவல நிலையை நீக்கி, பகுத்தறிவற்ற சமுதாய சாக்கடையிலே விழுந்து புழுவென நெளியும் சாதிக் கொடுமையினையும், மூட நம்பிக்கையிலே தினம் தினம் வாழ்வை அர்ப்பணித்து, வாழ வகையற்று வாடி, குன்றிய உடலும், ஒட்டியவயிறுமாகக்காட்சி தந்து மூட வாழ்வு வாழ்வதை முறியடித்து, பாட்டாளி பழங்குடி மக்களின் "பாமரர்" என்ற பட்டியலை மாற்றியமைத்து பழந்தமிழர் நிலைக்கு கொண்டுவர தமிழரசுக்கட்சியினரால்தான் முடியும் என்பதில் நம்மவர் மட்டுமல்ல, தமிழ் பேசும் மக்கள் அனைவருமே அசைக்க முடியாத நம்பிக்கையுடன் இருக்கின்றனர்.

மக்கள் முன் வைத்து இந்த இரு கொள்கையாலேயே வளர்த்து இன்று ஆட்சி பீடத்தில் இருந்தும் வரும் "கட்சி" தோட்டப் பகுதியில் தங்களது கிளைகளை அமைத்தது ஏன்? இந்தக் கட்சி இருக்கும் தோட்டத்தில் தமிழ்த் தலைவரைக் கொண்ட இலங்கைத்தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியில் நான்கு வருடங்களுக்கு முன்பு இருந்த சிங்கள அங்கத்தவர்கள் எங்கே? காரணம் என்ன? சிந்தித்துப் பாருங்கள்.

இன உணர்வையும், மொழி வெறியையும் அடிப்படையாக வைத்து, "இந்தியத் தமிழனை நாடு கடத்தி விடுவோம்", என்ற நடைபெறுத ஒரு சுலோகத்தைக் கூறி மக்களைக் கவர்ந்து நாட்டைக் கைப் பற்றிக் கொண்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும், தமிழையும், பண்பாட்டையும் தங்களது உயிர்க்கொள்கையாக வைத்து தமிழ் மக்களின் பேராதரவைப் பெற்று விட்ட தந்தை செல்வாவைத் தலைவராகக் கொண்ட தமிழரசுக் கட்சிக்குமுள்ள வேறுபாடு என்ன? ஒற்றுமைதான் என்ன? என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

எதிர்காலத்தில் தமிழினத்தையும், மொழியையும் பாதுகாக்க வல்ல நிலையான ஒரு கட்சி இன்று தமிழரசுக் கட்சி ஒன்றுதான் என்பதை மலைப் பகுதி மக்கள் உணர்ந்துள்ளனர். எனவே இவ் வெண்ணத்தை வலுவாக்கி நிலை நாட்டவே தமிழரசுக் கட்சியின் தொழிற்




இன்று இருந்தும் செயலற்றுக் கிடக்கும் தொழிற் சங்கங்களைப் போல, 'தொழில்' விடயத்தில் மட்டும் அரைகுறையாக கவனம்செலுத்தி அங்கத்துவர் பட்டியலை, சந்தாப்பணத்தின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் பெருக்கி, கொடியை உச்சியில் பறக்க விடுவதை மட்டும் மலை நாட்டுத் தமிழர்கள் விரும்பவில்லை.

மலைநாட்டு மறத்தமிழ்ப் பெருங்குடி மக்கள் கயல், வில், புலி சின்னங்களைக் கொண்ட கொடிகட்கு தலைவர்களாக இருந்த பழந் தமிழன் சரித்திரத்தை அறிந்து அந்த நிலைக்கு தங்களை வழி நடாத்த ஒரு தளபதியையும், கல்வி இல்லாத நிலையிலிருந்து மாறி புலவனை வாழ்த்தி மதிக்கும் அறிவாற்றலுக்கு உயர்ந்து, மூட நம்பிக்கைகளிற் மூழ்கி பிற சமுதாயம் கேலி மொழி பேசி பழிக்கும் இழி நிலையிலிருந்து விடுபட்டு தன்மான வீர தமிழ் உணர்வால் ஊக்குவித்து, தமிழனின் புகழை தரணிக்குப் பரப்ப வல்ல ஆற்றல் கொண்ட தலைவனையும் கொண்ட கட்சியைத் தேடுகிறார்கள். கடந்த முப்பது ஆண்டுகளாக விழிப்பற்ற நிலையில் இருந்த மலையக மக்கள் இந்தத் தலைமையைப் பெற முடியாமற் போய் விட்டது. ஆனால்......

இன்று விழிப்புற்ற தமிழினம் வீறுநடை போட ஆரம்பித்து விட்டதோடு; இத் தலைமை [illegible] நாவன்மையையும், தமிழ் உணர்வையும்

பௌத்தம் ஒன்றே இலங்கை வாழ் மக்களின் ஏகோபித்தமதமாக இருக்கவேண்டுமென்ற நப்பாசை கொண்டுள்ளதும், சர்வம் சிங்களமயம் என்ற அடிப்படையில் தனிச்சிங்களம் மட்டும் என்ற போதை தரும் மொழிப் பற்றையும்

சங்கம் நமக்கு இன்றியமையாததாகிறது.

பாட்டாளி பெருங்குடி வழி வந்த இளவல்களே! நமது இனம் வீழ்ந்து கிடந்தது போதும், எழுந்து விட்ட நாம், மொழியை மறுத்து உரிமையை மறுத்து, நாடற்

(9-ம் பக்கம் பார்க்க)

# மலையகத் தோழா!

—ஈழக்குமார்—

சுற்றிலும் துயர்கள் சூழ
செய்வது இன்ன தென்னும்
சற்றுமே தெளிவு இன்றி
சிந்திக்கும் தன்மை யற்று
பற்றியே கரையைச் சேர
போதிய துணிவும் இன்றி
நிற்கும்மலை நாட்டுத் தோழா!
நில்,இதை எண்ணு நெஞ்சில்!

★

உன்கையே இந்த நாட்டின்
உயர்வுக்கு முதலாம்; இதை
முன்னம்நீ எண்ணி உந்தன்
மனதில் பதித்துப் பிறர்
என்னதான் சொன்ன போதும்
'இதுஎன் உழைப்பா லான
பொன்னடு; இதனை விட்டுப்
போவேனே?' என்று கேள் நீ!

★

உணவுக்கே வாழ்வு என்று
உள்ளத்தை மறந்தாய்; சிறு
கணமேனும் வாழ்க்கை தன்னைக்
கருத்தினில் எண்ணு வண்ணம்
குணங்களை அளித்தாய்; கள்ளுக்
குடியனாய், அடிமை யாகிப்
பிணம்போல அலைகின் றாய்நீ
போதும்,அது; உணர்வு கொள்வாய்!

★

கூலியென் றுனக்குப் பிறர்
கொடுத்திட்ட பட்ட மதும்
வேலிபோல் அமைந்து கல்வி
விவேகத்தைப் பெறு வண்ணம்
மூலையில் உன்கு ழந்தை
முடங்கியே கிடக்கும் வண்ணம்
தானென அமைந்த(து) ததை
தகர்த்தெறி நீஇப் போது!

★

உன்திறம் தன்னை நீயும்
உணர்ந்திட வேண்டும்; வெட்டி
வன்பகை வளர்க்கும் கட்சி
வலையினில் வீழா வண்ணம்
'என்னினம் உழைப்போ' ரென்ற
எழிலுடை வர்க்க எண்ணம்
தன்னையே கொண்டு ழைப்பாய்
தவறுது வெற்றி கொள்வாய்!

★

பொறுமையில் சிறந்தாய் உன்னைப்
பூனையாய் எண்ணி விட்டார்.
இறுமையில் நலிந்து பிறர்
சிரிப்புக்கு இலக்கா யாகி
வெறுமையாய் உணர்வு இல்லா
வீண்பிண்ட மாகி விட்ட
சிறுமையை ஒழிக்க இன்றே
சிந்திநீ! சீறி எழு!

★

நம்பிக்கை வேண்டும்; கூடும்
நல்மனம் வேண்டும் நஞ்சு
அம்புதான் வந்துன் நெஞ்சை
ஆழமாய்ப் பிளந்திட் டாலும்
தெம்பினை கூட்டி எதிர்
சென்றிடு உறுதி கொண்டு!
வம்புக்கு வருவோர் தம்மை
வலுவிழந் தோடச் செய்நீ!




# ரிஷி
## அஜமாமிச லேகியம்

ஆட்டிறைச்சியின் சுத்தமான சத்துக்களோடு பல விலை உயர்ந்த மூலிகைகளையும் சேர்த்து தயாரிக்கப்பட்ட சிறந்த லேகியம். இதை பாவித்து வந்தால் தேக புஷ்டியும், வீரியமும், திடகாத்திரமும், கெம்பீர தோற்றமும் உண்டாகி சரீரத்தில் உள்ள சகல வியாதிகளையும் சூரியனைக் கண்ட பனிபோல மறைத்து விடும். ஆண், பெண் இருபாலரும் சாப்பிட உகந்தது. இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பத்தியமில்லை.

விலை 1 ருத்தல் ரூபா 35/00
" ½ " ரூபா 22/50

[தபாற் செலவு 95 சதம்]

ஆயுர்வேத டாக்டர்:

**T. H. மதுரநாயகம் வைத்தியராஜ்**

**ஞானசுந்தர வைத்தியசாலை,**

187, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழக்க நேரிடும்

## இறக்குமதிக் கட்டுப்பாட்டால் விளைந்துள்ள நிலைமை

நிதி நெருக்கடியைச் சமாளிக்க வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. இதனால் இங்குள்ள நூற்றுக்கணக்கான வியாபார நிலையங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. நத்தார் பண்டிகையைத் தொடர்ந்து, இந்த ஸ்தாபனங்களில் வேலை செய்யும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவர் எனத் தெரிகிறது.

இறக்குமதியாகும் பொருட்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் காரணமாக இலங்கையிலுள்ள ஏராளமான பெரிய வர்த்தக ஸ்தாபனங்கள் வியாபாரமின்றிக் கிடக்கின்றன- இவ் வியாபார ஸ்தாபனங்களில் கடமையாற்றும் நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் தங்கள் தொழில்களை இழக்கும் நிலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

கொழும்பிலுள்ள பிரபல வர்த்தக ஸ்தாபனங்கள் சில பலதொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டது. பொருட்கள் இறக்குமதிக் கட்டுப்பாடு தளர்த்தப்படாமல் வியாபர மந்தம் நீடிக்குமானல் தங்கள் வியாபார நிலையங்களையே மூடி விடுவதாகவும் பல வியாபார நிலையங்கள் அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளன.

வியாபார மந்தம் நிலவுவதனல் வேலையின்றி சும்மா வெறுமனே காலங் கடத்தும் தொழிலாளர்கள் பலருக்கும் வீண் சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கிறதாம். கொடுபடும் சம்பளத்துக்கேற்ற வருவாய் இல்லாதிருப்பதே இதற்குக் காரணம் எனச் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

டிசம்பர் கடைசியில் வரும் நத்தார் பண்டிகைக்கான வியாபாரம் முடிவடைந்ததும் இப்பேர்ப்பட்ட ஸ்தாபனங்களிலிருந்து ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப் படுவார்களென நம்பப்படுகிறது.

ஏற்கனவே இலட்சக் கணக்கானேர் இலங்கையில் வேலையின்றித் திண்டாடுகின்றனர். அதே வேளையில் தொழில் புரியும் பலருக்கும் தொழில்லாத நிலை ஏற்படுமானல், மேலும் வேலையற்ருேர் தொகை பெருகிக் கொண்டுபோவதைத்தடுக்க முடியாது.

### கல்-ஓயாவில் குடியேற்றம்

கல்-ஓயாவின் வலதுகரைப் பக்கத்தில் ஏறத்தாழ 450 குடும்பங்கள் குடியேறவிருக்கின்றன. பெரும்பாலும் நிந்தவூர், ஒலுவில், பாலமுனை, அட்டாளச்சேனை, அக்கரைப்பற்று முதலிய இடங்களிலிருந்தே தேர்ந்தெடுக்கப் படுவர் எனத் தெரிகிறது. இவ்விடங்களில் வசிப்போரில் பெரும்பான்மையினர் முஸ்லிம் மக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஆத்மயோக ஞான சபா

சென்னை மாசை யோக ஆன்மீக ஆச்சிரமத்தைதச் சேர்ந்த ஆத்ம யோக ஞான சபையின் இலங்கைக் கிளையின் முதலாவது பொதுக் கூட்டம் டிசம்பர் மாதம் 2-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலையில் கொழும்பு விவேகானந்தா மண்டபத்தில் நடைபெறுகிறது. இக் கூட்டத்திற்கு கௌரவ நீதியரசர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் தலைமை தாங்குகிறார்.

யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தா, பேராசிரியர் எஸ். ஆர். துரைஸ்வாமி சாஸ்திரி, திரு. கே. இராமச்சந்திரா, திரு. கே. இராஜலிங்கம், 'ஆத்மஜோதி' ஆசிரியர் திரு. என். முத்தையா ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவார்கள்.



இலங்கைக் கலைக்கழகம் நடத்திய நாடகப் போட்டியில் முதலாவது பரிசு பெற்ற மட்டக்களப்பு எழுத்தாளர் சங்கச் செயலாளரும், ஆரயம்பதியைச் சேர்ந்தவருமாகிய திரு. இரா. நாகலிங்கம் (அன்புமணி) அவர்களுக்கு. ஆரயம்பதி மக்களின் சார்பில் பொன்னடைபோர்த்தி கௌரவித்தார்கள். படத்தில் பண்டிதர் த. சந்திரசேகரம் அன்பு மணிக்கு பொன்னடை போர்த்துகிறார்.


## வேல் தைலம்
## மிகச் சிறந்த சஞ்சீவி

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக் கடி, தேள்கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்ருகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய மகா சஞ்சிவி.

**விலை ரூபா 1-25**

தபால் செலவு வேறு

தயாரிப்பாளர்கள்:

**S. P. S. ஜெயம் கம்பெனி,**

மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

**M. A. R. S. மனுவேல் நாடார் அன் கோ.,**

**34, செட்டியார் தெரு,**

கொழும்பு-11.


### தொண்டர்கள் தொகை பெருகுகிறது

இந்திய பாதுகாப்புப் படைக்கு இலங்கையிலிருந்தும் தொண்டர்களைச் சேகரித்து அனுப்ப தமிழரசுக் கட்சி முடிவு செய்ததைத் தொடர்ந்து தினசரி நூற்றுக் கணக்கான தொண்டர்கள் தங்கள் பெயர்களை தலைமை நிலையத்தில் பதிவு செய்த வண்ணமுள்ளனர். தொகுதிகளில் அமைக்கப்பட்ட தமிழரசுக் கட்சிக் கிளைகளிலும் தொண்டர்கள் பதியப் படுகிறார்கள்.

கிளைகளில் பதிவு செய்யும் தொண்டர்களுடைய பட்டியலை அவ்வப்போது கொழும்பு கொள்ளுப்பிட்டி, அல்பிரட் ஹவுஸ் கார்டன், 16ம் இலக்கத்திலுள்ள தலைமை நிலையத்துக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று, தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் ஒரு சுற்றுநிருபத்தை அனுப்பியுள்ளார்.

## சங்கப் பலகை

சங்கப்பலகையில் மதிப்புரை இடம் பெற விரும்புவோர், நூலில் இருபிரதிகள் அனுப்பி வைக்க வேண்டும்.

### பாலர் முரசு

ஆசிரியர்: நெ. சி. தெய்வசிகாமணி.

வெளியீடு: 152 லிங்க செட்டித்-தெரு, சென்னை-1.

விலை: 15 காசு.

பாலர் முரசு முதல் இதழ் கிடைக்கப் பெற்ருேம். தமிழ் மொழியில் தரமான பாலர் இதழ் இல்லாத குறையை ஓரளவு தீர்த்து வைக்கிறது.

சிந்தனைப் புதிர், சிறுவர் திரை, சிவாஜி கதைகள், சி. ஐ. டி. ஆகவேண்டுமா?, சிறு கதைகள் மற்றும் பல அம்சங்கள் இந்த இதழில் அடங்கி உள்ளன. உருவில் சற்று சிறியதாக இருந்தால் பாலர் மனதை மேலும் கவரும்.

### ஈழத்துச் சிதம்பரம்

ஆசிரியர்: சிவஸ்ரீ. ச. கணபதீஸ்வரக் குருக்கள்.

வெளியீடு. சுந்தரேசுவரர் தேவஸ்தானம், காரைநகர்.

விலை: ரூபா. 2-50.

ஈழத்துச் சிதம்பரமாகிய காரைநகர்ச் சிவன் கோவிலின் வரலாற்றை சுவையுடன் வழங்கியுள்ளார் ஆசிரியர்.

சைவ அன்பர்கள் தவருது படிக்க வேண்டிய நூல்களில் இதுவும் ஒன்று.

### இஸ்லாமிய கீதம்

ஆசிரியர்: ஜீ. ஏ. வி. முத்து,

வெளியீடு: கே. அப்துல் காதர்.

91, புதிய சோனகத் தெரு கொழும்பு—12.

விலை: சதம் 25.

இலங்கை வானெலியில் செல்வி ஜனுபா. ஏ. அஸிஸ் அவர்களால் பாடப் பெற்ற பாடல்களின் தொகுப்பே இந் நூல்.

சினிமாப் பாடல்களின் இசையமைப்புடன் இயற்றப்பட்டிருந்த போதும், சில பாடல்கள் நல்ல சந்த இன்பம் உடையனவாக உள்ளன.

### திருந்திய மனிதன்

ஆசிரியர்: தோப்பூர் பேதுருப்பிள்ளை.

வெளியீடு: ரேயல் அச்சகம், கண்டி.

திருந்திய மனிதன் நாடகச் சிறப்பு மலர் வரப் பெற்ருேம். ஆசிரியரின் கணவனு? கற்பா? என்னும் சிறு கதை, நாகரீகத்தின் பெயரால் பெண்மையை...என்ற கடிதக் கட்டுரை, தென்னந்தோப்பிற் தேனிலவு, கன்னிப் படைப்பு என்னும் கவிதைகள் மலருக்கு மணம் கொடுக்கின்றன.

### கலைவிழா மலர்

ஆசிரியர்: த. துரைசிங்கம்.

வெளியீடு: வலி-வடக்கு ச. ச. நிலையங்கள்.

வலி-வடக்கு சன சமூக நிலையங்களின் கலை விழாச் சிறப்பு மலர் வரப் பெற்ருேம். ஈழத்து முன்னணி எழுத்தாளருள் ஒருவரான நாவேந்தனின் 'தமிழில் நாடக இலக்கியத் தோற்றமும் வளர்ச்சியும்' என்னும் கட்டுரை மலருக்கு மணம் கொடுக்கிறது.

மலர் முழுவதும் கலை மணம் கமழுகிறது.

### கலைச் செல்வி

ஆசிரியர்கள்: சிற்பி—தமிழ்ச் செல்வன்.

வெளியீடு: பாலன் வெளியீடு, செட்டிகுளம்.

விலை: சதம் 30.

ஈழத்தின் தரமான ஒரே இலக்கியச் சஞ்சிகையான கலைச் செல்வியின் தீபாவளி மலர் வரப்பெற்ருேம். ஓவியர் கனகலிங்கத்தின் கவர்ச்சியான அட்டைப் படத்துடன் மொத்தம் 92 பக்கங்களைக் கொண்டு வெளியாகியுள்ளது.

மறைந்த மாபெரும் எழுத்தாளரான இலங்கையர் கோனைப் பற்றி மகளும், மனைவியும் தீட்டிய கட்டுரைகள் மனதை உருக்குவதாய் அமைந்துள்ளன. சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற எழுத்தாளர்களின் படங்கள் வெளியாகியுள்ளன.

மூன்று சிறு கதைகள், ஒரு கவிதை, ஒரு குட்டிக் கதை. முருகையனின் 'என்னைக் கவர்ந்த கவிதை', அண்மையில் நாடகப் போட்டியில் முதற்பரிசு பெற்ற அன்புமணியின் 'என்னை உருவாக்கியவர்கள்'. கா. சிவத்தம்பியின் முற்போக்கு இலக்கியம் என்னும் கட்டுரை முதலியன அடங்கியுள்ளன.

அனைவரும் வாசித்து மகிழ வேண்டிய மலராக அமைந்துள்ளது.

—சங்கர்.

### ஆசிரிய கலாசாலை மந்திரி சபை

கடந்த 29-10-62 திங்கட்கிழமை கொழும்புத்துறை அரசினர் ஆசிரிய கலாசாலையில் 1963ம் ஆண்டுக்குரிய மந்திரிசபை கலாசாலையின் அதிபர் தலைமையில் நடைபெற்றது. அதிபர் அவர்கள் ஆரம்ப உரையில் குறிப்பிடுகையில் இவ்வளவு காலமும் கலாசாலைப் பொறுப்பாளர்கள் என வணங்கப்பட்டோர் வருங் காலங்களில் அமைச்சர் அவை என அழைக்கப்படுபவர் எனக் கூறினர்.

கலாசாலையின் மேல் சபையில் அதிபரும், பேராசிரியர்களும் இடம் பெறுவர் எனவும், கீழ் சபையில் ஆசிரிய மாணவர்கள் இடம் பெறுவர் எனவும் அதிபர் கூறினர். பின்வருவோர் 1963ம் ஆண்டுக்குரிய அமைச்சர் அவைக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

பிரதம மந்திரி: திரு. எஸ். சந்தியாப்பிள்ளை, கல்வி மந்திரி: திரு. டி. அந்தோனிப்பிள்ளை (சபை முதல்வர்), தொழில் மந்திரி: திரு. க. குமாரசிங்கம், விவசாய மந்திரி: திரு. பொ. பாலநாதன், தபால், வானெலி, தகவல் மந்திரி: திரு. எம். எஸ். மரியதாஸ், விளையாட்டு மந்திரி: திரு. டபிள்யூ. விஜயரத்தினம், சுகாதார மந்திரி: திரு. ஆதர் அப்புஹாமி, சபை இலிகிதர்: திரு. க. நடேசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளக் கடத்தலில் சீன கொம்யூனிஸ்டுகள்

## கையும் மெய்யுமாக பிடிபட்டனர்

சீனக் கொம்யூனிஸ்டுகள் இப்பொழுது கள்ளக் கடத்தலிலும் ஈடுபட்டிருக்கிறார்களென்ற இரகசியம் அண்மையில் கொழும்பிலும் கல்கத்தாவிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கள்ளக் கடத்தலில் ஈடுபட்ட இரு கொம்யூனிஸ்டுகள் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டபோது இது அம்பலமாயிற்று.

கொம்யூனிஸ்டுகளின் சதியாலோசனை மகாநாடான ஆபிரிக்க ஆசிய ஒற்றுமை மகாநாட்டின் சீனக் கொம்யூனிஸ்ட் பிரதிநிதி ஒருவர் கொழும்பிலிருந்து 10,000 அமெரிக்க டாலர்களை (சுமார் ரூ. 50,000 மதிப்புள்ளவை) கடத்த முயன்றபோது கட்டுநாயக்கவிமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளிடம் சிக்கிக் கொண்டார்.

இந்த சீனனையும் அவனைச் சேர்ந்த சீனக் கொம்யூனிஸ்ட் கோஷ்டியையும் வழியனுப்ப இலங்கையிலுள்ள சீனத் தூதராலயத்தைச் சேர்ந்த அதிகாரிகள் விமான நிலையத்துக்கு வந்திருந்தார்கள். இத் தூது கோஷ்டியினர் வசமுள்ள பொருட்களைப் பற்றிய பட்டியலைச் சீனத் தூதராலய அதிகாரி ஒருவர் தான் முதலில் சுங்க அதிகாரிகளிடம் கொடுத்தார் என்றும் அறியப்படுகிறது. இந்தப் பட்டியலில் கடத்தப்பட்ட பணம் சம்பந்தமாக குறிப்பு இருக்கவில்லையாம்.

இது சம்பந்தமாக சுங்க இலாகாவும், திறைசேரியும் மேற்கொண்டு விசாரணை நடத்தி வருவதாகத் தெரிகிறது,

### கல்கத்தாவிலும் கடத்தல்...

கல்கத்தா துறைமுகத்துக்கு வந்து சேர்ந்த ஒரு கப்பலில் வேலை செய்யும் ஒரு சீனனிடமிருந்து 2595 அமெரிக்க டாலர்கள் கைப்பற்றப்பட்டு அவன் கைது செய்யப்பட்டதாகக் கல்கத்தா செய்தியொன்று கூறுகிறது. இந்தநபரிடம் கொம்யூனிஸ்ட் சீனாவின் பாஸ்போர்ட் ஒன்று இருந்ததாம்.

வெவ்வேறு நாடுகளிலுள்ள சீனர்களின் தொடர்புகளுடன் சீனக் கொம்யூனிஸ்டுகள் விரிவான முறையில் கள்ளக் கடத்தலில் ஈடுபடுகிறார்களா? என்பதைக் கண்டுபிடிக்க முயற்சிகள் செய்யப்படுகின்றன.

இலக்கியம்:

## கடாஅக் களிற்றின்மேற் கட்படாஅ!

— தேனீ —

தலைவியின் ஒவ்வொரு அங்க உறுப்பும் தலைவனின் சிந்தையைக் கலக்குகின்றன.

அவனுக்கு ஏற்படும் வருத்தமோ சொல்ல முடியாதது.

பருவக் காற்றில் அகப்பட்ட அவன் நெஞ்சம், பாவையின் பார்வையில் மயங்கி விடுகின்றது.

அவளின் கண் வீச்சில், அவன் வேலின் கூர்மையைக் காண்கின்றான்.

அவளுடைய விழிகள், அவளுடைய புருவங்கள் இவை இரண்டும் இணைந்து அவனுக்கு அதிக வருத்தத்தை அளித்தது போதாதென்று.........

இப்பொழுது............

திரையினூடாகக் காட்சி தந்து, அவனைத் திகைக்க வைத்து விடுகின்றன அவளது இளம் கொங்கைகள்.

மேலாடையின் மறைப்பின் பின்னால் இருந்தபடியே, அவனது இதயத்தை ஈர்த்து விடும் சக்தி வாய்ந்த அத்தமிழழகியின் தனங்கள் அவனுக்கு எதை நினைவூட்டுகின்றன தெரியுமா?

கொல்லும் தகைமை வாய்ந்த வெறியானையை!

அம் மார்பகங்களை மூடியுள்ள மேலாடையானது, அவனுக்கு எதை நினைவூட்டுகின்றது தெரியுமா?

அந்த வெறியானையின் கண்கள் மீது போட்டிருக்கும் முகமூடியை!

ஆமாம்! அவனுடைய காதலியின் தனங்கள் வெறி பிடித்தவை! அவனுடைய அணைப்புக்காகத் துடித்து நிற்பவை!

ஆகவேதான், அவற்றின் சக்தி முன்னால், மேலாடை என்ன செய்ய முடியும்?

வெறியானையின் கண்களை மறைக்கப் போட்ட முகமூடிதான்! வேறொன்றுமல்ல.

மேலாடை அவனை வருத்த முடியாது, உண்மைதான்.

ஆனால், மேலாடை மறைக்கும் அவளுடைய இளமுலைகள் அவனை வருத்தத்தானே செய்யும்?

ஆகவே, எந்தக் கோணத்தில் நின்று பார்த்தாலும், அவனுடைய காதலி, தமிழகத்துத் தலைவி, கற்பு நிறைச் செல்வி—அவனை வருத்தும் நோயாகவே தென்படுகிறாள்.

இதைத்தான் வள்ளுவன், தனது களவியற் தலைவன் மூலம், பின்வருமாறு கூறி வைத்துள்ளான்:

கடாஅக் களிற்றின்மேற் கட்படாஅ மாதர்
படாஅ முலைமேற் றுகில்.

கடிதக் கட்டுரை

# மழலை தந்த மொழி மறந்து மாற்றான் மொழியிற் பேசவா?

## நாம் அனைவரும் தமிழன்னையின் மக்கள் என்பதை உணர வேண்டும்

அன்புள்ள அக்காவுக்கு,

ஒன்றாகப் பிறந்து, ஒன்றாக வளர்ந்து, இன்று சூழ்நிலை காரணமாக அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பிரிந்து நாம் நிற்கிறோம். காரணம் நீங்கள் பெரிய இடத்தில் சேர்ந்து பெரிய வாழ்வு வாழ்கிறீர்கள். ஆனால் நம் இருவரையும் ஈன்றவள் ஒரு அன்னைதானே. அவளைத்தானே நாம் "அம்மா" என்று அன்புடன் அழைக்கிறோம். இன்னொருத்தியை எம் முன் நிறுத்தி இவளைத்தான் அம்மா என்று கூப்பிடு என்றால், அப்படி நாம் கூப்பிடுவோமா? மாட்டோம். ஏன்? நம்மால் அது முடியாதது. "திடீரென்று ஏன் இப்படி எழுதுகிறேன்" என்று யோசிப்பீர்கள். இந்த நிலையிற்தான் எம் இனத்தார் அனைவரும் இன்று இருக்கிறார்கள்.

பிறந்து தவழ்ந்து விளையாடிய போதெல்லாம் மழலை மொழிந்த மொழி, பருவம் வந்ததும் பள்ளிக்குச்சென்று படித்த மொழி, இப்போதும் நாம் பேசுகின்ற எமது மொழி—இனியமொழி—சங்கம் வளர்த்த மொழி-சரித்திரத்தோடு இணைந்தமொழி என்றெல்லாம் பேசப்படுகின்ற தமிழ் மொழி பேசும் இனம் இன்று இந்த நிலையிற் தான் இருக்கிறது.

அக்கா, நீங்களும் நானும் வெவ்வேறு இடங்களில் இருந்தாலும் நம் இருவருக்கும் அன்னை ஒருத்திதான். அது போன்று தான் நம் இனத்தவர் அனைவருக்கும் ஒருத்தி இருக்கிறாள். அவள் தான் நான் மேலே கூறினேன், அந்தத் தமிழ்த் தாய். அந்தத் தமிழ்த் தாய்தான் நம் அனைவருக்கும் தாய். அவள் வளர்த்த பிள்ளைகள் தான் நாம் எல்லோரும். அவளை விடுத்து இன்னொருத்தியை எம்முன் நிறுத்துகிறார்கள் ஆட்சியாளர்கள். இவளைத்தான் உங்கள் தாயாக்கப் போகிறோம், இவள்தான் இனிமேல் உங்களை வளர்க்கப் போகிறாள் என்கிறார்கள். "இவளை வணங்குங்கள் உங்களுக்கு உத்தியோகம் கிடைக்கும்; பணியுங்கள் பதவி உயர்வு கிடைக்கும்" என்று நம்மிடையே நப்பாசை காட்டி, பிரிவையும் புகட்டிக் கொடுப்பவர்களையும் உருவாக்குகிறார்கள். ஆனால்......?

ஈழ நாட்டின் இரு கண்களில் ஒன்றுக்கு வெண்ணையையும் மற்றொன்றுக்கு சுண்ணாம்பையும் தடவப் பார்க்கிறார்கள். இந்த நிலையில் நாம் என்ன செய்கிறோம்? தாய் மொழிப்பற்று சிறிதுகூட இல்லாமல், கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று வாழ்க்கை நடத்தி நம்மை நாமே அடிமைகளாக்கிக் கொண்டிருக்கிறோம்.

அக்கா! பிள்ளைகள் பிறந்து வளரும்போது தாயானவள் தனது பாலை மட்டுமா ஊட்டுகிறாள்? இல்லை, தனது மொழிப்பற்றையும், பண்பாடுகளையும் சேர்த்தே ஊட்டுகிறாள். ஆனால் இன்று என்ன நடக்கிறது? தம் மொழி மறந்து, தம் பண்பாடு மறந்து, அந்நியமோகத்துக்கடிமையாகி, நம் இனத்தின் அழிவுக்கு, மொழியின் அழிவுக்குக் காரணமாகிக் கொண்டிருக்கிறோம். இவற்றிற்கெல்லாம் காரணம் யார் தெரியுமா? நீங்களும், உங்களைப் போல அந்நிய மோகிகளான பல அக்காமார்களும் தான். இப்படிக் கூறும்போது உங்களுக்கெல்லாம் என்மீது கோபம் வரலாம். வரட்டும், தாராளமாக வரட்டும்! அப்போதாவது உணருவீர்களா என்று பார்ப்போம்.

அன்று நான் உங்களைப் பார்க்க வந்தபோது உங்கள் ஐந்து வயதுப் பையனிடம் ஆங்கிலத்தில கூறுகிறீர்கள் "அதோ பார் உன் மாமா வருகிறார்" என்று. ஏன் அவனிடம் தமிழ் மொழியில் சொன்னால் அவன் புரிந்து கொள்ள மாட்டானா? அல்லது உங்களாற் புரிய வைக்க முடியாதா? உங்களுக்கெல்லாம் "பெரிய இடம்' என்ற கர்வமும், 'பெரிய' மனிதர்களுடன் இருக்கிறோம் என்ற மமதையும் சேர்ந்திருக்கும் போது தமிழை எங்கே மதிக்கப்போகிறீர்கள். சாதாரண வேட்டி சட்டையுடன் நான் வருவதற்குக் கூடப் பொறுக்காதவர்களாயிற்றே நீங்கள்! இவற்றிற்கெல்லாம் நீங்கள் வெட்கப்பட வேண்டியதில்லை; நாங்கள் வெட்கப்பட வேண்டும். இப்படியாள ஒரு கூட்டம் எம் இனத்தவர்களிடையில் வந்து பிறந்திருக்கின்றனவே என்று! நாங்கள் வருந்தவேண்டும் இப்படியானவர்களாற்தான் நம் இனம் இன்னமும் அடிமைத் தளையில் இறுகிக் கொண்டிருக்கிறது என்று!

அக்கா! குழந்தைகள் எமது தமிழ் மொழியில் ஏசினாற்கூட தனிமையான இனிமை ஒன்று அதில் இருக்கும். அதனாற்தான் உங்களுக்கு மட்டுமல்ல, உங்களைப் போன்ற ஆயிரக்கணக்கான அக்காமார்களுக்குக்கூறுகின்றேன் தாய் மொழியாம் தமிழ் மொழியில் நம் குழந்தைகளுடன் பேசுங்கள், பழகுங்கள் என்று. இன்று உற்பத்தியாகும் ஒவ்வொரு தமிழ் மகனும் நாளைய தமிழ் சமூகத்துக்கு ஒவ்வொரு தூணாக நிற்பான்,

நீங்களும் நானும் ஒரே இனம். இரத்த பாசத்தினால் பிணைக்கப் பட்டவர்கள். ஆனால் எனக்கும் உங்களுக்குமிடையிற்தான் எத்தனை வேற்றுமைகள்? இப்படியான வேற்றுமைகள் எம் இனத்தவர்கள் எல்லோரிடத்திலிருப்பதும் விலகுமேயானால்,

(15-ம் பக்கம் பார்க்க)




பணக்காரன் முதல்



பாட்டாளி வரை

எல்லோரும் புகைப்பது

கமலா பீடி

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்,

தாமரை

நிர். 15, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

தொலைபேசி
3597—6522


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1962 டிசம்பர் மாதம் 2-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183

# கொழும்பு மகாநாடு

சீனு சுடுவதை நிறுத்தியுள்ளது. அடுத்து போரா? அமைதியா? இன்னும் நிச்சயமில்லை. படையைப் பெருக்குவதில் முனைந்துள்ளது பாரதம். "கண் திறந்து விட்டது. இனி பாரதம் அடங்காது" என்கிருர் பிரதமர் நேரு.

இந்நிலையில் கொழும்பில் ஒரு முக்கிய மகாநாடு கூடுகிறது. இலங்கைப் பிரதமர்தான் இதனைக் கூட்டுகிருர். ஐக்கிய அரபுக் குடியரசு, கானு, பர்மா, கம்போடியா, இந்தோனேஷியா, இலங்கை ஆகிய நாடுகள் இதில் கலந்து கொள்ளும்.

இம் மகாநாடு ஆக்கிரமிப்பை எதிர்க்குமா? ஆதரிக்குமா? இரண்டுக்குமிடையே ஒரு நடு வழியைக் கண்டு பிடிக்குமா? இன்றேல் சமரசத்துக்கு மாற்றுத் திட்டமொன்றைச் சமர்ப்பிக்குமா? சமர்ப்பித்தாலும் அதனை இந்தியாவும், சீனுவும் ஏற்றுக்கொள்ள வேண்டுமே!

சமரச முயற்சிகளை வரவேற்கின்ருேம். மோதுதல் தவிர்க்கப்பட வேண்டும். யுத்தம் எந்தப் பிரச்னையையும் தீர்க்காது. சமாதான சக வாழ்வே தலை சிறந்தது. "யுத்தம் ஒழிக! சமாதானம் ஓங்குக!" என்று கோஷிக்க நாமும் தயார். அதற்கு இம் மகாநாடு வழி வகுக்குமா?

பாரதம் என்றும் சமாதானம் விரும்பும் நாடு. அதற்கு ஆக்கிரமிப்பு எண்ணமே கிடையாது. பஞ்சசீலத்தில் நம்பிக்கை கொண்டவர் பாரதப் பிரதமர். நயவஞ்சக எண்ணங் கொண்டவரல்ல. கூடிக் குலாவிக் கழுத்தறுக்கும் கொம்யூனிஸ்ட் கொள்கையும் அவரிடம் கிடையாது. சீனன் முதுகில் குத்தும்வரை சமாதான கனவுதானே கண்டு கொண்டிருந்தார்.

ஆக்கிரமிப்பு செய்த நாடே இன்று போரை நிறுத்தியுள்ளது. 'இது கொம்யூனிஸ்டு உபாயம்—ஏமாறமாட்டோம்' என்கிறது பாரதம். 1959 நவம்பர் 7-ந் திகதி நிலைக்குப் பின்வாங்குவதாகத் தெரிவித்துள்ளது சீனு. இது ஒரு கண் துடைப்பு. அப்படி பின் வாங்கினுலும் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் சுமார் 14,900 சதுர மைல் சீனர்களின் காலடியிலேயே கிடக்கும்.

ஆயுதப் போரை நிறுத்திய சீனு இராஜதந்திரப் போரைத் தொடங்கியுள்ளது. சீனத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளுமாறு இந்தியாவை நிர்ப்பந்தித்தல்—அதற்கு நடுநிலைமை நாடுகளைப் பயன்படுத்தல் ஆகியவை சீனுவின் உபாயமாகும்.

இதற்காக 24 ஆசிய ஆபிரிக்க நாடுகளுக்கு நீண்ட கடிதங்களை அனுப்பினுர் சீனப் பிரதமர். சுகர்னே, நஸார், சிறிமாவோ ஆகியோருக்கு விசேட நிருபங்கள் விடுத்தார். தனது தூதர்களையும் பயன்படுத்தினுர். தனது மந்திரி, தந்திரிகளையும் அனுப்பி வைத்தார். ஒரு பிரசாரப் போரையே ஆரம்பித்துவிட்டார்.

சகாக்களைக் கொண்டு நெருக்கினுல் நேரு விட்டுக் கொடுப்பார், இந்திய பிரதேசங்களை விழுங்கி விடலாம் என்பது இக்கொம்யூனிஸ்ட் பிரதமரின் திட்டம்.

பாகிஸ்தானையும் இந்தியாவையும் மோதவிடுவது, பாகிஸ்தான்—மேற்கு நாடுகளிடையே பகைமை வளர்ப்பது சீனுவின் மற்ருேர் உபாயம். பாகிஸ்தானைத் தன் வலையில் சிக்க வைக்கலாம்—அயூப்கான் மறுத்தால் அவரைக் கவிழ்த்துவிடலாம் என்ற நம்பிக்கை சீனுவுக்கு உண்டு.

நாஸர் நடுநிலைமை வாதிதான். அவருடைய இதயமோ இந்தியா சார்புடையது என்பது சீனுவின் தீர்ப்பு. சுகர்ணு சீனுவின் அனுதாபி என்ற எண்ணம் என்றும் சீனுவுக்கு உண்டு. திருமதி சிறிமாவோவும் தன் பக்கமே என்று கருதுகிருராம் சீனப் பிரதமர். இலங்கைக் கொம்யூனிஸ்டுகளின் நெருக்குதல், சீனத் தூதராலயத்தின் தீவிர நடவடிக்கைகள், வர்த்தக உடன்பாடுகள் என்பவை இலங்கையைத் தடம் புரளச் செய்துவிட்டன. இலங்கை ஆட்சியாளரின் அனுதாபம் சீனுவின் பக்கமே என்று மக்களும் சந்தேகிக்கின்றனர்.

இலங்கைப் பிரதமர் கூட்டும் மகாநாடும் சீன உபாயங்களிலொன்ரும். போர் நிறுத்தச் செய்தி வெளியிடும் போதே இம்மகா நாட்டுக்கும் வழிகோலப்பட்டது. சீனத் தூண்டுதலே மகா நாடு கூட்டக் காரணம் என்று ஒரு செய்தி கூறுகிறது. இதனை நேருவும் சந்தேகிக்கிருர் என்பதை டில்லிச் செய்திகளிலிருந்து ஊகிக்கலாம். மகா நாடு கூடுவதன் நோக்கத்தையே அவர் சந்தேகிக்கிருராம். லோக சபையில் அவரது பேச்சு அதனைச் சூசகமாக இடித்துக் காட்டுகிறது. நேரு உடனடியாக எதிர் நடவடிக்கையும் எடுத்துள்ளார். இந்திய இராஜதந்திரிகளை ஆசிய ஆபிரிக்க நாடுகளுக்கு அனுப்பி வைத்தார். இலங்கை சீனுவின் கைக் கருவியாகிவிடக் கூடாதென்பது இந்தியாவின் கவலை. அனுபவம் முதிர்ந்த இராஜ தந்திரிகள் இலங்கை அதிகார பீடத்தில் இல்லை. இது ஒரு பெருங்குறை.

இம்மகா நாட்டில் நாஸரும் கலந்து கொள்ள வேண்டும், இந்திய—சீனத் தகராறு தீர வழிகாட்ட வேண்டும் என்பதே எமது பேரவா.

சமாதான முயற்சியின் பேரால் இலங்கை, இந்தியாவின் நலன்களுக்கு மாருக நடந்துவிடக் கூடாதே என்றுதான் கவலைப்படுகின்ருேம். அதனுல் எதிர்காலத்தில் இரு நாடுகளிடையே தீராத பகை ஏற்படலாமென்றும் எச்சரிக்கின்ருேம்.

# மீன்பிடி வள்ளத்தை தாக்கியதேன்?

## வல்வெட்டித்துறை சர்பவம் பற்றி பிரதமருக்கு செல்வா கடிதம்

வல்வெட்டித்துறைக் கடலில் மீன் பிடிக்கச் சென்ற வள்ளத்தின்மீது கடற்படையினர் துப்பாக்கியால் சுட்டனர். அதனுல் இருவர் படுகாயமுற்றனர். எவ்வித காரணமுமின்றியே இந் நிகழ்ச்சி நடை பெற்றுள்ளது. இவ்வித சம்பவங்கள் எதுவும் மேற்கொண்டு நடவாதிருக்கவும், காயமடைந்தவர்களுக்கும், பிடிபட்ட மீன் கெட்டுப் போனமையினுல் ஏற்பட்ட நட்டத்துக்கும், நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென திரு.எஸ்.ஜே. வி. செல்வநாயகம் பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

சில வாரங்களுக்குமுன், வல்வெட்டித்துறையில் மீன் பிடிக்கச் சென்றவர்களின் வள்ளத்தின்மீது கடற்படையினர் சுட்டதன் விளைவாக இரண்டு பேர் காயமுற்றது வாசகர்கள் அறிந்ததே.

இவ் விவகாரம் பற்றித் தமிழரசுத் தந்தை திரு.எஸ். ஜே. வி. செல்வநாயகம் பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

'நிரந்தரக் காரியதரிசியின் அறிக்கையில் உண்மைக்குப் புறம்பான அம்சங்களையும் காண முடிகின்றது. குறிப்பிடப்பட்ட சம்பவம் 7-10-62 அன்று அதிகாலையில் நடைபெறவில்லை; ஏறத்தாழ காலை 5-30 மணியளவில் நடைபெற்றது. ஒருவரல்ல; இருவர் காயத்துக்குள்ளாயினர். அவர்களில் ஒருவராவது காங்கேசன்துறை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்படவில்லை; ஒருவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கும், மற்றவர் பருத்தித்துறை ஆஸ்பத்திரிக்கும் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த அறிக்கையில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், கடற்படையினரின் கப்பலைக் கண்டு வள்ளத்தினர் ஓட முயற்சி செய்ததாகக் குறிப்பிடவில்லையென்பதேயாகும்.

எவ்வித எச்சரிக்கையுமின்றி, 15 அல்லது 20 யார் தூரத்தில் வைத்து வள்ளம் சுடப்பட்டது. மனித உயிருக்கு எவ்வித மதிப்புமின்றி, தங்களின் செயலுக்கு எவ்விதமான நியாயமான காரணமுமின்றியே கடற்படையினர் வள்ளத்தின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர் என்பது வெளிப்படை.

ஆகவே, (1) இவ்வித சம்பவங்கள் திரும்பவும் நடைபெருதிருக்க, எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன (2) காயமடைந்த இருவருக்கும் என்ன நஷ்ட ஈடு கொடுக்க எண்ணப்பட்டுள்ளது (3) பொலீஸ் நடவடிக்கையை எதிர்பார்த்து வள்ளத்திலேயே விடப்பட்ட ஏறத்தாழ 1300 இரு. மீன் கெட்டுப் போனதாலும், வள்ளத்துக்கு ஏற்பட்ட நஷ்டத்தினுலும், வள்ளச் சொந்தக்காரருக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்கு எவ்விதத்தில் ஈடு செய்ய எண்ணப்பட்டுள்ளது (4) மேலே குறிப்பிட்ட சந்தர்ப்ப சூழ்நிலையில் சுட்டதன் மூலம், தமது நியாயமான அதிகாரத்தை மீறிய கடற்படையியினர் மீது என்ன ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள யோசிக்கப்பட்டுள்ளது- என்பன பற்றி அறியத் தந்தீர்களானுல், நான் நன்றியுடையவனுக இருப்பேன்.'

## ஆசிரியர்கள் மாநாடு

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கப் பிரதிநிதிகள் இடமாற்றம் சம்பந்தமாக கடந்த வாரம் தமிழரசுப் பாராளுமன்றப் பிரதிநிதிகளுடன் நடாத்திய மாநாட்டை எதிர்வரும் 1ம், 2ம் தேதி சனி, ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் தமிழரசுக் கட்சிக் காரியாலயத்தில் தொடர்ந்து நடத்தவிருக்கிருர்கள்.

இந்த மாநாட்டில் அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழ் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொள்வார்கள்.

வடபிரதேச தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன், உடுப்பிட்டிப் பிரதிநிதி திரு. மு. சிவசிதம்பரமும் கலந்து கொள்வார் என்று தெரிகிறது.

# உங்கள் சேவை பலருக்கும் பயன்படட்டும்

## தமிழாசிரியர்கள் மத்தியில் தமிழரசுத் தந்தை

வடபகுதி ஆசிரியர்கள் தொடர்ந்து வடபகுதியிலேயே காலம் முழுவதும் சேவை செய்ய வேண்டுமென எண்ணக் கூடாது. நாடு பூராவும் நீங்கள் சேவை செய்ய ஆயத்தமாயிருக்க வேண்டும். உங்களது மகத்தான சேவைகளை வட மாகாணத்திற்கு வெளியிலுள்ள தமிழ் பேசும் மாணவர்களும் பெறுவதற்கு சந்தர்ப்பமளிக்க வேண்டும்.

மேற்கண்டவாறு தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் அகில இலங்கைத் தமிழாசிரிய சங்கம், வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளிடம் கூறினுர்.

வட பகுதியிலிருந்து 1-1-63 முதல் நூற்றுக் கணக்கான ஆசிரியர்கள் இடமாற்றம் பெறவிருப்பது பற்றி திரு. கு. வி. செல்வத்துரை தலைமையில், தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகம், வி. என். நவரத்தினம், மு. பாலசுந்தரம், க. துரைரத்தினம், வி. தருமலிங்கம், ஏ. சிவசுந்தரம் ஆகியோரைச் சந்தித்து முறையிட்டனர்.

ஆசிரியர்களின் இடமாற்ற விடயத்தில் இடமாற்றச் சபை மிகவும் மோசமான முறையில் நடந்து கொள்வதாகவும், ஒருவித திட்டமுமின்றி மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாகவும், அரசினருடைமையாக்கப்பட்ட பாடசாலைகளுக்கிடையே தான் மாற்றம் நடைபெற வேண்டுமென்றும், அரசினர் பாடசாலை ஆசிரியர்கள் இங்குள்ள அரசினருடைமையாக்கப்பட்ட பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படுவது முற்ருக நிறுத்தப்பட வேண்டுமென்றும் எடுத்துரைத்தனர்.

முடிவில் இது சம்பந்தமாகப் பாராளுமன்ற உறுப்பினர்களும், ஆசிரிய சங்கப் பிரதிநிதிகளும் கூடி ஒரு திட்டமொன்றை உருவாக்கினர். இத்திட்டத்தை ஆசிரிய சங்கப் பிரதிநிதிகள் இடமாற்றச் சபையிடம் சமர்ப்பிக்கும் பட்சத்தில், அதனை அமுல் நடத்துமாறு தாங்கள் வற்புறுத்துவதாக மாநாட்டில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்குறுதியளித்தனர்.

கொழும்பு பள்ளிகளில்

# தமிழ் பிள்ளைகளுக்கு அனுமதி மறுப்பு

சிங்களம் மட்டும் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டதும் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் உள்ள பாடசாலைகளில் தமிழ் பிள்ளைகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டு வருவது சகஜமாகிவிட்டது. இது பற்றி கல்வி இலாகாவுடன் தமிழ்த் தலைவர்கள் பலமுறை முறையிட்டதுண்டு. கொழும்பு ஹவ்லொக் டவுனிலுள்ள ஒரு பாடசாலையில் இதே சம்பவம் நடைபெற்றுள்ளது பற்றி மேல் மாகாண வித்தியாதரிசிக்கு திரு. செல்வநாயகம் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பு ஹவ்லொக் டவுன் இசிப்பதுமா மாவித்தியாலயத்தில் ஏராளமான தமிழ் மாணவர்களுக்கு பிரவேசம் மறுக்கப் படுவதாகத் தெரிகிறது. வகுப்பறைகளில் போதுமான இடவசதியிருந்தும் கூட தமிழ் மாணவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனராம்.

திரு. எம். ஐ. ராமன் என்பவருடைய மூன்று பிள்ளைகள் ஏற்கனவே இப் பாடசாலையில் சேர்ந்து படித்து வருகின்றனர். அவருடைய நான்காவது மகன் ஒரு இலங்கைப் பிரஜையல்ல என்று காரணம் காட்டப்பட்டு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாம்.

இலங்கைப் பிரஜைகளல்லாத மாணவர்களைப் பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படாது என்று ஏதாவது விதிகள் இருப்பதாகத் தெரியவில்லை.

இத்தகைய பாகுபாடுகளை கல்வி போன்ற ஒரு உயரிய தொண்டாற்றும் ஸ்தாபனங்களுக்குள் நுழைய விடுவது நியாயமற்றதாகும், என தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், மேல் மாகாண வித்தியாதரிசிக்கும் இசிப்பதுமா மாவித்தியாலய அதிபருக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தவரின் வாக்குக்கு மாருன போக்கு!

## பிரதமர்—சீனப் பிரதிநிதி......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தினிடம் கொம்யூனிஸ்டு நெருக்குதல் பலமாக இருப்பதாலும், பரிச்சயமற்ற, முதிர்ந்த அனுபவமற்றவர்கள் ஆதிக்க பீடத்தில் வீற்றிருப்பதாலும் சீன இலங்கையின் இரப்பரை வாங்கிக் கொண்டு அரிசி கொடுப்பதாலும் தங்களின் திறமையான இராஜ தந்திர நடவடிக்கைகளாலும் இலங்கை அரசாங்கத்தை ஆசிய ஆபிரிக்க மகாநாடு நடத்தும் திட்டத்திற்குச் சம்மதிக்கச் செய்து, இலங்கையைக் கொண்டே அந்தக் காரியத்தை நிறைவேற்றுவது என்று சீன முடிவு செய்ததாம்.

சீனப் பிரதிநிதி—பிரதமர் சந்திப்பு இம்மாதம் 17ந் தேதி வாக்கில் நடைபெற்றதாம். 20ந் தேதி மாலையில் மகாநாட்டுக்கு அழைப்புகள் விடுக்கப்பட்டன. 21ந் தேதி காலையில் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது.

### யார் கூறுவது உண்மை?

இந்த மகாநாடு கூட்டுவது பற்றிய தகவல் தங்களுக்கு அறிவிக்கப்பட வில்லையென்றும் பிறகுதான் அதுபற்றி தெரிய வந்ததென்றும் பாரதப் பிரதமர் டில்லி பாராளுமன்றத்தில் கூறினர். "இல்லை, நாங்கள் முன்பே இந்தியாவுக்கு தெரிவித்து விட்டோம்" என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிக்கை விட்டிருக்கிறது.

ஆயினும் நேருவின் பாராளுமன்றப் பேச்சின் தொனி, மகாநாட்டின் பின்னணியைச் சந்தேகிப்பதாகத் தோன்றுகிறது. இந்த மகாநாடு தகராறைத் தீர்க்க உதவுமென்று நேருஜி கருதவில்லைப்போலும்!

மகாநாட்டில் பங்குபெறவிருக்கும் ஐக்கிய அரபுக்குடியரசு, கானு, பர்மா, இந்தோனேஷியா, கம்போடியா, இலங்கை ஆகிய நாடுகளுக்கு நேருஜி உடனே தமது பிரதிநிதிகளை அனுப்பி இந்தியாவின் கட்சியை விளக்கிக் கூற ஏற்பாடு செய்தார்.

சீன இந்திய யுத்தத்தால் இலங்கை நடுநிலை வகிப்பதாகக் கூறிக்கொண்டாலும் கூட இலங்கையின் அனுதாபம் சீனவின் பக்கமே என்று பொது மக்கள் பேசிக்கொள்கின்றனர்.

இதற்கான காரணங்கள் பல கூறப்படுகின்றன.

1. இலங்கை-இந்திய வர்த்தக ஒப்பந்தம் அவற்றில் முக்கியமானதாகும். இலங்கை றப்பரை சீன வாங்குகிறது. அதற்குப் பதிலாக சீன இலங்கைக்கு அரிசியை விற்கிறது. எனவே சீனவைச் சார்ந்து நிற்கவேண்டிய நிலை.

2. இலங்கை கொம்யூனிஸ்டுகளின் நெருக்குதல். இந்த நெருக்குதலின் வேகம் தற்போது அதிகரித்துள்ளது. இதனுல் இலங்கை சீனவின் பால் அனுதாபம் கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப் படுகிறது.

### டயர் விவகாரம்

3. இ. போ. ச. சென்ற வருடம் தேவையான டயர்களில் 50 சத வீதத்திற்கு மேற்பட்ட டயர்களை சீனவிடம் வாங்கிப்பெரும் நட்டமடைந்தது. மற்றய நாட்டு டயர்கள் எவ்வளவோ சிறந்தவை, மலிவானவை என்று நிரூபிக்கப்பட்டு, சீன டயர்களை வாங்குவதைக் குறைப்பதாக முடிவு செய்யப்பட்டது. ஆனுல் அண்மையில் அரசாங்கத்தால் இம் முடிவு மாற்றப்பட்டு மீண்டும் அரைவாசிக்கு மேற்பட்ட டயர்களை (23850 டயர்கள் தேவை அவற்றில் 13,000) சீனவிலிருந்து வாங்குவது என்று தீர்மானமாகியது.

4. இந்தியாவுக்கு எதிரான சீனப் பொய்ப் பிரசாரத்தைச் செய்ய இலங்கைப் பிரஜையான பிற்போக்காளரான கந்தசாமியை சீனவுக்குப்போக அனுமதித்தது, இலங்கை அரசாங்கத்தின் அனுதாபங்கள் எந்தப் பக்கம் உள்ளன என்பதை வெளிப்படுத்துகிறது.

5. அத்தோடு நில்லாது, இந்தியப் பாதுகாப்பு நிதிக்கு இங்கு சேர்ந்த பணத்தை அனுப்ப அனுமதி அளிக்க மறுத்தத இலங்கை அரசாங்கத்திடம் இந்திய பக்கம் அனுதாபமில்லை என்பதை நிரூபிக்கிறது.

ஆகவே ஆசிய ஆபிரிக்க மகாநாடு சீனவின் தூண்டுதலின் மீதே கூட்டப்படுகிறது என்ற கருத்து மேலும் பலப்பட்டுள்ளது.

## நிதி அளித்தமை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று மேலும் அக்கடிதத்தில் இந்தியத்தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

பணம் கொடுத்தோர் விபரமும், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சிக் காரிய கமிட்டிக் கூட்டத்தின் தீர்மானமும் 15ம் பக்கத்தில் இடம் பெற்றுள்ளன.

## மொழியறியாதோருக்கு மோசம் விளைக்காதீர்

—எஸ். ஜே. வி.

உத்தியோக மொழியாக சிங்களம் பிரகடனப்படுத்தப்பட்டால், சிங்களமொழி பேசாதவர்களுக்கு அநீதி இழைக்க மாட்டோம் என்று காலஞ்சென்ற பிரதமர் கூறியிருந்தார். அவர் வழி நடப்பதாகக் கூறும் இன்றுள்ள ஆட்சியாளர்கள் அவரின் கொள்கைக்கு மாருக நடப்பதேனே? என்று நிதிமந்திரிக்கு திரு. செல்வநாயகம் எழுதியுள்ள ஒரு கடிதத்தில் கேட்டுள்ளார்.

ஜனப்பிரதிநிதிகள் சபையில் காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்:

"சந்தர்ப்ப சூழ்நிலையால் இந்நாட்டின் உத்தியோக மொழியாகச் சிங்களம் பிரகடனப்படுத்தப்பட வேண்டியிருந்த போதும், அதனை அமுல் நடாத்தும்போது சிங்களமல்லாத மொழி பேசுபவர்களுக்கு எவ்வித தீங்கோ, அநீதியோ இழைக்கவேண்டுமென்ற நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லையென்பதே எப்பொழுதும் எமது கொள்கையாகவிருந்து வந்திருக்கிறது".

"சிங்களத்தைஉத்தியோக மொழியாக ஏற்றுக்கொள்ளும் அதே நேரத்தில், அதன் விளைவாகச் சிங்களம் தெரியாத, வேறு மொழிகளில் கல்வி பயிற்றப்பட்ட பிரஜைகள் எவ்விதத்திலும் கஷ்டத்தையோ, தீங்கையோ, அநீதியையோ அனுபவிக்கக் கூடாதென்பதே அரசாங்கம் கடைப்பிடிக்க விரும்பும் கொள்கையாகும்".

சிங்களத்தைப் படிப்பதற்காகப் பொதுவில் நீங்கள் தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களை நெருக்கும் எல்லா நடவடிக்கைகளுக்கும் எமது கட்சி ஆட்சேபம் தெரிவித்துக் கொள்கிறது.

(1) தமிழ் மொழி மூலம் கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர்களைச் சிங்களம் படிக்கும்படி கட்டாயப்படுத்தக் கூடாது. ஆங்கிலம் உத்தியோக மொழியாகவிருந்த காலத்தில் கூட இவ்வாசிரியர்கள் ஆங்கிலம் கற்க வேண்டிய நிபந்தனை இருக்கவில்லை.

(2)தமிழ்மொழியில் தமது அலுவல்களை நடாத்தும் உள்ளூராட்சிக் கழகங்களில் கடமையாற்றும் ஊழியர்களைச் சிங்களம் படிக்கும்படி கட்டாயப்படுத்தக்கூடாது.

(3) தமது தொழிலைத் திறமையாக நடாத்த எந்த ஒரு மொழியையும் பிரத்தியேகமாகக் கற்க வேண்டிய அவசியமில்லாத தொழிலாளர்களையும் சிங்களம் படிக்குமாறு கட்டாயப் படுத்தக் கூடாது.

## சந்திக்கு வந்தவை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

றது. இந்தத்திருவிளையாடல்களைப் புரிபவர்களான புது மொழி மோகம் கொண்ட இந்த அம்மணிகளை தமிழ்ப் பொது மக்களைச் சிக்கல் படுத்த வேண்டாமென்று வேண்டுகின்ருேம்.

## மலைநாட்டு......

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நவர்கள் என்ற பட்டத்தையும் கொடுத்து நம்மை நிர்க்கதியாகக் காத்துக் கொண்டிருக்கும் கழுகுப் பார்வையாளரிடமிருந்து மீள; தமிழரசுக் கட்சியின் தொழிற் சங்கத்தை வளர்த்து சங்கநாதம் முழங்குவோம்.


ஆங்கிலம்
ENGLISH
ஆங்கிலப் பாஷையைச்
சிறப்பாக
* பேச
* வாசிக்க
* எழுத
மிகக் குறுகிய காலத்துள் கற்றுக்கொள்ள இலவச விபரங்கட்கு எழுதுங்கள்.
அற்லஸ் ஹோல்,
723, மருதானை ரோட்,
கொழும்பு-10.



மந்திரத்தால் நிவாரணம்
இல்லற வாழ்க்கையை இன்பமுடன் நடத்துபவர்களையும், வாழ்க்கையில் முன்னேற்றம் அடைபவர்களையும் கண்டு பொருமைப் படுபவர்களும், எல்லா விஷயங்களையும் நாசமாக்குபவர்களும், உங்களுக்கு வேறு பல தொல்லைகள் கொடுப்பவர்களும் இருக்கலாம்.
இப்படிப்பட்டவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ளுதல்,
கிரகம், தோஷம், பில்லி. சூனியம், திருஷ்டிகள் விலக்குதல்,
பரீட்சையில் சித்தியடைதல்,
உயர் பதவி அடைதல் ஆகியவற்றை
தெய்வ பலத்தாலும்,
மந்திர சக்தியாலும்
நிறைவேற்றித் தர முடியும்.
விபரங்களுக்கு எழுதவும், அல்லது நேரில் வந்து சந்திக்கவும்
அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட
மந்திராச்சாரி
பீ. எம். திசாநாயக்க,
(நான்கு தேவாலயங்களின் பிரதம தர்மகர்த்தா)
371, டாம் வீதி, கொழும்பு-12.
அளுத எண்ணை அலுவலகம்
கம்பளை.


## நம்பினேம்! ஏமாந்தோம்!
## இனி நாமே வழி வகுப்போம்

1956-ம் ஆண்டு சிங்களம் மட்டும் என்ற சட்டம் கொண்டு வரப்பட்டதிலிருந்து நிலைமை மாறும் எனக் காத்திருந்தோம். தேசிய சங்கங்கள் எமது பறிபோகும் உரிமைகளுக்காக வாதாடும், வழக்குரைக்கும் என்று நம்பி இருந்தோம். இன்று எமது நிலைமை வெளிப்படையாகி, நாமே வழி தேடும் மார்க்கத்தில ஈடுபட்டுள்ளோம். இன்று அரசாங்கத்தின் கதவுகளைத் தட்டுமளவு நாம் பலம் பெற்றுள்ளோம்.

இவ்வாறு கடந்த ஞாயிற்றுக்கிழமை திரு. தம்பிமுத்து தலைமையில் வெள்ளவத்தை, சைவ மங்கையர் கழக மண்டபத்தில் நடைபெற்ற, அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் கொள்கை விளக்க கூட்டத்தில் உரை நிகழ்த்திய 'அஞ்சல் ஒலி' ஆசிரியர் திரு. ச. அ. செயரத்தினம் குறிப்பிட்டார்.


அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:- "நமது முன்னேற்றத்தைக் கண்டு மாற்றுச்சங்கங்கள் தலைகுனிகின்றன. இவ்வேளையில் நமது நண்பர்கள் சிலர் நிலைமையைப் புரிகிருர்களில்லை. இக்கட்டான ஒரு நிலையை அடையும் போது நிச்சயம் அவர்கள் எம்முடன் வந்து சேருவார்கள்".

தலைவர் திரு. மு. தம்பிமுத்து தனது தலைமை உரையில், "நாங்கள் தொடங்கியுள்ள சட்ட நடவடிக்கைக்கெல்லாம் தமிழ் அரசாங்க ஊழியர்களும் குறிப்பாக தமிழ் ஆசிரியர்களும் ஒத்துழைக்க வேண்டும்" என்ருர்.

திரு. சி. செல்வரத்தினம் பேசுகையில் கூறியதாவது:- "நாங்கள் விரும்பி[illegible] விரும்பாவிட்[illegible] தொடர்ந்து அரசாங்க சேவையில் இருப்பது முடியாத காரியம். எனவே படித்த இளைஞர்கள் வடகிழக்கு மாகாணங்களில் உள்ள பொருளாதார வாய்ப்புக்களைப் பயன்படுத்த முன் வரவேண்டும். இத்துறையில் ஊக்குவிப்பதற்கு, அடுத்த ஆண்டுமுதல் தமிழ்ப் பல்கலைக்கழகம் முன் வர இருக்கிறது" என்று கூறினர்.

சங்கச் செயலாளர் திரு. இ. பாலசுப்பிரமணியம் கூட்ட ஆரம்பத்தில் பேசும் பொழுது, சங்கம் நடாத்தும் வழக்குகளுக்கு கடமை உணர்ச்சியோடும், தியாக உணர்ச்சியோடும் பொருள் கொடுத்து உதவுமாறு வேண்டிக்கொண்டார்.

திருவாளர்கள்: வ. மகா[illegible] வே. தங்கவேல் ... யோரும் சொற்பெருக்காற்றினர்கள்.


தங்கப் பதக்கம் பெற்றது!

"யான் மார்"
ஏ. சி. மின்சாரம் உற்பத்தி செய்யும் யப்பானிய டீசல்
230 வோல்ட்ஸ் ஏ. சி.
1½ கிலோ வட்ஸ் தொடக்கம் 4 கிலோ வட்ஸ் யந்திரங்கள் கிடைக்கும்.
விநியோகஸ்தர்
செனற் அந்தனீஸ்
ஹாட்வெயார் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,
கொழும்பு-10.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## போட்டிக் கதை 7.




செல்வி செல்வமணி
வடிவேலு, பி. எஸ். ஸி.

அன்று ஈழத் தமிழர்களின் சத்தியாக்கிரகம் பாரோர் போற்றுமளவிற்கு வெகு தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. பாலர் முதல் பாட்டி வரை சிறுவர் முதல் பெரியோர் வரை இச்சாத்வீகப் போராட்டத்தில் பங்கு கொண்டனர். இம் மறத் தமிழரின் வீர உணர்ச்சியைச் சோதிக்கும் பொருட்டோ என்னமோ சூரிய பகவானும் தனது கதிர்களை நாலா பக்கமும் கிளப்பி வெப்பத்தை அதிகரித்தது.

அடிமைச் சூட்டிலும் பார்க்கச் சூரிய பகவானின் சூடு பயங்கரமானதல்ல என்பதனை எடுத்துக் காட்டும் முகமாக வீரத் தமிழர்கள் வெய்யிலென்றும் பாராது காரியாலயங்கட்கு முன் மறியல் செய்தனர். எங்கு பார்த்தாலும் உரிமைக் குரலெழுப்பிய வண்ணம் ஈழத் தமிழர்கள் தமிழரசுக் கொடியின் கீழ் கொள்கைகட்குக் கட்டுப்பட்டவராய்க் காட்சியுற்றனர்.

தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் இச் சேய் நாட்டுப் போராட்டத்தைப் பற்றித் தினமும் பிரசுரித்துக் கொண்டேயிருந்தன. இவற்றை ஊக்கத்தோடு சவனித்து வந்த பாரதத்தில் பயிலும் ஈழத்து மாணவ மாணவிகளின் உணர்ச்சிகள் ஆற்று வெள்ளம் போல் பெருக்கெடுத்தன.

பட்டதாரி வகுப்பின் இறுதி ஆண்டைப் பூர்த்தி செய்து கொண்டிருந்த செல்வத்தின் நிலைமை மிக மோசமாகவிருந்தது, காரணம் அப்போது அவர்கட்கு பரீட்சைக் காலம்.

மதுரை மாநகரில் ஓர் கல்லூரியில் பயின்று கொண்டிருந்தாள் செல்வம். திருமலை பெற்றெடுத்த இந் நங்கை சிலகாலம் தான் செய்த தமிழ்த் தொண்டை இடையில் விட்டுவிட நேர்ந்தது. மேற்படிப்பிற்காகப் பெற்றோர் அவளைப் பாரதம் அனுப்பி வைத்த போதும் அவள் ஈழத் தமிழர்களின் இன்னல்களைப் பாரதத் தமிழர்களுக்கு அவ்வப்போது எடுத்துரைக்க மறந்ததில்லை. இவளது தமிழார்வத்தைக் கண்ட பேராசிரியர்களும் மற்றைய மாணவ மாணவியரும் இவளுக்கு ஊக்கமளித்து உறுதுணையாகவிருந்தனர். இதனால் மதுரையில் பயின்ற ஈழத்து மாணவர்கள் "ஒரே கொடியின் கீழ் நாம் ஒற்றுமையைக் காணலாம்'' என்ற உண்மையை நிலை நாட்டினன்.

போராட்டம் ஆரம்பித்ததும் இவளது உள்ளம் மதுரையில் இருப்புக் கொள்ளவில்லை. எண்ணமெல்லாம் ஈழத் தமிழர் மேல் குடிகொள்ள வெறும் உயிரற்ற பிணம் போல ஊசலாடினாள். 'இறக்கையிருந்தால் பறந்து விடுவேன். ஆனால் பரீட்சையல்லோ பெரும் முட்டுக் கட்டையாகக் கிடக்கின்றது' என்று மனம் வருந்திக் கொண்டேயிருந்தாள். பாவம்! என் செய்வது?

போராட்டத்தில் பங்கு கொள்ள முடியாது தவிக்கின்றாளே என்பதனையறிந்த கல்லூரித் தலைவி, பேராசிரியர்கள் மற்றும் சகமாணவியர் ஆறுதல் கூறினார்கள். பரீட்சை முடிந்ததும்பறந்து சென்று பங்கு கொள்ளலாம் என்றெலாம் கூறினார்கள். கேட்டாளா? அவளது உள்ளம் நிலை தடுமாறியது! பரீட்சைக்காகப் படிப்பதா? அல்லது பறந்து சென்று பங்கு கொள்வதா? படிப்பதற்காக நூல்களைப் புரட்டினால் அவளது கண்முன் ஈழத் தமிழர்கள் வெள்ளம் போல் திரண்டு நிற்கும் காட்சியும், தமிழரசு மூவர்ணக் கொடிகள் வெயிலில் படபடவென்று அடித்த வண்ணமும் காட்சியளித்தன.

தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் தனது சேய்நாட்டுத் தமிழரின் உணர்ச்சி வேகத்தைக் கொட்டை எழுத்துக்களில் அம்பலப்படுத்திக் கொண்டேயிருந்தன. தமிழ் மகளாய்ப் பிறந்ததும் இச் சாத்வீகப் போராட்டத்தில் பங்கு கொள்ளாது விடின் பிறந்தும் பயனில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்ட செல்வம், பெற்றோருக்குத் தனது இரண்டும் கெட்டான் நிலையை விபரமாக எழுதினாள். வீர உணர்ச்சி வேகமாக ஓடிக்கொண்டிருந்த சமயமாதலால் பெற்றோரும் பின்வருமாறு தந்தி கொடுத்தனர்; 'இத் தெய்வீகப் போராட்டத்தில் பங்கு கொள்ளும் சந்தர்ப்பத்தை நழுவ விடலாகாது. பட்டதாரிப் பரீட்சையை அடுத்த முறை எழுதிக் கொள்ளலாம். புறப்படு.' இதைக் கண்ணுற்ற செல்வம் சூரியனைக் கண்ட செந்தாமரை போல் மலர்ந்தாள்.

இதற்கிடையில் இவளுக்கோர் பெரும் பிரச்சினையிருந்தது. காதலைக் கட்டி வளர்க்கும் கன்னித் தமிழர் குலத்துதித்த இந்நங்கை புறப்படுமுன் தனது காதலரின் அனுமதியைப் பெற விரும்பினாள். ஈழத்து மாணவனாகிய அவனும் பட்டப் படிப்பிற்காகச் சென்னையில் பயின்று கொணடிருந்தான். அரசியற்பற்றற்ற ராஜன் இப்போராட்டத்தில் சிறிதும் அக்கறை காட்டவில்லை.



தமிழரசுக் கட்சியென்றாலே தனி வெறுப்பு அவனுக்கு. செல்வம் தமிழரசைப் பற்றிப் பேசும்போதெல்லாம் ராஜன் அவளைக் கேலி பண்ணிக் கோபத்துக்குள்ளாக்கி வேடிக்கைபார்ப்பான்.

அன்று திடீரென அவளிடமிருந்து கிடைத்த தந்தி அவனை மலைக்கச் செய்தது. உடனே ராஜன் "புறப்படாதே, நாளை மதுரை வருகின்றேன்'' என அவசர தந்தி கொடுத்துவிட்டு மதுரை நோக்கிப்புறப்பட்டான். இதனால் உள்ளந் தடுமாறிய செல்வம் "ராஜன் என்ன சொல்லுவாரோ'' என ஏங்கிக் கொண்டேயிருந்தாள். விடிந்ததும் ராஜன் அவள் முன் கோபமாகக் காட்சியளித்தான் "நீர் போனதும் போராட்டம் வெற்றியடைந்து விடும் என்ற எண்ணமோ? பரீட்சை எழுதும் நேரத்தில் போவது முறையில்லை. பொறுமையோடிருந்து பரீட்சையை எழுதி முடியும்'' என்று ஆத்திரமாகக் கூறினான். அவள் தந்தையின் தந்தியைக் [illegible] துத் தான் நிச்சயமாகப் போவ[illegible] தாகக் கூறினாள். ராஜனுக்குக் கோபம் அதிகரிக்கவே "போகவே கூடாது செல்வா எனது அன்புக் கட்டளையை மீற வேண்டாம்'' என்றான். அவள் வேதனையோடு கண்ணீர் வடிய "ராஜூ நான் கடமைக்கும், காதலுக்கும் மத்தியில் அவதிப்படும் வேதனையை நீங்கள் அறிய மாட்டீர்கள். நான் போவதனால் உங்களுக்கு என்ன குறைந்துவிட்டது? சென்று வா என்று ஒரு வார்த்தை தான் கூறுங்களேன்'' என வேண்டினாள். தான் இவ்வளவு தூரம் வந்ததையும் பொருட்படுத்தாமல்போகத் துணிந்துவிட்ட செல்வத்தைக் கோபத்தோடு நோக்கி "என்னை மீறுவதானால் காதலை மறந்து விடு'' என்று கூறிய வண்ணம் வெளியே சென்றான். ஓவென்று அலறிய செல்வம் ராஜனது கரங்களைப் பிடித்துத்தடுத்த வண்ணம் "ராஜூ கன்னித் தமிழ் போராட்டத்தில் பங்கு கொள்ளாவிட்டால் என்னால் நிம்மதியாகப் படிக்கவே முடியாது. எனது உள்ளத்தில் ஊறிவிட்ட உணர்ச்சியைப் பிரிக்க நினைக்காதீர்கள்'' என அலறினாள். ஆனால் ராஜன் மனதைக்கல்லாக்கிக் கொண்டு மறைந்து சென்றான். புண்பட்ட உள்ளத்தோடு தனது அறையினுள் சென்ற செல்வம் ஏதும் அறியாதவளாய் விம்மி விம்மி அழுதாள். கடைசியில் அவள் வந்த முடிவு இதோ-"காதலை மறந்து விடு'' என்ற கொடிய சொற்கள் காதில் கணீரென ஒலிக்க, "உடனே புறப்படு'' என்ற தந்தையின் வார்த்தைகள் உள்ளத்தைக் கல்லாக்க ஈழம் புறப்படலானாள்.

காதலில் ஏற்பட்ட குறைவு தடுமாற்றங் கொடுக்க கடமையில் ஏற்பட்ட நிறைவு உணர்ச்சியைத் தூண்ட, செல்வம் தலைமன்னார் பியரில் வந்திறங்கினாள். அப்பொழுது அவளுடைய காதலன் பிரிவு அவளுக்கு வேதனையைக் கொடுத்தது. கன்னித் தமிழ் காக்கக் கடல் கடந்து வந்துவிட்டோமேயென்ற பெருமையில் ராஜனையும் சிறிது நேரம் மறந்திருந்தாள்.

திருமலை மண்ணிலே புகையிரதம் வந்து நின்றதும் சாத்வீக மணம் எங்கும் கமழ்ந்தது. வீட்டிற்கு விரைந்தாள். அங்கே வீடு காடாகக் கிடந்தது. சத்தியாக்கிரகம் செய்யுமிடத்திற்கு விரைந்தாள். போகும் வழியில் "உயிரைக் கொடுத்தும் உரிமைகளைப் பெறுவோம்'' என்ற வீரக்குரல்கள் எழும்புவதைக் கேட்டாள். இக்கோஷங்கள் வரும் திசையை நோக்கிச் சென்ற போது அது கச்சேரி வாயிலை அடைந்தது. செல்வத்தைக் கண்ணுற்ற பெற்றோர், உற்றோர், உறவினர் யாவரும் கர கோஷமிட்டு வரவேற்றனர்.

வெற்றிகரமாக இப்போராட்டம் நடந்து கொண்டிருக்கையில் இரு இராணுவ வீரர்கள் கூட்டத்தைக் கலையும்படி கேட்டனர். உடனே செல்வம் எழுந்து "இராணுவத்திற்கஞ்ச மாட்டோம்'' எனக் குரல் எழுப்ப இதைத் தொடர்ந்து பல குரல்கள் எழும்பின. உடனே இராணுவத்தினர் தமது அடிவர்சயினை அஹிம்சா வழி நின்ற தமிழர் மேல் காட்டினர். இச்சமயம் பல பெண்களும் ஆண்களும் இரத்தம் சிந்த நேர்ந்தது. செல்வத்தின் மண்டையில் அடி பலமாக விழுந்ததால் அறிவு மயங்கி கீழே வீழ்ந்தாள். இரத்தம் ஆறுகப் பெருக்கெடுத்தது.

இவளது நிலை ஆபத்துக்கிடமாகவே சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாள். பைந்தமிழ் காக்கப் பாரதத்திலிருந்து பறந்து வந்த பாவையினைப் பாதகர்கள் பதம் பார்த்துவிட்டனர் என்ற செய்தி நாட்டுப் பத்திரிகையில் வெளிவரத்தவறவில்லை. செல்வத்தின் பெயரைக்கண்ணுற்ற ராஜன் பதறியடித்து பல ஈழத்து மாணவரோடு பாவையினைக் காணப்பறந்து வந்தான்.

செல்வத்தின் படுக்கை அருகே சென்ற ராஜன் சோகமே உருவெடுக்க நின்றான். கண்களில் நீர்வடிய அவளது கரத்தினைப் பற்றி "செல்வா இதுதானா உனக்குக்கிடைத்த பரிசு? என்னைப் பார்க்க மாட்டாயா?'' கண்களை மெல்லெனத் திறந்து செல்வம் மனங்குளிர ராஜனை நோக்கி "அத்தான் என் கடமையை முடித்துத் தமிழரசுக் கொடி வெற்றியோடு பறப்பதைக் காணுமுன் காயப்பட்டுவிட்டேன்'' என்று கூறிக் கலங்கினாள். இப்போராட்டத்தின் தெய்வீகத் தன்மையை உணர்ந்த ராஜன் செல்வத்தை நோக்கி "அன்பே! நான் பெரிய துரோகி. மொழிப்பற்று அற்றவனாக வாழ்ந்த எனது அறியாமையை நீக்கி எனது பெரும் பாவத்தை தவிர்த்த உன்னை என்னால் என்றும் மறக்கமுடியாது. இதோ நீ விட்ட இடத்திலிருந்து இப்போராட்டத்தில் நானே கலந்து கொள்கிறேன். விடைதா செல்வா!'' எனஇரங்கிக்கேட்டான். "சென்று வாருங்கள் அத்தான்''எனப் புன்னகை ததும்பக்கூறி வழியனுப்பினாள்செல்வம். 'தமிழ் எங்கள் உயிர்' என்று கூவிய வண்ணம் விரைந்து சென்ற இவ்வீரனைப் பாதகஞ் செய்யும் இராணுவத்தினர் ஒரே சூட்டினால் உயிரைக் குடித்தனர். "செல்வா!'' என்ற அலறலோடு தரை சாய்ந்தான் ராஜன்.

இப்பயங்கரச் செய்தி செல்வத்தின் காதுகளில் எட்டவே அதிர்ச்சியுற்ற செல்வம் அடுத்த நிமிடமே ராஜனின் வழியைப் பின்பற்றினாள். தமிழ்த்தாயின் பெயரிலே தம்முயிரை மாய்த்த இவ்விளங் காதலர்கள் இன்றைய இளங்காளையர்க்கும் கன்னியர்க்கும் நல்ல உணர்ச்சி வேகத்தை ஊட்டிவிட்டனர். இவ்விரு உயிர்களும் மடிந்த போதும் ஆயிரக்கணக்கான வாலிப உள்ளங்களை உறக்கத்தினின்றும் தட்டி எழுப்பிவிட்டுச் சென்றுள்ளனர்.

(யாவும் கற்பனையே)


## ஆனந்தா லேகியம்

**இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.**

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோன்றும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, ணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் திரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை,''த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

# 'தடுப்புக் காவலில் நாம்' 18.



## அன்பு மகள் அன்பரசிக்கு,

தடுப்புக் காவல் நிலையம்,
பனுகொடை,
ஹோமகம,
24—5—1961

மகளே அன்பரசி!

சென்ற மடலில் குறிப்பிட்டது போல இந்த மடலில், அறிமுகம் செய்யாத எமது தடுப்புக் காவல் குடும்பத்திலுள்ளோரை எழுதி முடித்துவிட எண்ணினேன். ஆனால் கடிதம் நீண்டுவிடும் என்ற காரணத்தினால் சில்லரை அடுத்த வாரம் தள்ளி வைக்க வேண்டி வந்துள்ளது!

கண்டிப்பாக அடுத்த கடிதத்துடன் அறிமுகம் செய்வது முடிவடைந்துவிடும்.

### வ. நா. தம்பிராசா

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்றெழுதிக் கைச்சாத்திட்டார் திரு. வ. நா. தம்பிராசா அவர்கள். சாம்பற் தீவுக் கிராமச் சங்கத் தலைவர். இளைஞராயிருந்தும் சாம்பற்தீவு மக்களின் நல்லபிமானம் பெற்ற இவர் குழந்தையுள்ளம் கொண்டவர்; மிக நல்லவர்; கட்சியில் நீங்காத பற்றும், எதையும் கட்சிக்காகச் செய்யும் பண்பும், உயிரைவிட இலட்சியமே பெரிதெனக் கருதும் வீர உணர்வும் ஒரு சேரக் கொண்டவர். எனது நல்ல நண்பராகிவிட்ட இவர் அடிக்கடி எனது அறை வருவார்; பேசுவார்; கேலி செய்வார்; பாடுவார்... திருமலைப் பிரதிநிதியின் அபிமானத்துக்குரிய இவர், சிறந்த மக்கள் தொண்டனுவார்.

### த. சின்னையா

"மொழி எங்கள் விழி" என்றெழுதிக் கைச்சாத்திட்டார் செல்வன் சின்னையா அவர்கள். இவர் திருமலையைச் சேர்ந்தவர்; பாடசாலை மாணவர். மாணவர் படையுடன் அறப்போர் செய்தமைக்காக இந்த மாணவனையும் எமது குடும்பத்தில் ஒருவராக்கி மகிழ்கின்றது 'சிறிமா அரசு'. கரம் ஆடுவதும் ஓடுவதுமாக உள்ளார்.

### கே. பி. சீதாராமன்

"ஓடையிலே என் சாம்பல் கரையும் போதும் ஒண் தமிழே சலசலத்து ஓடவேண்டும்" என்றெழுதிக் கைச்சாத்திட்டார் செல்வன் கே. பி. சீதாராமன் அவர்கள். இவரும் திருமலையைச் சேர்ந்த ஒரு மாணவன். ஒரு கையை இழந்துவிட்ட இவரிடம், விளையாட்டுகளில் முதன்மையாளனுயிருக்கும் தன்மை உள்ளது. சமுதாய ஊடாட்டத்தில் சிறந்த இவரது வதனம் வாடியிருந்த நாளை நான் காணவில்லை.

### கே. வி. பாலச்சந்திரன்

"நேர்மையும் நிதானமும் மேன்மை தரும்" என எழுதிக் கைச்சாத்தாக 'இடிமுழக்கம்' என இட்டார் திரு. கே. வி. பாலச்சந்திரன் அவர்கள். இவர் ஒரு திருமலை வழக்கறிஞர்; விடய அறிவு கொண்டவர். எந்த விடயத்தைப் பற்றியும் அறிந்து வைத்திருப்பவர். தன் அறையும் தானுமாக, வாசிப்பதிலேயே பொழுதையெல்லாம் கழிக்கின்றார். தமிழ் மக்களின் எதிர்காலம் பற்றிய எண்ணச்சுழலில் சிக்கிச் சிந்தித்தபடியே இருப்பார். தன் சிந்தனைகளை மற்றவர்களிடம் நீட்டுகின்றார். நல்ல ரசிக உள்ளம் கொண்டவராகவுள்ளார்.

### ந. இ. இராஜவரோதயன்

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்றெழுதிக் கைச்சாத்திட்டார் திரு. ந. இ. ராஜவரோதயன் அவர்கள். தமிழரசுக்கட்சியின் ஆரம்ப காலம் தொட்டுப் பாராளுமன்றப் பிரதிநிதியாக இருக்குமிவர் திருமலை மக்கள் மட்டுமல்ல, ஈழத்து மக்களின் அபிமானத்துக்கும் நேசத்துக்குமுரியவர். பொறுமையும், பண்புடைமையும், அரசியல் நுண்ணுணர்வும், இலட்சிய மூச்சும் கொண்ட இவர் திருமலை மக்களுக்குக் கிடைத்த ஒரு வைடூரியம். தன் பணம் பிறர் பணம் என்று கருதாது, தன் பணத்தை மக்கள்தொண்டுக்காகச் செலவு செய்யுமிவரது சேவையை என்றுமே திருமலை மக்கள் மறக்கமாட்டார்கள். பொது மக்களின் உறவினன் போல திருமலை முற்றவெளியில், அனந்த உயனம் செய்யும் கிருஷ்ணர் போலப் படுத்தபடி வேண்டியன செய்யும் ஆற்றல் மிகக் கொண்டவர். பொய்மையோ, ஏமாற்ருே தன்னிடமில்லை என்பதை அவரது அழகு முகமே உணர்த்துமே! பல நூல்களை இங்கு வாங்குகின்ருர்; ஆராய்கின்ருர். ஒரு அரசியல் தலைவருக்கு இருக்கவேண்டிய தன்மைகள் நிறைய இவரிடம் காண்கின்றேன்.

## புதுமை லோலன்

### அன்ரனி

"நீதியின் நிமித்தம் உபத்திரவப்படுபவர் பாக்கியவான்கள்" என்றெழுதிக் கைச்சாத்திட்டார் திரு. ஏ. அன்ரனி அவர்கள். யாழ்ப்பாணம் குருநகரைச் சொந்த ஊராகக் கொண்ட இவர் சட்டக் கல்லூரி மாணவர்; நல்ல ஆங்கிலப் பேச்சாளன்; திறமைசாலி. இங்குள்ளோருக்கு மிக உதவியாக அமைகின்ருர்; ஓடி ஓடி மற்றையோருக்குத் தேவையானவற்றுக்கு ஆவன செய்கின்ருர்.

### ரங்கநாதன்

"ஒன்ருக வாழ்ந்த பனுகொடை வாழ்வை மறக்கவே முடியாது" என எழுதிக் கைச்சாத்திட்டார் திரு. ரங்கநாதன் அவர்கள். இவர் திருமலையைச் சேர்ந்த வழக்கறிஞர். காதல் மனைவியின் அன்பு பற்றியே எண்ணமிட்டபடியுள்ள இவர், நல்லவர். எப்போது விடுதலை கிட்டுமென, ஆவலுடன் எதிர்பார்க்கின்ருர்.

### ஜே. ஏ. பி. துரைநாயகம்

"தேமதுரத் தமிழ் ஓசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்று பாரதி குரலை எழுதிக் கைச்சாத்திட்டார் திரு. ஜே. ஏ. பி. துரைநாயகம் அவர்கள். இவரும் வழக்கறிஞர். கட்சியிலிவரது குடும்பமே பற்றுக் கொண்டது. அமைதியும் கண்ணியமும் நிரம்பிய இவர் கட்சிப் பற்று நிறைந்து காணப்படுகின்ருர்.

### ஆர். சந்திரபாலன்

"எதையும் இனிப்பாகக்கொள்ளப் பழகுக" என்றெழுதிக் கைச்சாத்தையிட்டார் திரு. ஆர். சந்திரபாலன் அவர்கள். இவர் திருமலையைச் சேர்ந்த வழக்கறிஞர். தன்பாடும் தானுமாக நூல்கள் வாசிப்பதையே தனது பொழுதுபோக்காகக் கொண்டு அமைதியாகவுள்ளனர்.

### சி. சிதம்பரப்பிள்ளை

"தலைவர்களைவிடச் சிறந்த அறிவாளிகளே இந்நாட்டின் முதுகெலும்பு" எனவெழுதிக் கைச்சாத்திட்டார் திரு. சி. சிதம்பரப்பிள்ளை அவர்கள். இவர் ஓமந்தைக் கிராமச்சங்கத் தலைவர். வவுனியாச் சிவ சிதம்பரத்தை ஆதரிப்பவர். இலட்சியப் பற்றும் காணப்படுகின்றது, தன் மனைவி மக்[illegible] [illegible] காணப்படுகின்றது. இவரி[illegible]டம், நல்ல உள்ளம் நிரம்பிய இவர் எல்லாருடனும் நட்புறவுடன் நடமாடுகின்ருர்.

### செ. இராசதுரை

"கோழைகள், சோம்பேறிகள் சுதந்திரத்தின் நிழலில் கூட நிற்க முடியாதவர்கள்" எனவெழுதிக் கைச்சாத்தையுமிட்டார் திரு. செ. இராசதுரை அவர்கள். மட்டக்களப்புப் பிரதிநிதியாய இவர் வீர உணர்வும் இலட்சியப் பற்றும் நிரம்பக் கொண்டவர் என்பதை நான் எழுதியா தெரிய வேண்டும்! எந்த மக்களும் அசையாது நின்று கேட்கக் கூடியதாகச் சொற்பொழிவு செய்யும் இவர், பெரு நாவலன்; சொற்கொண்டல் என்பதை ஈழம் அறியும். மட்டக்களப்பில் தமிழரசு விருட்சத்தை வளர்த்த பெருமையி லதிக பங்கு இவருக்கேயுண்டு. எழுதுமாற்றல் பேசுமாற்றல் ஒருங்கே கொண்ட இவர், இங்கே சில வேளைகளில் ஒரே சிந்தனையுடன் காணப் படுகின்ருர். ஏன் என்று தெரியவில்லையே! படிப்பது, சிந்திப்பது, நம்முடன் தாம் சிந்திப்பதைக் கலந்துரை செய்வது, பாடுவது, பந்தாடுவது, வானெலி கேட்பது, உறங்குவது ஆகத் தன் பொழுதைக் கழிக்கின்ருர். அடிக்கடி, 'மாஸ்றர் மாஸ்றர்' என என்னையழைத்துப் பேசி வருகின்ருர். இளம் வயதிலேயே மட்டக்களப்பு மண்ணில் இலட்சியப் பற்றையும் மொழிப் பற்றையும் ஏற்படுத்திய இவரை தமிழினம் மறக்க முடியுமா? தமிழை இனிமையாக்கிக் காட்டிய பெருமையும் இவரதே!

### அரியநாயகம்

"நமது அவல நிலைக் கெல்லாம் இன்று அதிகாரத்திலிருப்பவர்கள் தான் காரணம் என்று சொல்லி விட முடியாது. முந்திய ஆட்சியாளரும், முளைந்து நிற்கும் பதவி ஆசைக்காரர்களுமான குழுவினர், ஐக்கியம் தேசியம் என்ற போர்வைக்குள் வைத்திருக்கும் வஞ்சக வகுப்பு வாதமே முழுக்காரணமாகும்". என்றெழுதிக் கைச்சாத்திட்டார் அறப்போர் முன்னணித் தலைவர் அரியநாயகம் அவர்கள். [illegible]ழக்கு மாகாணத்திலுள்ள திருக்கோயிலைச் சொந்த இடமாகக்கொண்ட இவர் அறப் போர்ப் பணியைத் தமது வாழ்வுப் பணியாகக் கொண்டவர். மொழி உரிமை கிட்டும் மட்டும் தாடியை வெட்டேன் எனச் சபதமிட்ட படி தாடியுடன் காணப்படுமிவரிடம், மொழிப் பற்று மிக மிக அதிகமாகவுள்ளதைக் காண்கின்றேன். மேன்மாடியை விட்டு விடுதலை கிட்டும் வரை இறங்குவதில்லை என்ற சபதமுடன் உள்ளார். இவருக்கு உணவு இவரது அறை தேடி வருகின்றது. எப்போது மேன் மாடி வந்தாரோ அன்று தொட்டு, மேன் மாடியை விட்டு இறங்குவது கிடையாது. விடுதலையின் அன்று மட்டுமே இறங்குவதாகக் கூறுகின்ருர். மாலையில் ஒரு மணித்தியாலம் கீழே இறங்கும் சந்தர்ப்பமிருந்தும் அதை அவர் விரும்பாது மேன்மாடியே சதமெனவுள்ளார். எதிலும் இலட்சிய வாழ்வை விரும்புமிவர், எதற்கும் அஞ்சாத அடலேறு. கவி இயற்றும் வன்மை கொண்ட இவர் சிறந்த இலக்கிய ரசிகர் மட்டுமல்லாது ஆய்வாளரும் கூட. புதுக் கண்ணேட்டமுடன் இலக்கியத்தைப் பார்க்கின்ருர். நல்லவர், வல்லவர், தமிழின் உயிர் போன்றவர்.

### வை, சிற்றம்பலம்

"நல்லவனுக வாழ்ந்தால் மட்டும் போதாது, வல்லவனுக

(13-ம் பக்கம் பார்க்க)

# உரிமையைப் பெற உழைக்க வேண்டும்

## உடுப்பிட்டி எம். பி.

தென் கிழக்கு ஆசிய நாடுகளில் மூன்று, நான்கு மொழிகள் பேசும் நாடுகளில் ஒரு மொழி அரசகரும மொழியாக விருப்பினும், மற்றும் மொழிகளும் வளர வாய்ப்புண்டு. அந்நிலை இங்கில்லை. அந்நிலையினைப் பெறுவதற்காக உழைப்பது நமது கடன்.

இவ்வாறு ஞாயிறு மாலை விவேகானந்த சபை மண்டபத்தில் வித்துவான் இ. சி. சோதிநாதன் தலைமையில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் கலந்து உரை நிகழ்த்திய உடுப்பிட்டித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசுகையில் அவர் கூறியதாவது: "அன்று நமது மொழியை மன்னர்கள் போற்றிக் காத்து வந்தனர். தற்போது தமிழைக் காத்து வளர்க்க வேண்டிய பொறுப்பு தமிழ் பேசும் மக்களுடையதாகிறது. மதத்தால், அரசியல் கருத்தால் மாறுபட்டிருந்தாலும், நாம் மொழியால் ஒன்றுபட்டவர்களே. நமது மொழி வளர்ச்சியடைந்த மொழி. எனவே தான் சிறந்த கருத்துக்களை நமது நூல்களிலிருந்து பெற முடிகிறது.

நமது நாகரீகம் வளர்ச்சியடைந்த நாகரீகம். பண்டைய நாகரீகங்களில் முதன்மையான நாகரீகம். எனவே தான் நமது நாகரீகம் சிறந்து விளங்குகிறது" என்று கூறினர்.

வித்துவான் இ. சி. சோதிநாதன் தனது தலைமையுரையின் போது, "மக்களின் சமூக வாழ்க்கைக்கு மொழி உயிர் போன்றது. மக்கள் சிந்தனையால் மொழியும், மொழியால் சிந்தனையும் தொழில்படுகிறது. எனவே தான் மொழி வளர்ந்தால் அறிவுணர்ச்சி வளரும், பண்பாடு, சான்ருண்மை வளரும், அதனுல் அம் மொழி பேசப் படுபவர்கள் சிறப்புறுவார்கள்.

வளம் பெற்று சீருடன் தமிழ் வாழ்ந்த காலத்தில் தமிழன் மானத்துடன் மதிப்புற்று வாழ்ந்தான். [illegible] நாம் சிறப்புற வாழவேண்டு மானுல், தமிழை வளர்த்தல் வேண்டும்" என்று கூறினுர்.





ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றே தான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜா பீடி கம்பனி
கொழும்பு-14.

டெலிபோன் : 2739


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய பாதுகாப்பு நிதிக்கு திரைப்பட உலகின் உதவி

இந்திய தேசிய பாதுகாப்பு நிதிக்காக தென்னிந்தியத் திரை உலகம் பணமாகவும், பொன்னகவும், பொருளாகவும் வாரிவழங்கி வருகிறது. சென்னை முதல் அமைச்சரிடம் சினிமா உலகப் பிரமுகர்களும், நடிக நடிகைகளும் சென்று பணம் கொடுத்த வண்ணமேயுள்ளனராம்.

சீன எல்லைத் தகராறு காரணமாக இந்தியா பாதுகாப்பு நிலையில் போதிய கவனம் செலுத்த வேண்டிய கட்டம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, பாரதப் பிரதமர் நாட்டு மக்களிடம் தேசிய பாதுகாப்பு நிதி கோரி வேண்டுகோள் விடுத்திருந்தார். லட்சக் கணக்கில் பாதுகாப்பு நிதிக்கு பணம் சேருகின்றது. தென்னிந்திய சினிமா உலகமும் இதற்கு விட்டுக் கொடுக்கவில்லை. நடிகர்கள், நடிகைகள், தயாரிப்பாளர்கள், வெளியீட்டாளர்கள், ஸ்டூடியோ சொந்தக்காரர்கள், தொழிலாளர்கள், தியேட்டர் தொழிலாளர்கள் ஆகிய சகலரும் போட்டி போட்டுக் கொண்டு பணத்தை வாரி இறைத்து வருகின்றனர்.

புரட்சி நடிகர் ரூபாய் 75,000 பாதுகாப்பு நிதிக்குத் தருவதாக வாக்களித்ததோடல்லாமல் 3 தவணைகளில் முழுத் தொகையையும் வழங்கிவிட்டார்.

கடந்த மாதமே தெ. இ. பிலிம் வர்த்தக சபை முன்றலில் நடைபெற்ற நிதி சேகரிப்புக் கூட்டத்தில் மொத்தம் 2,00,522 ரூபாய்கள் சேர்ந்தன. அத்துடன் ஒரு வளையலும், மூன்று மோதிரங்களும் 21 தங்கப் பவுண்களும் சேர்ந்தன. பட உலகப் பிரமுகர்களான திருவாளர்கள்: நாகிரெட்டி, ஏ. எல். சீனிவாசன், சிவாஜி கணேசன், வி. சி. சுப்பராமன், ஏ. பீம்சிங் முதலானோருடன் சாவித்திரி கணேசன் சென்று மேற்படி தொகையை முதன் மந்திரி காமராஜ் அவர்களிடம் கொடுத்தார்.

பாதுகாப்பு நிதிக்கு சினிமா உலகப் பிரமுகர்களால் வழங்கப்பட்ட தொகை விபரம்:-

| | |
|---|---|
| எம். ஜி. ராமச்சந்திரன்— | 75000-00 |
| எஸ். எஸ். வாசன்— | 100000-00 |
| ஏ. வி. மெய்யப்பன்— | 55000-00 |
| பி. நாகிரெட்டி— | 32500-00 |
| ஜெமினி கணேசன் சாவித்திரி— | 25000-00 |
| கே. பி. சுந்தராம்பாள்— | 25000-00 |
| தெ. இ. பிலிம் வர்த்தக சபை— | 25000-00 |
| மொடர்ன் தியேட்டர்ஸ்— | 25000-00 |
| பிரசாத் புரொடக்ஷன்ஸ்— | 25000-00 |
| தேவர் பிலிம்ஸ்— | 25000-00 |
| சுந்தர்லால் நஹ்தா— | 20000-00 |
| சிவாஜி கணேசன்— | 20000-00 |
| சிவாஜி கணேசன் சேர்த்ததும், சிவாஜி பிலிம்ஸ், ராஜாமணி பிக்சர்ஸ் முதலியனவும்— | 10236-00 |
| (ஒரு வளையல், 2 மோதிரம், 21 தங்கப்பவுண்) | |
| பி. சரோஜா தேவி— | 10000-00 |
| ஏ. எல். சீனிவாசன்— | 10000-00 |
| எஸ். எஸ். ராஜேந்திரன்— | 10000-00 |
| இ. வி. சிறிதர்— | 10000-00 |
| ரேலங்கி— | 10000-00 |
| பீம்சிங்— | 10000-00 |
| வீனஸ் பிக்சர்ஸ் அன்ட் வீனஸ் மூவீஸ்— | 10000-00 |
| விஜயகுமாரி— | 10000-00 |
| எஸ். வி. ரங்கராவ்— | 10000-00 |
| கவிஞர் கண்ணதாசன்— | 7500-00 |
| ஜி. என். வேலுமணி— | 5001-00 |
| பி. எஸ். ராமக்கிருஷ்ணராவ்—(ஒரு தங்க மாலை) | 5000-00 |
| எம். வி. ராஜம்மா— | 5000-00 |
| பி. எஸ். வி. பிக்சர்ஸ்— | 5000-00 |
| பத்மினி பிக்சர்ஸ்— | 5000-00 |
| விட்டலாச்சாரியா— | 5000-00 |
| என். டி. ராமராவ்— | 5000-00 |
| தங்கவேலு— | 5000-00 |
| சினிகிராப்ட்ஸ்— | 5000-00 |
| நம்பியார்— | 5000-00 |
| சித்ரா புரொடக்ஷன்— | 5000-00 |
| கோல்டன் ஸ்டூடியோ | 2500-00 |
| கமலா பிக்சர்ஸ்— | 2000-00 |
| பத்மசிறி பிக்சர்ஸ்— | 1001-00 |
| டி. ஆர். ராஜகுமாரி | 1001-00 |
| கசினோ தியேட்டர்— | 1001-00 |
| ஏ. ஆர். தாமோதரமுதலியார்— | 1001-00 |
| ஜி. உமாபதி— | 1001-00 |
| சௌகார் ஜானகி— | 1001-00 |
| கே. சங்கர்— | 1000-00 |
| ஸ்ரீ சம்பு பிலிம்ஸ்— | 1000-00 |
| ராஜசுலோசனா— | 1000-00 |
| ஜி ராமநாதன்— | 1000-00 |
| சிவாஜி பிலிம்ஸ்— | 858-25 |
| கோல்டன் ஸ்டூடியோ தொழிலாளர்கள்— | 518-26 |
| மிட்லண்ட் தியேட்டர்— | 505-88 |
| பி. சுசீலா— | 500-00 |
| எஸ். பி. கிறியேஷன்ஸ்— | 101-00 |
| கமலாலயா— | 101-00 |
| பி. வி. பிலிம்ஸ்— | 101-00 |
| சிவாஜி பிறிண்டர்ஸ் அன்ட் கலைஞன்— | 101-00 |
| டின்ஷா கே. தெஹ்ராணி— | 191-00 |
| கலாலயா— | 101-00 |
| ஏ. நாகேஸ்வரராவ்— | 55 தங்கப் பவுண் |
| கே. எஸ். கோபாலகிருஷ்ணன்— | 5000-00 |
| ஜமுனா— | 5000-00 |
| சுப்பு அன்ட் கோ— | 2501-00 |
| மேகலா டாக்கீஸ்— | 2501-00 |
| ஏ. மஜீத்— | 2500-00 |
| (16- எம். எம். படம் காட்டும் கருவி) | |
| டைரக்டர் பஞ்சு— | 2500-00 |
| கே. வெங்கட்ராமன்— | 2001-00 |
| சாவித்திரி சேர்த்தது— | 1001-00 |
| ஏ. ஆர். வி. பிக்சர்ஸ்— | 1001-00 |
| ஸ்பைடர் பிலிம்ஸ்— | 1001-00 |
| தேவிகா— | 1000-00 |
| பி நீலகண்டன்— | 1000-00 |
| கும்மடி— | 1000-00 |
| பிராட்வே தியேட்டர்— | 1000-00 |
| சன் தியேட்டர்— | 1000-00 |
| சரவண பிலிம்ஸ் ஊழியர்கள்— | 720-00 |
| செலக்ட் டாக்கீஸ்— | 500-00 |
| புத்தா பிக்சர்ஸ் ஊழியர்கள்— | 100-00 |
| (ஒரு தங்கப் பவுண்) | |
| தெ. இ. பிலிம் வர்த்தக சபை சிப்பந்திகள்— | 71-00 |
| பாரத் சித்ரா— | 50-00 |
| ஹரணி— | 25-00 |

வி எஸ். லட்சுமணன், ஆனந்தா பிக்சர்ஸ், 15 கிராம் நிறையுள்ள தங்க ஒட்டியாணமும். 200 கிராம் தங்கமும்.

### வட இந்தியாவில்

வட இந்தியத் திரை உலகிலுள்ள பல நடிகர்களும் சினிமா உலகப் பிரமுகர்களும் பாதுகாப்பு நிதிக்கு வாரி வழங்கினர்.

விபரம்:

| | |
|---|---|
| ராஜ்கபூர்— | 50000-00 |
| திலிப்குமார்— | 50000-00 |
| மீனகுமாரி— | 50000-00 |
| சங்கர்—ஜெய்கிஷன்— | 50000-00 |
| வைஜயந்திமாலா— | 25000-00 |
| வஹிதா ரஹ்மான்— | 25000-00 |
| ராஜேந்திரகுமார்— | 25000 00 |
| ஷம்மி கபூர்— | 25000-00 |
| நஸீம், சயிராபானு— | 20000-00 |
| தேவ் ஆனந்த்— | 20000-00 |
| குருதத்— | 20000-00 |
| கமல் அம்புரோகி— | 15000-00 |
| தாராசந்த் பரஜத்யா— | 11000-00 |
| ஆஷா பரெக்— | 10000-00 |
| லதாமங்கேஷ்கார்— | 10000-00 |
| சதனா— | 10000-00 |
| நந்தா— | 10000 00 |
| பால்ராஜ் சாஹினி— | 10000-00 |
| ராஜேந்திர கிருஷ்ணா— | 5000-00 |
| இந்திய செய்திப் படத்துறையாளர்— | 2500-00 |
| [illegible] | 1001-00 |
| ஹேமந்த் குமார்— | 1001-00 |



**எம். ஜி. ஆர். படத்தில் காமராஜர்**

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். பாதுகாப்பு நிதிக்காக தயாரிக்கும் ஒரு பிரசாரப் படத்தில், தமிழ்நாடு முதல் அமைச்சர் காமராஜர் நடிக்கிருர் என்று தெரிகிறது.

## சிறந்த நடிகர் நடிகையர் தேர்வு

மிஹிந்துமாவத்தை பாடசாலை மண்டபத்தில் எதிர் வரும் ஞாயிறு மாலை வித்துவான் இ. சி. சோதிநாதன் தலைமையில் "எதனைக் கண்டான்" என்னும் நாடகம் நடைபெறவிருக்கிறது.

இதில் பங்கு கொள்ளும் நடிகர், நடிகைகள் மத்தியில் ஒரு போட்டி ஏற்படுத்தி சிறந்த நடிகர், நடிகையர் தேர்ந்து எடுக்கப்படுவார்கள்.



நான் பிரயாணம் புறப்பட்டு விட்டேன், நீயும் வருகிருயா? என்று எம். ஆர். ராதா கேட்பது சாரதாவுக்காகத் தான். ஏ. எல். எஸ். தயாரிப்பான 'சாரதா' இப்பொழுது சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில் பவனி வருகிருள்.



'ராஜாதி ராஜன்' (King of Kings) என்ற பெயரில் ஆங்கிலத்தில், எம். ஜி. எம். கம்பெனியார் தயாரித்த இயேசுநாதர் சரிதை விரைவில் இலங்கையில் திரையிடப்பட விருக்கிறது. இளோடியாவாக நடிக்கும் விவேகாலின்ட் போசும், ஹெரொட் அன்டி பஸ்ஸாகத் தோன்றும் பிராங்க் திரிங்கும் இப்படித் தோன்றுகின்றனர்.

# இராணுவப் பின்னணியில் உருவாகும் நாடகம்

## இந்திய பாதுகாப்பு நிதிக்காக 'மண்ணுக்கு உயிர்'

'மனித வலை' நாடகத்தை எழுதி, டைரக்ட் செய்த கே எம். வாசகர் அடுத்து 'மண்ணுக்கு உயிர்' என்ற நாடகத்தை எழுதியுள்ளார். இந் நாடகத்தின் டைரக்ஷன் பொறுப்பை லெனின் மொருய்ஸ் ஏற்க, கிதார் தயாரிப்பை ஏற்றுள்ளார்.

சீன-இந்திய எல்லைப் பிரச்சினையைப் பின்னணியாகக் கொண்ட இந்நாடகம், ஒரு இராணுவ வீரனின் வீர காவியமாக அமையுமெனத் தெரிகிறது.

இலங்கையில் முதல் முதலாக இராணுவக் கதையொன்றை மேடையேற்றவும், போர்க்காட்சிகளைத் தத்ரூபமாகக் காட்டவும் ஏதுவாக, கதாசிரியரும் டைரக்டரும் இலங்கை இராணுவ அதிகாரி ஒருவரை இதன் பொருட்டுக் கலந்தாலோசித்துச் செயல்படுகின்றனர்.

இந்நாடகத்தில் ஏ. கிதார், மனோகரன் மயில்வாகனம், கே. எம். வாசகர், சிக்கந்தர், ராஜாமணி முதலியோர் முக்கிய பாத்திரமேற்று நடிக்கின்றனர்.

இந்நாடகத்தின் மூலம் வசூலாகும் பணம் முழுவதும் இந்திய யுத்த நிதிக்கே அளிக்கப்படுமெனத் தெரிகிறது. 'மண்ணுக்கு உயிர்' பொங்கல் வெளியீடாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.



என்னையா? நீர் பிரயாணம் செல்லுவதற்கு நான் துணை வரவேண்டுமோ? என் அத்தான் அறிந்தால் உம்மை அடித்து விரட்டி விடுவார். அவர் வாறத்துக்கு முன்னே நடையைக் கட்டுமையா! என்கிருர் விஜயகுமாரி—'சாரதா'வில்.

## ஹிந்தியில் 'நெஞ்சில் ஓர் ஆலயம்'

ஸ்ரீதர் தயாரித்த 'நெஞ்சில் ஓர் ஆலயம்' ஸ்ரீதராலேயே ஹிந்தி பேசப் போகிறது. 'மந்திர்' என்ற பெயரிட்டு இப்படம் தயாரிக்கப்படுகிறது. ஒரே மாதத்திற்குள்ளாக 'நெஞ்சில் ஓர் ஆலயத்'தைத் தயாரித்த ஸ்ரீதர் 'மந்திரை'யும் ஒரே மாதத்தில் தயாரித்துத் திரையிடுவாராம்.

ராஜேந்திர குமார், மீனகுமாரி, ராஜ்குமார், மெஹ்மூத் முதலியோர் இப்படத்தில் தோன்றுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் குரல்

## உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலை நேரப் பிரச்சினை

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை ஒரு நேரமாகவோ அல்லது இரு நேரமாகவோ இயங்க வேண்டுமென்ற பிரச்சினை பற்றி ஒரு தமிழ்த் தினசரியில் 'ஒரு நேர பாடசாலையாக இயங்க வேண்டும்' என்ற தலைப்பில் பிழையான செய்தி ஒன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. உண்மையில் நடந்ததை நான் இங்கு வெளிப்படுத்த விரும்புகிறேன்.

சென்ற மாதம் 29-10-62 திங்கட்கிழமை இரவு 7 மணியளவில் உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டம் அப் பள்ளிக்கூட மண்டபத்தில் திரு. அ. இளையதம்பி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அப்போது 26 பேர் வந்திருந்தார்கள், இதில் 8 பேர் ஆசிரியர்கள். 18 பேர் பெற்றோர்கள். தலைவர் பிரச்சினைகள் சிலவற்றைக் கிளப்பிய படியால் கூட்டத்தை ஒத்திப் போட வேண்டியதாயிற்று. பரிசோதகர் திரு. ஆர். பாலசிங்கம் அவர்களும் வந்திருந்தார்கள். 4-11-62ல் நடந்த நிர்வாக சபைக் கூட்டத்தில் 12-11-62ல் பொதுக்கூட்டத்தை வைக்கலாமெனத் தீர்மானிக்கப்பட்டு அவ்வாறே 12-11-62 இல் பொதுக் கூட்டம் கூட்டப்பட்டது. அன்றும் திரு. பாலசிங்கம் வந்திருந்தார்கள்' இக் கூட்டம் கூட்டப்பட்ட நோக்கம், இரு நேரப் பாடசாலையாக்குவதா, ஒரு நேரப் பாடசாலையாக்குவதா என்பதை அறிவதற்காகவே. உரும்பராயில் வசிக்கும் பெற்றோரில் எவராவது ஒரு நேர, இரு நேரப் பிரச்சினையைக் கிளப்பியதுண்டா என்பதே எமது வினா.

இப் பாடசாலை தொடங்கிய காலம் தொட்டு இரு நேரமாக நடந்தது. சென்ற இரண்டாண்டுகளாக ஒரு நேரப் பாடசாலையாக நடக்கின்றது. இரு நேரமாக இருந்த பாடசாலையை ஒரு நேரமாக்கும் பொழுது பெற்றோர்கள் வினவினார்களா? ஒரு நேரத்தை இரு நேரமாக்குவதற்கு எமது விருப்பம் வேண்டுமாம். ஏன்? இதில் அக்கறை உள்ளவர்களாயிருந்தால் அன்றே பெற்றோர் இப் பிரச்சினையைக் கிளப்பியிருப்பார்களே. அவர்களுக்கு இதில் அக்கறையில்லாதது தெளிவு.

பெற்றார்- ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் திரு. சி. த. பொன்னுத்துரை பாடசாலை இருநேரமாக்கப்படவேண்டுமெனப் பிரேரித்தார். திரு. பெ. கந்தசாமி அனுவதித்தார். பின் திரு. சிவப்பிரகாசம் ஒரு நேரமாக்கப்பட வேண்டுமெனப் பிரேரித்தார். திரு. க. சிவஞானம் அனுவதித்தார். இதே நேரத்தில் திரு. எஸ். நல்லையா எழுந்து தானும் அனுவதிப்பதாகக் கூறி விளக்கமும் கொடுத்தார்— இனிமேல் எங்கள் பிள்ளைகளுக்கு வேலை கிடைக்காது, மண்ணைக் கிண்டித்தான் தாம் தம் வயிற்றை நிரப்ப வேண்டும் என்றார். திரு. சி. த. பொன்னுத்துரை இப் பள்ளிக் கூடத்தில் மேல் வகுப்பில் படிப்பவர்கள் பெண்களாயிருந்தால் கமம் செய்யும் பெற்றோர்களுக்கு இவர்களால் என்ன உதவி செய்ய முடியும்? பெண்கள் விவசாயம் செய்யப் போவதில்லை என்றார். திரு. எஸ். நல்லையா நிர்வாக சபையில் அங்கம் வகிக்கவில்லை. ஒரு தினசரி இதழில் உள்ளது போல் அவர் சொல்லவேயில்லை. பிரேரணைகள் வருவதற்கு ஒரு சில நிமிடங்களுக்கு முன்பு பெண் மணிகளும் வேறு சில ஆண்களும் சமுகந் தந்தார்களென்பது குறிப்பிடத்தக்கது. ஒரு நேரத்தை ஆதரித்து 26 வாக்குகளும், இரு நேரத்தை ஆதரித்து 6 வாக்குகளும் கணக்கிடப்பட்டன. தலைமை ஆசிரியரும் ஒரு நேரத்தை ஆதரித்து, முற்பகுதியில் பேசினார். வாக்களிக்கவில்லை. திரு. ச. இராசதுரை வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. இதிலிருந்து ஒரு சில பெற்றோர்கள் இரு நேரமாக்கப் பிரசாரம் செய்தார்களா? தலைமை ஆசிரியர் வீடுகளுக்குப் போய் ஒரு நேரத்துக்கு ஆதரவு தேடினாரா? என்பது தெளிவாகட்டும். எனது அபிப்பிராயம் காரணமில்லாமல் பாடசாலை ஒரு நேரமாக்கப்பட்டதென்பதே.

ஒரு நேர, இரு நேரப் பிரச்சினை காரணமாக விளைந்த அபிப்பிராய பேதத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டு, பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே பிளவை உண்டாக்க முயல்கிறார் தலைமை ஆசிரியர். இது வேண்டத் தகாத செயல். எங்கள் பிள்ளைகளின் கல்வியையும் பாதிக்கும். நிர்வாகம் சரியாகவிருந்தால் பூசல்கள் தாமாகவே இருந்த இடம் தெரியாது போய்விடும்.

பெற்றோர்களாகிய எமக்குப் பள்ளிக்கூட நேரத்தில் அக்கறையில்லை. ஆசிரியர் பெற்றோர்களாகிய எங்களுக்குள்ளே வேற்றுமை உண்டாக்காமல் விட்டால் அதுவே போதும்.

சி. த. பொன்னுத்துரை.
(பெற்றார்- ஆசிரியர் சங்கச் செயற் குழு அங்கத்தவர்)
உரும்பராய் தெற்கு,
உரும்பராய்.

## இந்தியா மீது...

(2-ம் பக்கத் தொடர்ச்சி

தின் வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றம் ஏற்படலாம்; சீனர்களின் ஆக்கிரமிப்பை முறியடிப்பதற்கு இந்தியா நடுநிலைமை வகித்து ஒன்றையுமசாதித்து விட முடியாது. இந்தியப் பிரதேசம் பறிபோவதை வெளிநாட்டு உதவி மூலம் தான் தடுத்து நிறுத்த முடியும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. மூன்றாவது உலக மகா யுத்தம் மூளக் கூடிய ஆபத்தான நிலைமை உருவாகிக் கொண்டிருக்கிறது என்று கூறுதல் மிகையாகாது. சீன அரசாங்கம் படைகளை வாபஸ் செய்து எல்லைத் தகராற்றைச்சுமுகமாகத் தீர்த்துக் கொள்வதற்கு முனையுமா? அல்லது? .........யாரினால் பதில் கூற முடியும்?

## சிதம்பரத்தில் நாவலர் குருபூசை விழா

திங்கட்கிழமை 19-11-62 காலை 7 மணிக்கு ஞானப் பிரகாசம் தீர்த்தக் கரையில் உள்ள சேக்கிழார் கோயிலிலிருந்து நாவலர் திருவுருவப்படம் பெருங் கூட்டத்தோடும், மூன்று பள்ளிகளின் மாணவர்களும் புடைசூழச் சிவபுராண பாராயணத்தோடும், உயர் நிலைப்பள்ளி நடுமன்றத்தினை யடைந்தது. 10 மணிக்கு நாவலர் பெருமான் உருவப் படத்திற்கு வழிபாடு மிகச் சிறந்த முறையில் நடக்கக் குருபூசை நிறைவேறியது. மாணவ மாணவிகளுக்கு பூந்தியும், வாழைப்பழமும் வழங்கப்பட்டன.

11 மணிக்கு தில்லைக்கூத்தனுக்குத் திருமுழுக்கு வழிபாடு நடைபெற்றது. 12 மணிக்குமேல் ஏறக்குறைய 300 பேர்களுக்கு நண்பகல் உணவு அளிக்கப்பட்டது.

பிற்பகல் 4 மணிக்கு உயர்திரு. எஸ். சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பமாகியது. அப்போது நாவலர் கல்வி நிலையங்களின் நட்பொறுப்பாளர் உயர்திரு. தி. க. இராசேசுவரன் பி. ஏ. அவர்கள் தமது வரவேற்புரையில் நாவலர் பெருமான் அவர்களைப் பற்றி பல பெரியார்கள் அளித்துள்ள மதிப்புரைகள் பலவற்றை எடுத்து இயம்பினார்கள்.

பின்னர் தலைவர் நாவலர் பெருந்தகையின் மிகச்சிறந்த தமிழ்ப் பண்பாடுகள், சிவத் தொண்டு, தமிழ்த் தொண்டு முதலியன பற்றி நன்கு விளக்கிப் பேசினார்கள்.

நாவலர் பாடியருளிய கீர்த்தனைகள் இனிய குரலுடைய பிள்ளைகளால் பாடப் பெற்றன. கீர்த்தனைகளில் வெற்றி பெற்ற 5 பேர்களுக்கு வெண் பொற்காசுகள் பரிசாக அளிக்கப்பட்டன. பரிசுகளுக்கான இசைப் போட்டி 16-11-62 வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெற்றது. 30 மாணவர்கள் போட்டியிட்டனர்.

நடுநிலையாளர்களாக சாகித்திய கர்த்தா பிரம ஸ்ரீ ஸ்வர்ண வேங்கடேச தீட்சிதர், எஸ். துரைசாமி எம். ஏ. (அண்ணாமலை சர்வகலாசாலை), இராமச்சந்திரன் எம். ஏ. (அண்ணாமலை சர்வகலாசாலை) ஆகியோர்கள் பதிவிவகித்துத் தீர்ப்பளித்தனர். ஆண்களுக்கு 2 பரிசும், பெண்களுக்கு மூன்று பரிசும் கொடுப்பது என நிர்ணயிக்கப்பட்டது.

அதன்பின் கலைமகள் ஆசிரியரும் சிறந்த எழுத்தாளருமாகிய திரு. கி. வா. ஜெகந்நாதன் அவர்கள் நாவலர் பெருமான் ஆக்கியளித்த அரும்பணிகள் பலவற்றை எடுத்துக்காட்டி சைவப் பிரகாச வித்தியாசாலை என்பதற்குப் பொருள் விளக்கங்கள் உரைத்தார்கள். இச் சொற்பெருக்கு ஒன்றரை மணி நேரம் நிகழ்ந்தது. அங்குள்ள சிறுவர் முதல் பெரியோர் வரை யாவரும் பெரும் மகிழ்ச்சி அடைத்தனர்.

இதற்கிடையில் மாணவியர்கள் நாவலர் பெருமான் பேரில் அம்மானை, கும்மி, கோலாட்டம், முதலியவற்றைப் பாடியாடினர். சமயப் பாட போட்டியில் வெற்றி பெற்ற 25 மாணவர்களுக்குப் புத்தகங்கள் பரிசாகக் கொடுக்கப்பட்டன. பின்னர் தலைவர் தமது பின்னுரையில் நாவலர் பெருமானின் அரும்பணிகள் யாவையும் சுருக்கிக் கூறி திருக்களாஞ்சேரி சிவாலயத்தைப் புதுக்குவதைப் பற்றியும், தாய்மார் பிடியரிசி சேர்த்தளிப்பதால் விளையும் சிவபுண்ணியத்தை பற்றியும் விளக்கினார்கள்.

இவ்வாறாக இவ்வாண்டுக் குருபூசை முன் நிகழ்ந்த குரு[illegible] மிகச் சிறந்துள்ளதாக மிகவும் இனிமையான முறையில் நிறைவேறியது.

## அன்பு மகள்...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

வாழத்தெரிய வேண்டும்'' என்றெழுதிக் கையொப்பமிட்டார் திரு. வை. சிற்றம்பலம் அவர்கள். வவுனியா நெளுக்குளத்தில் வாழ்பவராய இவர் தமிழரசுக் கட்சியில் நீங்காத பற்றுக் கொண்டவர். ஆரம்பகாலம் தொட்டு கட்சித் தொண்டராகப் பணி செய்பவர். அமைதியான போக்கும், எதையும் சிந்தித்துச் செய்யும் ஆற்றலும் கொண்டவர்.

### பி. ஆர். செல்வநாயகம்

கைச்சாத்தை மட்டும் இட்டார் திரு.பி. ஆர். செல்வநாயகம் அவர்கள். இவர் மட்டக்களப்பு நகரசபை உபதலைவர்; இளைஞர். தாடி வளர்த்தபடி துள்ளித் திரிகின்றார். குழந்தைத் தன[illegible] நிரம்ப உள்ளவர்.

### தா. சிவசிதம்பரம்

"நண்ப! புதுமை கண்டு வியக்க, திறமை கண்டு களிக்க எடுக்கும் முயற்சிகளில் விழிப்புடனிரு'' என எழுதி கைச்சாத்தையிட்டார் திரு. தா. சிவசிதம்பரம் அவர்கள். இவர் வவுனியாப் பிரதிநிதி ஆவர். எனது நெடுநாளைய நண்பன். எம். பி. ஆவதற்கு முன்னமே ஒன்றாகி வாழ்ந்தவர்கள்; நட்புரிமையுடன் இருந்தவர்கள்.

யான் ஹிங்குருக்கொடா கனிஷ்ட பாடசாலை ஆசிரியராயிருந்த போது விவசாய உத்தியோகத்தருக்குரிய (Village Cultivation Officer) பயிற்சியும் ஹிங்குருக்கொடாவிலேயே நடந்தது. அப்பயிற்சிக்கு சிவசிதம்பரம் அவர்கள் வந்தார்கள். ஹிங்குறக்கொடாவில் தமிழர் மிகக் குறைவு. சில கடைக்காரர், சில உத்தியோகத்தர், அத்துடன் நாங்கள் மட்டுமே. ஆகவே எல்லோரும் ஒட்டுறவாக இருப்போம். சிவசிதம்பரம் அவர்கள் நல்ல ஒரு ரசிகன். புத்தகங்கள் படிப்பதில் ஆவல் மிகக் கொண்டவர். எழுத வேண்டும் என்ற ஆவலும் நிறைந்தவர். ஆகவே நாங்கள் புத்தகங்கள் படிப்பதில் பழகினோம்; நண்பரானோம். ஒவ்வொரு மாலையும் என்னைக் கண்டு பேசுவார். படம் பார்க்கப் போவோம்; காடுகள் எல்லாம் சுற்றுவோம். எந்தவித மறைப்புமற்ற நல்ல நண்பரானோம்! அவரது பயிற்சி முடிந்து வெளியேறும் போது கூடக் கண்ணீருடன் பிரிந்தோம். பின்பு அடிக்கடி யாழ்ப்பாணத்தில் இருவரும் சந்தித்தோம். இந்நிலையில் அவர் வவுனியாப் பிரதிநிதியானார். சுயேச்சையாளராகவே பிரதிநிதியானார். எமது கட்சியிலில்லையே என்ற வேதனையிருப்பினும், கொள்கைக்கு முதலிடம் கொடுப்பவன் யான். அதனால் கடந்த தேர்தலில் அவரை எதிர்த்துப் பிரசாரம் செய்யவும் நேர்ந்தது. நட்புக்கும் கொள்கைக்குமிடையில் போராட்டம்; எனினும் நட்பில் எந்தவிதத்திலும் குந்தகம் ஏற்பட முடியவில்லை.

இங்கு தடுப்புக் காவலில் ஒன்றாக வாழ நேர்ந்து விட்டது. வவுனியாவில் அறப்போர் செய்து— மொழி உரிமை காப்பதில் தயங்கேன் என்பதை உறுதியாக்கி விட்டார் சிவசிதம்பரம் அவர்கள். இங்கு கூட வாதமிடுகின்றோம், எங்கள் கட்சியின் கொள்கை பற்றி வாதாடுகின்றோம். முன்பு எப்படி எனது நல்ல நண்பராகக் காணப்பட்டாரோ அப்படியே இப்போதும் காணப்படுகின்றார். எந்தவித மாறுபாட்டையும் காணவில்லை. முன்பு போலவே பேசுகிறார். நடக்கின்றார்; தாடி வளர்க்கின்றார்; ஓவியங்களைத் தனது அறையில் தீட்டுகின்றார்; மகாத்மா காந்தி, புத்தர், வ. உ. சி., பாரதியார், யேசு ஆகியோரைப் பென்சிலினால் உயிரோவியமாக்கியுள்ளார். கட்சிபேதம் காட்டாது, நட்புரிமையுடன் எல்லோருடனும் பழகுகின்றார். இவருக்கு நல்ல எதிர்காலமுண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது.

உனது அன்பு அப்பா,
புதுமைலோலன்.

(தொடரும்)

## குருச்சேவின்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கொண்டு கண் மூடித்தனமாக நமது நாட்டுக் கொம்யூனிஸ்டுக்கள் இருப்பதோடல்லாமல் மூடத்தனமான அறிக்கைகளையும் அல்லவா வெளியிடுகிறார்கள்.

இது இவர்களது சர்வாதிகாரத்தையும், நியாயமற்ற போக்கையுமே காட்டுகிறது.

ஏழைகளுக்காகத்தான் பாடுபடுகிறோம் என்று கூறி முதலைக் கண்ணீர் வடிக்கும் இப் பிற்போக்கு வாதிகளின் பொதுவுடமைத் தன்மை, இன்று மக்களுக்கு வெள்ளிடை மலை போல் தெரிகிறது. எனவே இவர்கள் அரசியல் வாழ்வு நீண்ட காலம் நிலைத்து நிற்க முடியாது.''

இந்தியாவின் பாதுகாப்பு நிதிக்கு இயன்ற உதவிகளைச் செய்யும் வண்ணம் மக்களை அவர் வேண்டிக் கொண்டார்.

"எல்லைப் போரில் இறுதி வெற்றி இந்தியாவுக்கே, ஜெய் ஹிந்த்! திருமலை வாழ் தமிழ் பேசும் மக்கள், சிங்களவர்கள் ஆகியோர் அனைவரும் இந்தியாவின் பக்கமே சார்புடையவர்களாக விருப்பர். சீனரை எதிர்த்து இந்தியா எடுக்கும் நடவடிக்கைகளுக்கு என்றுமே ஆதரவளிப்பர்'' என்று ஒரு அவசரத் தந்தியையும் இந்திய நட்புறவுச்சங்கத்தினர் நேருவுக்கு அனுப்பிவைத்தனர்.

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அச்சு வேலைகள் எவையாக இருந்தாலும் சரி— அவை கவர்ச்சிகரமாகவும் உங்களுக்குத் திருப்தி அளிக்கும் முறையிலும் செய்து தரப்படும்.

பாடப் புத்தகங்கள், மலர் வெளியீடுகள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், அழைப்பிதழ்கள், வர்த்தக ஸ்தாபனங்களுக்குரிய சகல வேலைகள் யாவும் கச்சிதமாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு இதே அதற்கு உரிய இடம்:

**சுதந்திரன் அச்சகம்,**
தபால் பெட்டி 1183.
194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு-12.

தந்தி : சுதந்திரன் போன் : 3411

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மர்மத் தொடர் கதை




எனது கிராமம்

## வண்ணார்பண்ணை

—எஸ். கே. சண்முகநாதன்—

யாழ்ப்பாணத்திற்கு அணித்தாயுள்ள கிராமம் தான், நான் வசிக்கும், வண்ணை நகர். இங்குள்ள மக்கள் பல கைத்தொழில்களையும் செய்து வருகின்றனர். இக் கைத்தொழில்களில் பிரசித்தி பெற்று விளங்குவது சிற்பத் தொழிலே. நமது கிராமச் சிற்பத்தொழில், இந்தியச் சிற்பக் கலைஞர்களைக் கூடக் கவர்ந்த தென்ருல் சொல்லவா வேண்டும்?

எனது கிராமத்தில், பல கோவில்களும், பாடசாலைகளும், ஓய்வு நேரங்களில் பாடசாலைப் பிள்ளைகள் விளையாடுவதற்குப் பல விளையாட்டு நிலையங்களும், நன்கு காட்சியளிக்கின்றன! நாடகப் பிரியர்கள் ஒவ்வொருவரும், கோஷ்டியாகச் சேர்ந்து, பல நாடக மன்றங்களையும் அமைத்துள்ளனர். குறிப்பிட்ட நாடக மன்றங்களில், 'வண்ணை கலைவாணர் நாடக மன்றம்' மிகவும் சிறப்புற்று விளங்குகின்றது.

இங்கு நவீன சிறு மார்க்கட, தபாற் கந்தோர், மேலும் பல வசதிகளிருக்கின்றன. இங்குள்ள மக்கள் மூலையிலே முடங்கிக் கிடக்காது, பிற ஊர்களுக்கும் சென்று, (குடியேற்றத் திட்டத்தின் கீழ்) விவசாயங்களிலீடுபட்டு வருகின்றனர். சிலர் அங்கங்கே வீடுகளைக் கட்டிக் கொண்டும் தொழிலைச் செய்கின்றனர்.

இங்கு சிறு வயற் காணிகளுமுண்டு. ஆனால், விவசாயம் செய்வதற்குப் போதுமானதாக இல்லாததுதான் பெருங் குறை.

வண்ணார்பண்ணையில் "இலங்கைத் தமிழரசுக் கட்சி"க்குச் செல்வாக்கதிகம். மக்கள் அங்கங்கே, பல கிளைகளை அமைத்துள்ளனர்.

இங்கு வாழும் மக்கள் மற்றவர்களோடு, பண்பாகப் பழகுவதில் மேன்மை மிக்கவர்கள். இத்தனையும் ஒருங்கேயமைந்த இக் கிராமம் என்றென்றும் முன்னணியில் நிற்கிறது.

## நெஞ்சம் பதைத்தது!

''அக்கரை மாணிக்கம்''

அண்டை நாட்டில் போராமே,
அண்ணு அதை நீ கூருயோ?
கண்டது இல்லை ஆனுலும்,
கண்ணு கேளு, கூறுகிறேன்!

மன்னும் இமய மலையோடு
மற்றய எல்லாப் பகுதியையும்
தன்னுள் அடக்கும் வண்ணமுடன்
தருணம் பார்த்தது செஞ்சினம்.

சினத் தலைவர் மா சேதுங்
இந்தியப் பிரதமர் நேருவுடன்
தேனைப் போல பழகியதால்,
தெரிந்திட வில்லை நேரு இதை.

சாந்திச் சுடராய்ச் சர்வகலா
பண்டிதனுக அவதரித்த
ஏந்தல் புத்தன் போதனைகள்
எல்லாம் மறந்தது செஞ்சினம்.

பேருக்குப் பஞ்ச சிலங்கள்
பேசித் திரிந்த செஞ்சினம்
நேருக்கு எதிரி ஆகியதால்
நெஞ்சம் பதைத்தது உலகமெலாம்.

## அப்பாவும் மகனும்

(அப்பா—கந்தசாமி வாத்தியார்
மகன்—10 வயதும் நிரம்பாத சிறுவன் குமார்)

மகன் : அப்பா! என்னைச் சந்திர மண்டலத்துக்கு அழைத்துப் போ, அப்பா!

அப்பா : சந்திர மண்டலத்துக்குப் போக, விஞ்ஞானிகள் இன்னும் வழி கண்டு பிடிக்க வில்லையே! கண்டு பிடித்ததும் நான் உன்னைக் கட்டாயம் அழைத்துப் போவேன்.

குமார் : ஊஹூம்......நீ பொய் சொல்லுகிருய், அப்பா. அடுத்த வீட்டுக்குப் புதிதாக வந்திருக்கும் மாமாவும், மாமியும் தாங்கள் தேன் நிலவுக்குப் போட்டு வந்ததாகச் சொன்னுங்களே!

அப்பா : ?!???!!!

(சென்ற வாரத் தொடர்ச்சி)

மதங் கொண்ட யானை ஒன்று அவனைநோக்கி ஓடி வந்து கொண்டிருந்தது. என்ன செய்வதன்றறியாது ஒரு கணம் திகைத்தே விட்டான். மறுகணம் தன்னைச் சமாளித்துக் கொண்டு பக்கத்திலிருந்த ஒரு மரத்தில் தாவி ஏறி மறைந்து கொண்டான். உடல் 'குப்' என்று வியர்த்துக் கொட்டியது. நா வறண்டு விட்டது. கால்கள் நடுங்கிக் கொண்டேயிருந்தன. யானை மணியிருந்த மரத்தையடைந்ததும் மீண்டும் பயங்கரமாகப் பிளிறியது.

யானை மெள்ள மரத்தைப் பிடித்து அசைத்தது. அவசரத்தில் ஒரு சிறிய மரத்தில் ஏறிக்கொண்ட தவறை அப்போது தான் உணர்ந்தான். 'ஆண்டவா நீ தான் துணை' என்று கண்களை இறுக்கி மூடிக் கொண்டு இடைவிடாது பிரார்த்தித்தான்.

யானை ஒரு குளத்தை நோக்கி ஒடிப்போய் தண்ணீரை உறிஞ்சிக் கொண்டு வந்து மணி ஏறியிருந்த மர அடியில் வேர்கள் கிளம்பக் கூடியவாறு நீரைச் சிந்தியடித்தது. மீண்டும் யானை மரத்தை அசைத்த போது முன்னைவிடச் சற்று அதிகமாக அசைந்தது. யானை மீண்டும் குளத்தை நோக்கி ஓடியது.

அபாயமான வேளையில் மூளை அவசரமாக வேலை செய்வது இயல்பு தானே.... மணியின் மூளையும் யானையிடமிருந்து தப்புவதற்கு வழி கண்டுபிடிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தது. திடீரென்று மணியின் முகம் மலர்ந்தது.

மணி ஏறியிருந்த சிறிய மரத்திலிருந்து பென்னம் பெரிய கொடியொன்று பக்கத்து ராட்சத மரத்தில் சுற்றிப் படர்ந்திருந்தது. மின்னல் வேகத்தில் தனது மேற்சட்டையைக் கழற்றித் தானிருந்த மரத்தில் சுற்றிவிட்டு அப்பெரிய கொடியின் உதவியால் எப்படியோ பக்கத்து ராட்சத மரத்தில் ஏறி மரத்தோடு மரமாகப் பதுங்கிக் கொண்டான்.

சற்று நேரத்திற்கெல்லாம் மீண்டும் நீரோடு வந்த யானை முன்போலவே மர வேரில் சிந்தியடித்த பின் பலமாக உதைத்துப் பல பெரிய வேர்களை அறுத்தது. பின்பு உக்கிரத்தோடு மரத்தை முட்டி மோதியது. அடுத்த கணம் 'மளார்' என்ற ஒலியுடன் மரம் பெயர்ந்து விழுந்தது

மதங்கொண்ட யானை மணியின் மேற்சட்டை உட்பட மரத்தைத் தூள் தூளாக மிதித்து நசுக்கியது. பின்பு... பயங்கரமாகப் பிளிறிக் கொண்டு எங்கோ ஓடி மறைந்தது. யானை மறையும் வரை கண்களை மூடிக் கொண்டிருந்த மணி திடீரென்று கண்களைத் திறந்தான். அடுத்த நிமிடம்...... 'வீல்' என்று பயங்கரமாகக் கத்தினுன்.


அவன் இருந்த மரத்தில் ஒரு பெரிய மலைப்பாம்பு வாயைப் பயங்கரமாகப் பிளந்து கொண்டிருந்தது.

(தொடரும்)

## பொம்மைக்கும் மரணச் சடங்கு!

யப்பானில் குழந்தைகளின் விளையாட்டுப் பொம்மைகள் உடைந்த பின் எறிந்து விடுவதில்லை. அவற்றை பௌத்த முறைப்படி நல்லடக்கம் செய்வார்கள்.


## உங்களுக்குத்... ...தெரியுமா?



ஐதரசன் உருக்கைப் பொருளாதார, சமாதான வழிகளில் பிரயோசனப் படுத்துவதற்கான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ள மேல் நாட்டு விஞ்ஞானிகள், 60 லட்சம் சதசமபதமுள்ள பாகை வெப்பத்தை உண்டாக்கியுள்ளனர். சூரியனின் அடித்தள வெப்பத்திலும் [illegible] இது ஆயிரம் மடங்கு [illegible] மாகும்.



சில இடங்களின் பெயர்களுக்கு தப்பான கருத்துக்களும், அபிப்பிராயங்களும் காரணமாகி விடுவதுமுண்டு. 'அமேஸன் ஆறு' என்ற பெயர் கிரேக்க காவியத்தில் இடம் பெறும் பெண்களைச் சுட்டியே வந்தது. இந்த ஆறு உள்ள இடத்தில் காணப்பட்ட நீண்ட தலைமுடியும், அரைப் பாவாடைகளும் கொண்ட ஆண்களைக் கண்ணுற்ற ஆதிகால கப்பலோட் [illegible] னர். அவர்கள் அந்த ஆண் களைப் பெண்களென நினைத்து விட்டனர்!



அமெரிக்க செயற்கைக்கிரகம் 'எக்ஸ்புளோரர்'ரின் உள் வெப்பம் 10 தொடக்கம் 30 வரை சதசமபதமுள்ள பாகையளவில் உள்ளது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஆனால், வெளி வெப்பம் சூன்யத்துக்குக் கீழே 100 சதசமபதமுள்ள பாகைக்கும் சதசமபதத்துக்கு மேலே 300 பாகைக்குமிடையே ஊசலாடுகின்றது.

## உங்களிடம்...... ......ஒரு வார்த்தை

சா. தில்லையா, களுவாஞ்சிகுடி— நீங்கள் எழுதி அனுப்ப வேண்டிய கதை, கட்டுரைகள் சிறிய அளவில், ஆனால் சுவாரஸ்யம் மிகுந்ததாக அமைந்திருக்க வேண்டும்.

சி. அலோசியஸ் ரத்தினம்— உம்முடைய பெயர் ஏற்கனவே வந்துள்ளதா இல்லையா என்பதை விரைவில் தெளிவுபடுத்துவேன்.

வே. அரசரெத்தினம்— 'வளர்மதி'யில் ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்கு அதிக இடமிருக்காது. ஆகவே, இளைஞர்கள் படித்தின்புறக்கூடிய கட்டுரைகளை எழுதி அனுப்புங்கள்.

மு. கருணுநிதி— உமது கட்டுரைகள் கால கிரமத்தில இடம்பெறும். அவசரம் வேண்டாம். உமது வாழ்த்துக்களுக்கு நன்றி.

பொ. சிவானந்த நாதன்— உமது சந்தேகத்தை விரைவில் விளக்கி வைப்பேன்.

—வளர்மதி மாமா

## வளர்மதி புதிய மருமக்கள்

3673 பா. வதனு, வேலணை.
3674 சி. தர்மகுலசிங்கம், நுவரெலியா.
3675 ந. தேவக்குமார், காலஏலியா.
3676 சி. தில்லைநடராஜன், உடுப்பிட்டி.
3677 மு. கி. க. கிருஷ்ணு, நாவலப்பிட்டி.
3678 கி. ரா. மாதவன், தெரணியகலை.
3679 ஆர். தேசபந்து, கொழும்பு-2.
3680 சபாபதிப்பிள்ளை யோகரத்தினம், வண்ணுந்துறை, மல்லாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

### தலைமை ஆசிரியர் மறைவுக்கு அனுதாபம்

"ஆசிரியர் ஜோசப் பெர்ணண்டோ அவர்கள் இந்தப் பாடசாலையை இங்கு நிறுவி அதன் மூலம் இப்பகுதித் தமிழ் மக்களுக்கு அரிய சேவை செய்துள்ளார். அவரது திடீர் மறைவு நமக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்"

இவ்வாறு, கிரிலப்பனை ரேமன் கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலையின் தலைமை ஆசிரியர் அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக மேற்படி பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசிய செந்தமிழ் வளர்ச்சி மன்ற திருக்குறள் பாடசாலை ஆசிரியர் திரு. மா. கதிர்வேல் கூறினர்.

கடந்த 18-11-62 ஞாயிற்றுக்கிழமை மாலை செந்தமிழ் வளர்ச்சி மன்றத்தின் ஆதரவில் மேற்படி பொதுக் கூட்டம் நடைபெற்றது. மன்றத் தலைவர் திரு. டேவிற் இராசையா தலைமை வகித்தார். மன்ற உறுப்பினர்களும், பழைய மாணவர்களும், பெற்றோர்களும் காலஞ்சென்ற ஆசிரியர் அவர்களின் சேவைகளைப் பற்றிப் பேசியபின் கீழ் வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின:

கிரிலப்பனை தமிழ்ப் பாடசாலையில் மறைந்த தலைமை ஆசிரியரின் உருவப் படத்தைத் திறந்து வைப்பது.

அன்னாரின் பூதவுடலை அடக்கம் செய்துள்ள இடத்தில் ஞாபகச் சின்னமொன்று கட்டுவது.

ஆண்டுதோறும் அவரது நினைவு தினத்தைக் கொண்டாடுவது.

---

### தேன் தமிழ் மன்றம்

நடு நிலைமைக் கொள்கையில் சற்றேனும் தவருது சனநாயகத்தைக் கடைப்பிடித்து ஆட்சி நடாத்தி வரும் இந்தியாவுடன் அக்கிரமமான முறையில் மண்ணாசை வெறி பிடித்த மா-சே-துங், சூ-என்-லாய் கும்பல், எல்லை என்பதைச் சாட்டாக வைத்துக் கொண்டு போராட்டம் நடாத்தி வருவதை தேன் தமிழ் மன்றம் வன்மையாகக் கண்டிக்கின்றது. இவ்வாறு கொடிகாமம் கட்டைப்பறித்தான் ஆலயமுன்றிலில் நடைபெற்ற இதன் தமிழ்க் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அத் தீர்மானம் மேலும் கூறுவதாவது:

எல்லைப் போராட்டத்தை நடாத்தி எல்லையைக் காப்பாற்ற வேண்டுமென்பதல்ல சீன அரசாங்கத்தின் நோக்கம். வளம் மிகுந்த பகுதிகளைப் பிடித்து, சீன மக்களின் வறுமையைப் போக்கடிக்க வேண்டுமென்பதும் அதன் நோக்கமல்ல! அன்றேல் குடியேற்ற வேண்டுமென்பதும் அதன் நோக்கமல்ல! தங்கள் கொம்யூனிசக் கொள்கையை சர்வாதிகாரமாக ஆசியாக் கண்டமெங்கும் பரப்ப வேண்டுமென்பதே அவர்கள் நோக்கம்! இந்த ஒரே நோக்கத்திற்காகத்தான் இன்று சீனு இந்தியா மீது படையெடுத்திருக்கிறது.

வெலிமடை எம். பி. இராஜரத்தினுவின் உளறலையும் எங்கள் மன்றம் மிக மிக வன்மையாகக் கண்டிக்கின்றது.

தென் இந்தியாவில் சென்ற ஜூலை 19-ல் தி. மு. க. நடாத்திய அகவிலைக் குறைப்புப் போராட்டத்தில் குண்டாந்தடி வீரர்களால் (போலீஸ்) தாக்கப்பட்டுக் கரமிழந்து, காலிழந்து துன்பப்பட்ட, துன்பப்படும் மறத் தமிழர்கட்கு எங்கள் மன்றம் மனம் நிறைந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றது. இப்போராட்டத்தில் சிறை சென்று, மனைவி மக்களையும் காணுது எமன் வாய்ப்பட்ட சிறீவில்லிபுத்தூர் பொற்செழியனுக்கும், கோ. சு. மணிக்கும் எங்கள் கண்ணீரை அர்ப்பணிக்கின்றோம். அவர்களின் உற்ருர், உறவினர்கட்கும் எங்கள் மன்றம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றது.

---

### பழைய மாணவர் சங்கம்

கோண்டாவில் அரசினர் சைவத் தமிழ்க் கலவன் பாடசாலை பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் மேற்படி பாடசாலை தலைமையாசிரியர் திரு. இ. பொ. குமாரசுவாமி தலைமையின் கீழ் ஆரம்பமானது.

அவர் தலைமை வகித்துப் பேசியதாவது: இப் பாடசாலையில் 5000க்கு மேற்பட்டோர் கல்வி கற்றிருக்கின்றூர்கள். இவ்வளவு பெருமளவில் உள்ள எமது பழைய மாணவர்களாகிய நீங்கள் ஸ்தாபன ரீதியாக ஒன்று சேர்ந்து இயங்கும் சந்தர்ப்பம் இவ்வளவு காலமும் வாய்க்காவிட்டாலும் உங்களிற் பலர் எமக்கு வேண்டிய ஒத்தாசைகளையும் ஒத்துழைப்பையும் நல்லெண்ணத்தையும் தந்துள்ளீர்கள். எனவே இன்றைய கூட்டம் உங்களுக்கும் பாடசாலைக்கும் உள்ள உறவை ஸ்தாபன ரீதியாக வற்புறுத்துவதற்குமேயாகும்.

தலைமையுரையின் பின் நடப்பு வருட உத்தியோகத்தர் ஏகமனதாகத் தெரிவு தெரிவுசெய்யப்பட்டார்கள்.

தலைவர்: திரு. இ. பொ. குமாரசுவாமி, உபதலைவர்கள்: திரு. இ. துரைசிங்கம், திரு. க. அருளம்பலம் திரு. வ. கந்தசுவாமி, பொதுச் செயலாளர் திரு. ச. யோகராசா, இணைச் செயலாளர்: திரு. சு. பசுபதிப்பிள்ளை, பொருளாளர்: திரு. க. கனகலிங்கம், உதவிப் பொருளாளர்: திரு. செ. முத்துத்தம்பி, 13 பேர் கொண்ட செயற் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

---

### "காமகலா" தடைக்கு ஆட்சேபத் தீர்மானம்

ஒரு ஜனநாயக நாட்டிலே அங்கு வாழும் சிறுபான்மை மக்களது அடிப்படை உரிமைகளில் ஒன்ருகிய மதச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதே முறையாகும்.

ஆனல் இலங்கையைப் பொறுத்த வரையிலே இவையாவும் போலிவேஷம். இதற்கு எடுத்துக்காட்டாகவே, சமீபத்தில் பிரபல எழுத்தாளரால் வெளியிடப்பட்ட "காமகலா" என்னும் சைவ சமயச் சிற்பக்கலையை எடுத்துரைக்கும் ஓர் தூய்மையான நூலை எமது சுங்கப் பகுதி கலெக்டர் அவர்கள், ஓர் ஆபாசமான நூல் என்று குறிப்பிட்டு அதைத் தீயிலிட்டு கொளுத்தவும், தடை செய்யவும் உத்தரவிட்டுள்ளார்.

இவையாவற்றையும் நோக்குமிடத்து எதிர்காலத்தில் எம் நாட்டில் ஒரே இனம், ஒரே மொழி என்ற கோட்பாடு வளர்ந்து ஒரே மதம் என்றதில் ஏற்படுமோ என்று எண்ண வேண்டிய நிலையில் சிறுபான்மை மக்கள், குறிப்பாக இந்துத் தமிழர்கள் உள்ளார்கள்.

இதே நேரத்தில் ஒன்று மட்டும் கூறி வைக்கின்றோம். ஒரு சில அப்பாவி இந்துத் தமிழரை புத்த சமயத்தை தழுவச் செய்வதாலோ அன்றி ஒரு சில சமயதத்துவத்தை விளக்கும் நூல்களை தீயிலிடுவதாலோ, தடை செய்வதாலோ, ஆதியும், அந்தமும் இல்லா இந்து மதத்தை அழித்துவிட முடியாது.

ஆகையால் இந்நூலைத் தடை செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை சிறிது பரந்த கண்ணோட்டத்துடன் மீண்டும் புனராலோசனை செய்யுமாறு சுங்கப் பகுதியினரை எமது சங்கம் பணிவுடன் வேண்டுகின்றது.

இவ் விஷயத்தில், இந்து சமய புனருத்தாரண ஆலோசனைக் குழுவினர் கூடிய சிரத்தை எடுக்குமாறும் எமது சங்கம் அவர்களைப் பணிவுடன் வேண்டிக்கொள்கின்றது.

மேற்படி தீர்மானம் 18-11-62 நடைபெற்ற இருபாலை சைவ பரிபாலன சங்கத்தின் (கொழும்புக் கிளை) விசேஷ கூட்டத்தில் "கோவை மணி" யவர்களால் பிரேரிக்கப்பட்டு, இராசேந்திரம் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு சபையோரால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இத் தீர்மானத்தின் பிரதிகளை சுங்கப் பகுதி கலெக்டருக்கும், இந்து சமய புனருத்தாரண ஆலோசனைக் குழுவினர்க்கும் அனுப்புவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

---

### நாவலர் தினப் பேச்சுப் போட்டி

இருபாலை சைவபரிபாலன சங்கம் (கொழும்புக் கிளை) கோப்பாயில் 19-11-62 திங்கட்கிழமை அன்று நடாத்திய நாவலர் தினப் பேச்சுப் போட்டியில் பரிசில் பெற்றவர்களின் விபரம் பின்வருமாறு:

**கீழ்ப்பிரிவு**

முதலாவது இடம்: செல்வி ந. கருணுதேவி, இரண்டாவது இடம்: செல்வன். த. மால்மருகன். மூன்ருவது இடம்: செல்வன் பொ. சண்முகராசா.

**மத்தியபிரிவு**

முதலாவது இடம்: செல்வன் க. கெந்தீஸ்வரன், இரண்டாவது இடம்: செல்வன் க. கனகேஸ்வரன், மூன்ருவது இடம்: செல்வன் க. ரவீந்திரகுமாரன்.

**மேற்பிரிவு**

முதலாவது இடம்: செல்வி இ. திலகவதி, இரண்டாவது இடம்: செல்வன் தி. ஜெயகுமாரன், மூன்ருவது இடம், செல்வி க. பத்மாசனிதேவி.

# பாரதத்துக்குதவ படை திரளட்டும்

## தமிழரசுத் தீர்மானம்

ஆசியாக் கண்டத்தில் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக பாரத மக்கள் நடாத்தும் இப்பெரும் போராட்டத்திற்குஇலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் சார்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது பரிபூரண ஆதரவைப் பாரத அரசாங்கத்திற்கும், பாரத மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு கடந்த 18-11-62ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றஇலங்கைத் தமிழரசுக் கட்சி செயற்குழுக்கூட்டத்தில் ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் அத் தீர்மானம் கூறுவதாவது:

சர்வதேச ஒழுக்க நெறியையும், பஞ்சசீலத்தையும் விட்டு, சமாதான நாடான பாரதம் மீது கொம்யூனிஸ்டுச் சீனு, அநீதியான முறையில் நடாத்தும் ஆக்கிரமிப்பை இலங்கைத் தமிழரசுக்கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

இந்த அநீதியான ஆக்கிரமிப்பை எதிர்த்தும், பாரதத்தின் பழம் பெருமையையும், எல்லா உரிமையையும் நிலை நிறுத்துவதற்காகவும் பாரத மக்கள் நடத்தும் இப்போராட்டத்திற்கு இலங்கைத் தமிழரசுக்கட்சி தனது மனப்பூர்வமான முழு ஆதரவையும் கொடுக்க முடிவு செய்துள்ளது.

மேற் கூறும் தீர்மானத்தை பாரதப் பிரதமருக்கு கட்சிச் செயலாளர் அனுப்பி வைத்துள்ளார்.

ஏகாதிபத்தியவாதிகளான சீனுவின் ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்கும், ஜனநாயக பாரதம் நடாத்தும் போராட்டத்தை ஆதரிக்க முன்வரும் வண்ணம் இலங்கை அரசை, தமிழரசுக் கட்சி வேண்டியுள்ளது.

### வாலிபர்க்கு அழைப்பு

தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான மனித பலத்தை பாரதம் கொண்டிருக்கிறது என்பதை நாம் மறுக்க முடியாது. ஆனல் பாரதம் எந்தவொரு உயர்ந்த நோக்கைப் பாதுகாப்பதற்கு இப்போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறது என்பதை நாம் சிந்தித்து, மனித சுதந்திரத்திற்காக நடத்தப்படும் இப்போராட்டத்தில் நாமும் பங்கு கொள்ள வேண்டுமென்ற ஆசையினல் இந்த நாட்டிலுள்ள சகல தமிழ் பேசும் வாலிபர்களையும் இப்போராட்டத்தில் தொண்டர்களாகக் கலந்து கொள்ளமுன் வருமாறு வேண்டுகிறோம்.

### நிதி வசூல்

யாழ் நகர மண்டபத்தில் 18-12-62 அன்று பிற்பகல் நடந்த சீன ஆக்கிரமிப்புக் கண்டனக் கூட்டத்தில் சேர்ந்த நிதி, இலங்கையிலுள்ள பாரதத்தூதருக்கு, இலங்கை மக்களின் அனுதாபத்தின் ஓர் அறிகுறியாக ஏற்றுக் கொள்ளும்படி கூறி அனுப்பப்பட்டுள்ளது.

### நிதி கொடுத்தோர் விபரம்

டாக்டர் எஸ். சுப்பிரமணியம், யாழ்ப்பாணம் 1,000-00.

டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம், யாழ்ப்பாணம், 500-00.

திரு. சி. கதிரவேற்பிள்ளை யாழ்ப்பாணம் 101-00.

திரு. சு. நடராசா, மல்லாகம், 75-00.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கொழும்பு-3, 600-00.

கூட்டத்தில் சேர்ந்த நிதி, 182-00.

### தூதரின் பதில்

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சீன ஆக்கிரமிப்புக் கண்டனக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியினரால் திரட்டப்பட்ட நிதியை, இலங்கையிலுள்ள இந்திய தூதரிடம், திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஒப்படைத்திருந்தார்.

அதற்கு நன்றி தெரிவித்து இந்திய தூதர், திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

# கிருஸ்தவம் வளர சைவம் ஆற்றிய தொண்டு

"கிருஸ்தவம் இன்று எவ்வளவோ வளர்ந்து இருக்கிறது. இவ்வளர்ச்சிக்கு கிருஸ்தவப் புலவர்கள் ஆற்றிய தொண்டினை எம்மால் மறக்க முடியாது. இப் புலவர்கள் நூல்கள் மூலமாகவும் வளர்ச்சிக்குப் பணிபுரிந்தார்கள். பெஸ்கி என்ற இத்தாலியப் பாதிரியார் தமிழ் நாட்டுக்கு வந்து மதத்தை பரப்ப முயன்ற போது அவருக்குத் தமிழ் மொழியைக் கற்பித்தவர்கள் சைவப் புலவர்கள். அவர் எழுதிய தேன் கமழும் தேம்பாவணி என்ற நூலை சரிபார்த்து திருத்தியவர்களும் சைவப் புலவர்களே. இதே போன்று ஈழத்திலும் எத்தனையோ சைவப் புலவர்களும் கிருஸ்தவம் வளர உதவி நல்கி இருக்கின்றனர்."

இவ்வாறு சிலாபம் பெண்கள் தமிழ்ப் பாடசாலையில் நடைபெற்ற பெற்றோர் தின விழாவில் சொற்பொழிவாற்றிய வைத்தியப் பேராசிரியர் திரு. [illegible] கூறினர். வண. பிதா ரொபர்ட் பெர்ணுந்தோ கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

பேராசிரியர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:- "பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு மதக் கல்வியைத் தாய் மொழி மூலமே போதிக்க வேண்டும். அத்தோடு தாய் மொழிப் பற்றையும் ஊட்டவேண்டும். தமிழ் மொழி மிகச் சிறப்புப் பெற்ற மொழி. பல மொழிகளுக்குத் தாய் மொழியாகத் திகழ்கின்றது. உலக மொழிகளிலே மிகத் தொன்மை வாய்ந்த மொழி தமிழ். எனவே தமிழர்களாகிய நீங்கள் தமிழ்மொழியை வளர்க்க முன்வரவேண்டும். ஒவ்வொரு ஆண்டும் தமிழ்ப் பெரியார் ஒருவருக்கு விழா எடுங்கள். அதன் மூலம் தமிழுக்குச் சிறப்புத் தேடுங்கள்.

இன்னும் சிலரும் கூட்டத்தில் பேசினர். ஈற்றில் மாணவிகளின் நாட்டியங்கள் இடம் பெற்றன. வெற்றி பெற்ற மாணவிகளுக்குப் பரிசுகள் கொடுக்கப்பட்டன.

---

## மழலை தந்த...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

எம் இனத்தின் விடுதலை, மகிழ்ச்சி யாவும் அதிக தூரத்தில் இல்லை. மிக விரைவில்—மிக மிக விரைவில் அவை வந்து சேரும்!

வணக்கம்.
அன்புள்ள தம்பி,
மூர்த்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2-வது மாதம்!

## கிங்ஸ்லி

[கொழும்பு]

வெலிங்டன் [யாழ்ப்பாணம்] விஜயா [அம்பாரை]

மற்றும் 11 திரைகளில்



சிவாஜி கணேசன் ★ பி. சரோஜாதேவி
ஜெமினி கணேசன் ★ சாவித்திரி

மற்றும் பலர் நடித்த

# பார்த்தால் பசிதீரும்

---

## டிசம்பர் 6-ந் திகதி வியாழன் முதல்!

பிளாஸா (வெள்ளவத்தை) கெப்பிட்டல் (கொழும்பு) ராஜ் (நீர்கொழும்பு)
விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) ஸ்ரீ கிருஷ்ணு (திருகோணமலை)



கே. பாலாஜி—அஞ்சலிதேவி — பி. எஸ் வீரப்பா—தேவிகா
எம். என். நம்பியார் — சந்தியா

மற்றும் பலர் நடித்த

# நாக நந்தினி

---

## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

எல்பின்ஸ்டன் (மருதானை) ரெக்ஸி (வெள்ளவத்தை) வின்ஸர் (யாழ்ப்பாணம்)
வேல்ஸ் (கண்டி) கிங்ஸ் (பதுளை) நெல்சன் (திருகோணமலை)
இம்பீரியல் (மட்டக்களப்பு) இம்பீரியல் (இரத்தினபுரி) அசோகமாலா (நீர்கொழும்பு)



எஸ். எஸ். ராஜேந்திரன்—விஜயகுமாரி—அசோகன்
எம். ஆர். ராதா—வி. நாகையா—எஸ். வி. ரங்கராவ்
எஸ். ராமராவ்—புஷ்பலதா—எம். வி. ராஜம்மா
எஸ். வி. சகஸ்ரநாமம்—லட்சுமி ராஜம்

நடிக்கும்

# சாரதா

கதை வசனம்: கே. எஸ். கோபால கிருஷ்ணன் — பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்— சங்கீதம்: கே. வி. மகாதேவன்

5 மாதங்களுக்கு மேலாகச் சென்னையில் ஓடிய படம்!
இறுதி மூச்சு வரைக்கும் கணவன் மீது மனைவி காட்டும் பரிவு!
ஒவ்வொரு தம்பதிகளும் திரும்பத் திரும்ப பார்க்க வேண்டிய படம்!

---

## சென்ட்ரலில் காண்பிக்கப்படுகிறது!

தேவ் ஆனந்த் ● வாஹிதா ரஹ்மான்

நடிக்கும்

# ரூப் கி ராணி சோரொன் கா ராஜா

இசை : சங்கர்—ஜெய்கிஷன்

—வருகிறது—

ராஜேந்திர குமார் — நந்தா
மாலா சின்ஹா — மஹுத்

நடிக்கும்

# டூல் கா பூல்

---

## இப்பொழுது கொழும்பு மைலனில்

*பிரேம் நஸீர் *குமாரி *முத்தையா

மற்றும் பலர் நடிக்கும்



# அவன் யார்?

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 194ஏ, இலக்கத்தில் 1962-ம் வருடம் டிசம்பர் மாதம் 2-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org